## பொருளடக்கம்

| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | திருக்குர்ஆனிலிருந்து... | 2 |
| 3. | நபிமொழிகளிலிருந்து... | 3 |
| 4. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... | 4 |
| 5. | ஹுஸூர் அவர்கள் 2018-ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய நிறைவுரை | 5 |
| 6. | ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை என்ற நூலிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய ஒரு சம்பவம் | 15 |
| 7. | மனிதத்துவத்தை கண்ணியப்படுத்துதல் என்ற அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறை | 22 |
| 8. | தரூது ஓதுவதன் அருட்கள் மற்றும் அதன் ஆன்மீகப் பயன்கள் | 30 |

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதி மற்றும் உயர் அந்தஸ்து

**ரோமானிய நாட்டின் அரசரான கைஸரும் கூட, எனக்கு அவர்களை சந்திப்பதற்கான பாக்கியம் கிடைத்திருந்தால் நான் அவர்களது பாதங்களை கழுவக் கூடியவனாக இருந்திருப்பேனே! என்று விருப்பம் கொண்டிருந்தார்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் நபிமார்களில் சிறந்தவராகவும், நபிமார்களுக்கெல்லாம் தலைவராகவும் ஆக்கி அனுப்பினான். நபிமொழியில் வருகிறது: முஹம்மதே! நான் உம்மைப் படைத்திருக்கவில்லை என்றால் உலகத்தை படைத்திருக்க மாட்டேன். அல்லாஹ் திருக்குர்ஆனில், தனது அன்பைப் பெறுவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதை கட்டாயமாக்கியுள்ளான். மேலும் அல்லாஹ், அன்னாரிடம் பைஅத் செய்வதை தம்மிடம் பைஅத் செய்வதாக கூறுகின்றான். மேலும் அன்னார் நல்லொழுக்கத்தின் உயர் அந்தஸ்தில் இருப்பதாக சாட்சி பகர்கின்றான். மேலும் அன்னாரை ஆன்மீக உலகின் பிரகாசிக்கும் சூரியன் என்று கூறுகின்றான். மேலும் அன்னார் மனித இனத்தின் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றி கூறும்போது, அவர்கள் ஈமான் கொள்ளவில்லை என்றால் உமது நீர் உமது உயிரை மாய்த்துக் கொள்வீரா? என்று கூறுகின்றான்.

எந்த அளவுக்கு அன்னாரது உயர் தகுதி மற்றும் அந்தஸ்து உயர்வானதாக இருக்கின்றதோ அவ்வாறே எதிர்ப்பும் அன்னாருக்கு மிக அதிகமாகவே இருந்தது. அன்னார் அதிகமான ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளானார்கள். அன்னார் மீது அதிகான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. கோடிக்கணக்கான நூல்கள் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தூய தோற்றுனர் (ஸல்) மற்றும் திருக்குர்ஆனுக்கு எதிராக எழுதப்பட்டன. மூவாயிரத்திற்கும் அதிகமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதில் முன்னனியில் இருந்தவர்கள் பாதிரிமார்களே ஆவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பிரிட்டிஷ் இந்தியாவில் தற்போது இருக்கின்ற அதிகமான பாதிரிகள் எத்தகையவர்கள் என்றால் அவர்கள் நமது நபியும், நமது தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை ஏசிப் பேசி வருகின்றனர். அதிகமாக ஏசிப் பேசுபவர்களில் முதலாவது இடத்தைப் பெற்றிருப்பவர் அமிர்தசரைச் சேர்ந்த பாதிரி இமாதுத்தீன் ஆவார். அவர் தஹ்கீகுல் ஈமான் போன்ற தமது நூல்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வெளிப்படையாகவே ஏசிப் பேசியுள்ளார்.

(கிதாபுல் பரிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 13 பக்கம் 120)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் மீதும் பெருமனார் (ஸல்) அவர்கள் மீதும் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு பதில் மட்டும் அளிக்கவில்லை மாறாக, அன்னார் உண்மை நபி என்பதையும், கியாமத் வரை அன்னாரது ஆன்மீக அருள் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதையும் நிரூபித்துக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் ரோமானிய அரசராக இருந்த கைஸர்... கூறுகின்றார்: எனக்கு அந்த மகத்துவமிக்க நபியின் தோழமையில் இருப்பதற்கான பாக்கியம் எனக்கு கிடைக்குதிருக்குமென்றால் பிறகு நான் அவர்களது பாதங்களை கழுவக் கூடியவனாக இருப்பேன். ஆக கைஸர் கூறியவற்றையே இந்த அரசாங்கமும் நிச்சயமாக கூறியிருக்கும். மாறாக, இதை விட அதிகமாக அதாவது மஸீஹ் தொடர்பாக அந்த நேரத்தில் அரசாங்கத்தோடு தொடர்புடைய ஏதாவதொரு சிறியவன் கூட பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி கைஸர் கூறியதைப் போன்று அத்தகைய சொற்களை கூறியிருப்பதாக வரலாறு மற்றும் நபிமொழிகளில் கூறி இருப்பதாக நிரூபித்துக் காட்டினால் பிறகு நாம் ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்குவோம் என்றே கூறியிருக்கும். அவ்வாறு நிரூபித்துக் காட்ட இயலவில்லை என்றால் பிறகு இந்த இழிவான வாழ்க்கையை விட நீங்கள் மரணிப்பதே சிறந்ததாகும். ஏனென்றால் நாம் நிரூபித்துள்ளோம்... ரோமானிய நாட்டின்அரசரான கைஸர், என்னால் பெருமானார் (ஸல்) அவர்களை சென்றடைந்திருக்க முடியுமென்றால் பிறகு ஒரு சாதாரண பணியாளனாக இருந்து அன்னாரது பாதங்களை கழுவக் கூடியவனாக இருப்பேன் என்று அவர்கள் விரும்பியதாக எந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்று நீங்கள் கேட்டால் அதற்கான பதில் என்னவென்றால், சஹீஹ் புகாரியின் இந்த வாக்கியத்தை சற்று கண்களைத் திறந்து படியுங்கள்.

அது என்னவென்றால், وَقَدْ كُنْتُ اَعْلَمُ اَنَّهُ خَارِجٌ وَلَمْ اَكُنْ اَظُنُّ اَنَّهُ مِنْكُمْ فَلَوْ اَنِّي اَعْلَمُ اِنِّي اَخْلُصُ اِلَيْهِ لَتَجَشَّمْتُ لِقَاءَهُ وَلَوْ كُنْتُ عِنْدَهُ لَغَسَلْتُ عَنْ قَدَمَيْهِ அதாவது எனக்கு இறுதி காலத்தின் நபி வர இருக்கின்றார் என்பது எனக்குத் தெரியும்தான். எனினும் அவர் உங்களிலிருந்து (அரபிகளிலிருந்து) தோன்றுவார் என்று எனக்குத் தெரியாது. என்னால் அவர்களை சென்றடைய முடிந்திருக்குமென்றால் பிறகு நான் அவர்களை சந்திக்க வேண்டும்; மேலும் அவருக்கு தொண்டாற்ற வேண்டும்; மேலும் அவர்களது பாதங்களை கழுவக் கூடியவனாக இருந்திருப்பேன். உங்களுக்கு இப்போது வெட்கம் இருக்குமென்றால், மஸீஹிற்கு இத்தகைய கண்ணியத்தை ஏதாவதொரு அரசர் அந்த காலத்தில் கொடுத்ததாக எடுத்தக் வையுங்கள். மேலும் ஆயிரம் ரூபாய் ரொக்கத் தொகையை பெற்றுக் கொள்ளுங்கள். இன்ஜீலிலிருந்து மட்டும் எடுத்துக் காட்ட வேண்டும் என்பது அவசியமல்ல. மாறாக அசுத்தத்தில் மூழ்கியுள்ள எந்த பக்கங்களிலிருந்தாவது எடுத்துக் காட்டுங்கள். எந்தவொரு அரசர் இல்லையென்றாலும் பரவாயில்லை. ஒரு சிறியவரின் கூற்றையாவது எடுத்துக் காட்டுங்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். ஒருபோதும உங்களால் எடுத்துக்காட்ட முடியாது. (விரிவான விளக்கத்தை கிதாப் நூருல் ஃபுர்கான் எண் 2, ரூஹானி கஸாயின் தொகுதி 9ல் காண்க)

அல்லாஹ் இந்த மக்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் இறைவனது நபியை இழிவுபடுத்தி இவர்கள் தமது இம்மை மற்றும் மறுமையை வீணாக்குகின்றனர். (மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)

# முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்ற அனைத்து நபிமார்களை விடவும் உயர்வானதும், சிறப்பானதுமாகும் என்பதே இறுதி நபித்துவத்தின் பொருளாகும். பெருமானார் (ஸல்) அவர்களது சாட்சியம் இல்லாமலும், அன்னாரது போதனைகளின் சாட்சியம் இல்லாமலும் எந்தவொரு நபரும் நபித்துவத்தின் அந்தஸ்தை ஒருபோதும் பெற முடியாது

★ وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ۗ اَفَا۟ئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ ۗ وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ۗ وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ

பொருள்: முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய அனைத்துத் தூதர்களும் மரணமடைந்து விட்டார்கள். எனவே அவர் மரணமடைந்து விட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ, நீங்கள் உங்கள் குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவீர்களோ? தமது குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவோரால் ஒருபோதும் அல்லாஹ்விற்குச் சிறு இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ், நன்றி செலுத்துவோருக்கு நிச்சயமாக நற்பலன் வழங்குவான். (3:145)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக வலுவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் நபியாவார்கள். அவர்கள் ரஸூலே அன்றி வேறில்லை. மேலும் அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் எத்தனை நபிமார்கள் இருந்தார்களோ அவர்கள் அனைவரும் மரணமடைந்து விட்டார்கள். கலா என்ற சொல் அனைவருக்காகவும் பயன்படுத்தப்படும்போது அதன் பொருள், ஒரு பயணி கடந்து செல்வதைப் போன்று கடந்து செல்வது அல்ல.

மாறாக, சென்று விட்டார்கள் என்பதன் பொருள், மரணமடைந்து விடுவதாகும். ஆக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் நபியாவார்கள் என்றால் பிறகு நிச்சயமாக அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

★ مَا كَانَ مُحَمَّدٌ اَبَاۤ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ ۗ

பொருள்: முஹம்மது உங்களுள் எந்த ஆணுக்கும் தந்தை இல்லை. ஆனால் (அவர்) அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் கா(த்)தம் ஆகவும் விளங்குகின்றார். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாவான். (33:41)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

مَا كَانَ مُحَمَّدٌ اَبَاۤ اَحَدٍ என்ற வசனம் திருக்குர்ஆனில் உள்ளது. كَانَ என்ற சொல் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் சேர்த்து குறிப்பிட அரபியில் பயன்படுத்தப்படுகிறது. ஆக இதன் அடிப்படையில் இந்த வசனத்திற்குப் பொருள் செய்துள்ளோம். அதாவது, முஹம்மது (ஸல்) அவர்கள், எந்தவொரு ஆணுக்கும் தந்தையாக இருந்ததும் இல்லை; இருக்கவுமில்லை; இருக்கவும் மாட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகத் திகழ்க்கின்றார்கள் என்பது தொடர்பாக அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களது சாட்சியம் இல்லாமலும், அன்னாரது போதனைகளின் சாட்சியம் இல்லாமலும் எந்தவொரு நபரும் நபித்துவத்தின் அந்தஸ்தை ஒருபோதும் பெற முடியாது. மக்கள், நபிமார்களின் முத்திரை என்று பொருள் கொள்வதற்குப் பதிலாக இறுதி என்று பொருள் கொள்கின்றனர். அவ்வாறு எடுத்தாலும் நமது நிலைமையில் எவ்வித வேறுபாடும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் மிஃராஜ் பயணத்தைக் கருத்தில் கொள்வோம் என்றால் பிறகு நபிமார்களின் மேலானவர் தொடர்பாக முஸ்னது அஹ்மது பின் ஹம்பலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஸிதுரத்துல் முன்தஹா | முஹம்மது ரஸூலல்லாஹ் (ஸல்) |
| ஏழாவது வானம் | ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) |
| ஆறாவது வானம் | ஹஸ்ரத் மூஸா (அலை) |
| ஐந்தாவது வானம் | ஹஸ்ரத் ஹாரூன் (அலை) |
| நான்காவது வானம் | ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) |
| மூன்றாவது வானம் | ஹஸ்ரத் யூசுஃப் (அலை) |
| இரண்டாவது வானம் | ஹஸ்ரத் ஈஸா மற்றும் ஹஸ்ரத் யஹ்யா (அலை) |
| முதல் வானம் | ஹஸ்ரத் ஆதம் (அலை) பூமியிலுள்ளவர்கள் |

இந்த வரைபடத்தைப் பாருங்கள். இதில் மனித குலத்தைச் சார்ந்தவர்களின் பார்வையில் முதலில் தென்படுபவர் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் ஆவார்கள். மேலும் இறுதியாக அவர்களின் பார்வை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது படும். ஆக அனைத்து நபிமார்களை விட இறுதி நபி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே என்று அவர்கள் கூறுவர்.

இதுமட்டுமின்றி, ஆதம் படைக்கப்படுவதற்கு முன்பாகவே நான் காத்தமுன் நபிய்யீனாக இருக்கின்றேன் என்ற இந்த நபிமொழியை நாம் பார்ப்போமென்றால் பிறகு நபிமார்களின் தொடரில் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தஸ்தைப் பொறுத்தவரை மிகவும் உயர்வானவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெரிய வரும்.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தில் உயரே சென்றார்கள் என்றால் முஹம்மதின் அந்தஸ்து, தகுதி இறுதி நபித்துவத்தின் அந்தஸ்தைப் பெற்றது என்றே பொருள்படும். ஆக இவ்வாறும் நாம் கூறிய விளக்கமே சரியாக இருக்கிறது. அதாவது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்ற அனைத்து நபிமார்களை விடவும் உயர்வானதும், சிறப்பானதுமாகும் என்பதே இறுதி நபித்துவத்தின் பொருளாகும். (தஃப்ஸீரே கபீர் பக்கம் 695)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள்

★ اِنَّمَا الْاَعْمَالُ بِالنِّيَّاتِ، وَاِنَّمَا لِكُلِّ امْرِیٍٔ مَّا نَوٰی

பொருள்: அனைத்து செயல்களின் சாராம்சம் எண்ணத்தின் அடிப்படையிலேயே அமைகின்றது. மேலும் ஒரு மனிதருக்கு அவரது எண்ணத்திற்கேற்பவே கூலி வழங்கப்படும். (புகாரி)

★ اِنَّ اللهَ لَا یَنْظُرُ اِلٰی اَجْسَامِکُمْ وَلَا اِلٰی صُوَرِکُمْ وَلٰکِنْ یَنْظُرُ اِلٰی قُلُوْبِکُمْ ۔

பொருள்: அல்லாஹ் உங்களது உடலையோ, உங்களது அழகையோ பார்ப்பதில்லை; மாறாக, அவன் உங்களது உள்ளத்தைப் பார்க்கின்றான். (அதில் எவ்வளவு கலப்பற்றத் தன்மை மற்றும் நல்லெண்ணம இருக்கிறது என்றே பார்க்கின்றான்).

(முஸ்லிம், பாப் தஹ்ரீம் ஸுல்முல் முஸ்லிம்)

★ اِنَّ اللهَ کَتَبَ الْحَسَنَاتِ وَالسَّیِّاٰتِ ثُمَّ بَیَّنَ ذٰلِكَ: فَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ یَعْمَلْهَا کَتَبَهَا اللهُ تَبَارَكَ وَتَعَالٰی عِنْدَهٗ حَسَنَةً کَامِلَةً، وَاِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا کَتَبَهَا اللهُ عَزَّوَجَلَّ عِنْدَهٗ عَشْرَ حَسَنَاتٍ اِلٰی سَبْعِ مِائَةِ ضِعْفٍ اِلٰی اَضْعَافٍ کَثِیْرَةٍ، وَاِنْ هَمَّ بِسَیِّئَةٍ فَلَمْ یَعْمَلْهَا کَتَبَهَا اللهُ تَعَالٰی عِنْدَهٗ حَسَنَةً کَامِلَةً، وَاِنْ هَمَّ فَعَمِلَهَا کَتَبَهَا اللهُ سَیِّئَةً وَّاحِدَةً ۔

பொருள்: அல்லாஹ் நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டையும் எழுதி விட்டான். மேலும் ஒவ்வொருவருக்கும் தெளிவுபடுத்தி விட்டான். ஆக எவர் ஒருவர் நன்மைக்கான எண்ணம் கொண்டு அதனைச் செய்ய முடியாதவராக இருப்பாரேயானால் அவருக்கு முழுமையாக ஒரு நன்மைக்கான கூலி கிடைக்கும். மேலும் அவர் எண்ணம் கொண்ட பின் அந்த நன்மையைச் செய்வாரேயானால், அல்லாஹ் அவருக்கு எழுநூறு மடங்கு அல்லது அதற்கும் அதிகமான நன்மைகளை அவருக்குரிய பதிவேட்டில் எழுதுவான்.

மேலும் எவர் ஒருவர் தீமை செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டு பிறகு அந்தத் தீமையைச் செய்யாமல் இருப்பாரேயானால் அல்லாஹ் அவருக்கு ஒரு நன்மைக்கான கூலியை எழுதுவான். ஆனால் எவர் ஒருவர் தெரிந்து கொண்டே தீமை செய்வாரோ அல்லாஹ்விடத்தில் அவர் ஒரு தீமை செய்ததாக எழுதப்படும்.

(முஸ்லிம் கிதாபுல் ஈமான்)

★ مَنْ لَا یَشْکُرِ النَّاسَ لَا یَشْکُرِ اللهَ

பொருள்: எவர் ஒருவர் மக்களுக்கு நன்றி செலுத்த மாட்டாரோ அவர் அல்லாஹ்விற்கும் நன்றி செலுத்த மாட்டார். (திர்மிதி)

★ مَنْ سَرَّهٗ اَنْ یُحِبَّ اللهَ وَرَسُوْلَهٗ اَوْ یُحِبَّهُ اللهُ وَرَسُوْلُهٗ فَلْیَصْدُقْ حَدِیْثَهٗ اِذَا حَدَّثَ وَلْیُؤَدِّ اَمَانَتَهٗ اِذَا اؤْتُمِنَ وَلْیُحْسِنْ جِوَارَ مَنْ جَاوَرَهٗ ۔

பொருள்: நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரிடத்தில் உண்மையாகவே அன்பு வைத்துள்ளீர்கள் என்றால் மேலும் அவனது ரஸூலும் உங்கள் மீது அன்பு கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றீர்கள் என்றால் நீங்கள் இதனைச் செய்ய வேண்டும். அதாவது எப்போதும் உண்மையைப் பேச வேண்டும். உங்களிடம் ஏதாவது அமானிதம் வைக்கப்பட்டால் அதை ஏமாற்றக் கூடாது. மேலும் உங்களது அயல்வாசிகளிடம் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். (மிஷ்காத்)

★ اَفْضَلُ الذِّکْرِ: لَآ اِلٰهَ اِلَّا اللهُ وَاَفْضَلُ الدُّعَاءِ: اَلْحَمْدُ لِلّٰهِ

பொருள்: மிகச்சிறந்த ஸிக்ர் கலிமா தவ்ஹீது ஆகும். அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை என்று ஏற்றுக் கொள்வதாகும். மேலும் மிகச் சிறந்த துஆ அல்ஹம்துலில்லாஹ் (அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்) ஆகும். (திரிமிதி)

★ مَثَلُ الَّذِیْ یَذْکُرُ رَبَّهٗ وَالَّذِیْ لَا یَذْکُرُهٗ مَثَلُ الْحَیِّ وَالْمَیِّتِ ۔ وَرَوَاهُ مُسْلِمٌ فَقَالَ مَثَلُ الْبَیْتِ الَّذِیْ یُذْکَرُ اللهُ فِیْهِ وَالْبَیْتِ الَّذِیْ لَا یُذْکَرُ اللهُ فِیْهِ مَثَلُ الْحَیِّ وَالْمَیِّتِ ۔

பொருள்: இறைத் தியானம் செய்யக் கூடியவர் மற்றும் இறைத் தியானம் செய்யாதவரின் உதாரணம் உயிரோடு இருப்பவர் மற்றும் மரணித்தவர் போன்றதாகும். அதாவது எவர் இறை தியானம் செய்வாரோ அவர் உயிரோடு இருப்பவர் ஆவார். மேலும் எவர் செய்வதில்லையோ அவர் மரணித்தவரைப் போன்றவர் ஆவார்.

முஸ்லிமின் அறிவிப்பிபு இதுவாகும்: அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த வீட்டில் அல்லாஹ்வைப் பற்றி நினைவு கூரப்படுகிறதோ மேலும் எந்த வீட்டில் அல்லாஹ்வைப் பற்றி நினைவு கூரப்படுவதில்லையோ அதன் உதாரணம், உயிருடன் இருப்பவர் மற்றும் மரணித்தவரைப் போன்றதாகும். (புகாரி, கிதாபுத் தஃவாத்)

عَنْ اُمِّ هَانِیٍٔ رَضِیَ اللهُ عَنْهَا قَالَتْ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّی اللهُ عَلَیْهِ وَسَلَّمَ: یَا عَائِشَةُ لِیَکُنْ شِعَارُكِ الْعِلْمَ وَالْقُرْاٰنَ

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதனின் உள்ளத்தின் இயல்பில் இந்த விஷயம் இருக்கின்றது. தனக்கு நன்மை செய்பவரிடம் அது அன்பு கொள்கின்றது. தன்னுடன் தீய முறையில் நடந்து கொள்பவரை அது வெறுக்கின்றது.

(ஜாமிஉஸ்ஸகீர் தொகுதி 1 பக்கம் 120, பைஹகீ ஃபீ ஷுஃபில் ஈமான்)

**அனைவரது கண்ணியத்தையும் விட பெருமானார் (ஸல்) அவர்களது கண்ணியம் மிக உயர்வானதாகும். மேலும் அதன் தாக்கம் முழு இஸ்லாமிய உலகிலும் இருக்கின்றது. அல்லாஹ் நமக்கு எத்தகைய நபியைத் தந்துள்ளான் என்றால், அவர் காத்தமுல் முஃமினீனாகவும், காத்தமுல் ஆரிஃபீனாகவும், காத்தமுன் நபிய்யீனாகவும் இருக்கின்றார்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

## ஃபாரான் மலையில் ஒளி வீசக்கூடிய சூரியனின் வெளிப்பாடு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் காலகட்டத்தை இருள் நிறைந்ததாகவும், வழிகேட்டில் இருப்பதையும் கண்டான். மேலும் எல்லாப் புறத்திலிருந்தும் வழிகேடும், அநீதியும் உலகத்தை சூழ்ந்திருந்தது. அந்த நேரத்தில் இந்த இருளை அகற்றுவதற்காகவும், வழிகேட்டினை நேர்வழியில் மாற்றுவதற்காகவும் ஒரு ஒளி வீசக் கூடிய சூரியன் ஃபாரான் மலையிலிருந்து பிரகாசித்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 83 – 2003 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## அனைவரது கண்ணியத்தையும் விட பெருமானார் (ஸல்) அவர்களது கண்ணியம் மிக உயர்வானதாகும். மேலும் அதன் தாக்கம் முழு இஸ்லாமிய உலகிலும் இருக்கின்றது

அனைத்துக் கண்ணியத்தையும் விட பெருமானார் (ஸல்) அவர்களது கண்ணியம் மிக உயர்வானதாகும். மேலும் அதன் தாக்கம் முழு இஸ்லாமிய உலகிலும் இருக்கின்றது. அன்னார் (ஸல்) அவர்களது தன்மான உணர்வே மீண்டும் உலகத்திற்கு உயிரூட்டியது. அரபு நாட்டில் விபச்சாரம், மது மற்றும் போர் செய்வது ஆகியவற்றைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துதல் என்ற அம்சமே கொலை செய்யப்பட்டிருந்தது.

மனிதர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது மற்றும் நன்மையை நாடுவது ஆகியவற்றின் அடையாளமே அழிந்திருந்து. அடியார்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் மட்டும் அழிந்து விடவில்லை.

மாறாக, அல்லாஹ்விற்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் மீது அதனை விட அதிகமாக இருள் சூழ்ந்திருந்தது. அல்லாஹ்வின் பண்புகள் கற்களுக்கும், எலும்புகளுக்கும், நட்சத்திரங்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. பல்வேறு வகையான ஷிர்க் (இணை வைத்தல்) பரவி இருந்தது. சாதாரண மனிதர்களைள் மட்டுமல்லாமல் மனிதர்களின் வெட்க ஸ்தலங்களைக் கூட உலகத்தில் வணங்கி வந்தனர்.

நல்லியல்பு கொண்ட மனிதனுக்கு முன்னால் இத்தகைய அருவருக்கத்தக்க நிலையின் வரைபடம் சிறிது நேரத்திற்காக வந்தாலும் அவர் ஒரு அபாயகரமான இருள் மற்றும் அச்சமூட்டக்கூடிய ஒரு வரைபடத்தையே காண்பார். முழு உலகமும் குழப்பத்தில் மூழ்கியிருந்தது. கடலிலும் அமைதி இருக்கவில்லை. கரையிலும் அமைதி இருக்கவில்லை. இந்த இருள் மற்றும் வழிகேட்டின் காலத்தில் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்க்கின்றோம். பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்து முழுமையான முறையில் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் ஆகிய இரண்டு அம்சத்தையும் அதனதன் உண்மையான இடத்தில் நிலைநாட்டி காண்பித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான நல்லொழுக்கத்தின் தரத்தை அந்தக் காலத்தின் நிலைமைகளைப் பற்றி நாம் எண்ணிப் பார்த்தால் நம்மால் கணக்கிட முடியும். எதிரிகள் அன்னார் (ஸல்) அவர்களுக்கும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் எத்தகைய துன்பத்தைக் கொடுத்தார்களோ அதற்கு நேர்மாற்றமாக அன்னாருக்கு முழு அதிகாரம் கிடைத்த பிறகும் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைப் பார்க்கின்ற போது அன்னாரது கண்ணியம் வெளிப்படுகின்றது.

அபூஜஹில் மற்றும் அவனது நண்பர்கள் அன்னாருக்கும் அன்னாரைக் ஏற்றுக் கொண்டவர்களுக்கும் கொடுத்திராத துன்பங்கள் உண்டா? ஏழை முஸ்லிம் பெண்களை ஒட்டகத்தில் கட்டி எதிர்ப்பின் காரணமாக இரு வேறு திசைகளில் ஓடச் செய்தார்கள். இவ்வாறு அவர்கள் துண்டு துண்டாக்கப்பட்டார்கள்.

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ வை ஏன் ஏற்றுக் கொண்டார்கள் என்ற குற்றத்திற்காக மட்டுமே அவர்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் இதற்கு நேர்மாற்றமாகப் பொறுமையை மேற்கொண்டார்கள். பொறுத்துக் கொண்டார்கள்.

ஆனால் மக்கா வெற்றி கொள்ளப்பட்டபிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் لَا تَثْرِيْبَ عَلَيْكُمُ الْيَوْمَ (யூசுஃப்:93) என்று கூறி அனைவரையும் மன்னித்து விட்டார்கள். இது எவ்வளவு மிகச்சிறந்த நல்லொழுக்கத்தின் தரமாகும். இது வேறெந்த நபிமார்களிடமும் காணப்படவில்லை.

اَللّٰھُمَّ صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّعَلٰی اٰلِ مُحَمَّدٍ

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 484 – 2003 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

**நேர்மையை நேசிப்போம் நேர்மையின்மையை வெறுப்போம்**

**நாம் முழு நம்பிக்கையுடன் உறுதியாக இவ்வாறு கூற முடியும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தையும் பெருமையையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே நமக்கு வழங்கினார்கள்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக அன்னார் எழுதிய எண்ணற்ற மேற்கோள்களைக் காணும்போதும் அரபி, ஃபார்ஸி மற்றும் உருது மொழிகளில் அன்னாரின் புத்தகங்கள், மேற்கோள்கள் மற்றும் கவிதைகளை காணும் போதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள நேசம் மற்றும் அன்பின் தகுதியை யாரும் அடைய முடியாது என்பதை மிகவும் தெளிவாகக் காண முடிகிறது**

**அரபி எழுத்து வடிவிலுள்ள அன்னாரின் எழுத்துக்கள் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால் அதைப் படிக்கும் அரபியர்களும், "இப்படிப்பட்ட அன்பு மற்றும் நேசத்தில் மூழ்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து எழுதியதை இதுவரை நாங்கள் படித்ததும் இல்லை; பார்த்ததும் இல்லை" என்று கூறி தலை குனிந்தவாறு வியந்து போகின்றனர்**

**நாம் முஸ்லிம்களா? இல்லையா? என்பதற்கு எந்தவொரு அரசாங்கத்தின் சான்றிதழும், எந்தவொரு மார்க்கத்தின் ஆலிம்களின் சான்றிதழும், எந்தவொரு பெயர்தாங்கி மார்க்க ஆலிம்களின் சான்றிதழும் தேவை இல்லை. அத்துடன் ஏதாவதொரு படிவத்தில் எழுதுவதனால் நாங்கள் முஸ்லிம் அல்லது முஸ்லிம் அல்லாதவர்கள் என்று ஆகிவிடுவதில்லை**

**மாறாக, ஒருவனுடைய சான்றிதழ் மட்டும் எங்களுக்குப் போதுமானதாகும். அது அல்லாஹ்வின் விருப்பம் எனும் சான்றிதழாகும். அல்லாஹ்வின் விருப்பத்தை எப்போது நாம் பெற முடியும் என்றால், எப்போது அல்லாஹ் நமக்கு அந்தச் சான்றிதழை வழங்குவான் என்றால், நாம் உண்மையான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தாரின் உரிமையைச் செலுத்தாத வரையிலும் அன்னாரை முழுமையான முறையில் பின்பற்றாத வரையிலும் அந்தச் சான்றிதழைப் பெற முடியாது**

**இந்த வருடமும் தன்னுடைய முடிவை அடைந்துள்ளது. சில நாடுகளில் 24 மணி நேரமும், சில நாடுகளில் இரண்டு பகலும், இரண்டு இரவும் எஞ்சியுள்ளது. ஆக இந்தக் கடைசி நாட்களையும் தரூதைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய வருடத்தையும் தரூத் மற்றும் ஸலவாத்தைக் கொண்டு வரவேற்போம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் மிக விரைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புடைய அருள்களைப் பெறுபவர்களாக ஆகிவிடுவோம்**

**காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய எஜமானரும் பின்பற்றக் கூடியவருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசித்து அந்த நேசத்திலேயே மூழ்கியவாறு எழுதிய எழுத்துக்களின் பார்வையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம், அன்னாரின் உயர்ந்த அந்தஸ்து, உயர்ந்த கண்ணியம், முழுமை பெற்ற ஆன்மீகம் தொடர்பாக ஆதாரப்பூர்வமான மற்றும் பயன்தரக்கூடிய உள்ளத்தை ஈர்க்கக்கூடிய போதனைகள்**

**தரூது ஷரீஃப் ஓதும் பழக்கத்தின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுய அருள்களிலிருந்து பயன்பெறுவது தொடர்பாக வலியுறுத்தல்**

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டில் 30 டிசம்பர் 2018 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில்** M.T.A -வின் செயற்கைக்கோள் தொடர்புகள் மூலம் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் நேரலை மூலமாக ஆற்றிய நிறைவு சொற்பொழிவு

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று இந்த வருட காதியான் ஆண்டு மாநாட்டின் இறுதி நாளாக இருக்கின்றது. மேலும் இறுதி அமர்வாகவும் இது இருக்கிறது. இன்று இந்நேரம் பல நாடுகளிலிருந்து வருகை தந்திருக்கின்ற 18,19 ஆயிரம் அஹ்மதிகள் இந்த ஊரில் ஒன்றுகூடி உள்ளீர்கள். மேலும் காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஊரில் ஒன்றுகூடி உள்ளீர்கள். அந்த வாக்களிக்கப்பட்ட மஹீஹ் யார் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட மேலும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக அனுப்பப்பட்டவராவார். எவ்வாறு இஸ்லாத்தின் அழகிய போதனையைக் கொண்டு ஓர் அடியானை

இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்கான வழிகளைக் கூறினார்களோ மேலும் திருக்குர்ஆனின் அழகிய போதனையை உலகில் வெளிப்படுத்தினார்களோ அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கம்பீரம் மற்றும் மகத்துவமிக்க அந்தஸ்து தொடர்பாக உலகிற்கு எடுத்துக் கூறினார்கள். அதைக் கூறியதுடன் மட்டுமல்லாமல் நல்லியல்பு கொண்ட மக்கள் மற்றும் இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுத்து அதன் மூலம் பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ள முஸ்லிம்களின் ஈமானையும் வலுப்படுத்தினார்கள்.

இஸ்லாத்தின் ஒவ்வொரு எதிரி மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபணை செய்தவர்களின் வாயை அடைத்தார்கள். அன்னார் கொடுத்த ஆதாரம் மற்றும் அத்தாட்சிகளைப் பார்த்து இஸ்லாத்தின் எதிரிகளுக்கு வெருண்டோடுவதைத் தவிர வேறு வழி இல்லாமல் போயிற்று. அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள அன்பின் அந்தஸ்து எந்த அளவு உயர்வானது என்றால் அந்த உயர்வான நிலையை இதுவரை யாரும் அடைந்ததும் கிடையாது. இனி யாரும் அடையவும் முடியாது. அந்த அன்பின் காரணமாகத்தான் அல்லாஹ் தன் அருள்மறையில் கூறுகிறான் என்று கூறியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

ஓர் இரவில் இந்த எளியவன் எந்த அளவு அதிகமாக தரூது ஓதினேன் என்றால், உள்ளமும் உயிரும் அதனால் நறுமணம் பெற்றது. அதே இரவில் நான் கனவில் பார்த்தேன். ஒளிமயமான தண்ணீரின் வடிவில் உள்ள ஒளியின் குவளைகளை இந்த எளியவனின் வீட்டில் சிலர் கொண்டு வருகின்றனர். அவர்களுள் ஒருவர், இது நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது ஓதிய அதே (ஸலவாத்தின்) அருள்களாகும் என்று கூறினார்.

அவ்வாறே வியக்கத்தக் இன்னொரு சம்பவம் எனக்கு நினைவிற்கு வருகின்றது. அதாவது ஒரு முறை இல்ஹாம் இறங்கியது. அதன் பொருள் இதுவாகும். மலக்குகள் மிகவும் ஆவேசத்துடன் காணப்படுகிறார்கள். அல்லாஹ்வின் எண்ணம் எழுச்சி பெறுகிறது. அல்லாஹ் தனது மார்க்கத்திற்கு உயிரூட்ட விரும்புகிறான்.

எனவே அல்லாஹ் இந்த ஆர்வத்தில் உள்ளான். மலக்குகளுக்கு மார்க்கத்தை உயிர்ப்பிப்பவர் யாரென்று கூறப்படாததால் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். அதாவது யார் மூலமாக மார்க்கம் உயிர்ப்பிக்கப்படப் போகிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அப்போது நான் கனவில் கண்டேன். மக்கள் மார்க்கத்திற்கு உயிரூட்டுபவரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஒருவர் இந்த எளியவனை அடையாளம் காட்டியவாறு முன்வந்து இவ்வாறு கூறினார்:

هٰذَا رَجُلٌ يُحِبُّ رَسُوْلَ اللهِ- அதாவது இவர்தான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கின்ற மனிதர் ஆவார் என்று கூறினார்.

இந்த இல்ஹாமின் பொருள் என்னவென்றால், இந்தப் பணிக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிப்பதுதான் தலையாய நிபந்தனையாகும். அது இந்த நபரிடம் காணப்படுகிறது.

(ரூஹானி கஸாயின், பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 598, அடிக்குறிப்பிற்குக் கீழுள்ள அடிக்குறிப்பு எண் 3)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகத்தான் அல்லாஹ் எனக்கு இந்தத் தகுதியை வழங்கியுள்ளான்.

ஆனால் ஆலிம்கள்; பெயர்தாங்கி ஆலிம்கள் என்றே கூற வேண்டும். அவர்கள் தம் கடின உள்ளம், அறிவிலித்தனம் மற்றும் வெறுப்பின் காரணமாக அன்னார் மீது ஆட்சேபணை செய்கிறார்கள். மாறாக, தற்போது வரை இவ்வாறு ஆட்சேபனை செய்து கொண்டே இருக்கிறார்கள். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தைக் குறைக்கக் கூடியவராக இருக்கிறார். எனவே இவர் காஃபிராவார். மேலும் அனனாரைப் பின்பற்றுபவரும் காஃபிராவார்கள் என்று கூறுகிறார்கள். நவூதுபில்லாஹ்.

ஆனால் இதற்கு நேர்மாற்றமாக நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக அன்னார் எழுதிய எண்ணற்ற மேற்கோள்களைக் காணும்போதும், அரபி, ஃபாரிஸி மற்றும் உருது மொழிகளில் அன்னாரின் புத்தகங்கள், மேற்கோள்கள் மற்றும் கவிதைகளைக் காணும்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது கொண்டிருந்த நேசம் மற்றும் அன்பின் தகுதியை யாரும் அடைய முடியாது என்பதை மிகவும் தெளிவாகக் காண முடிகிறது.

அன்னாரின் ஒவ்வொரு வார்த்தையும் அன்னார் தன்னை அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் மாய்த்துக் கொண்டார்கள் என்பதற்குச் சாட்சி பகர்கின்றது. இவ்விஷயம் நல்லியல்புடைய ஆலிம்கள் மற்றும் சாதாரண முஸ்லிம்களின் மீது வெளிப்படும்போது அன்னாரின் பைஅத்தில் வந்து விடுகிறார்கள். மேலும் அன்னாரின் அடிமைத்தனத்தில் வந்து விடுகிறார்கள். இவ்வாறாக உண்மையான முறையில் ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்தில் வந்து விடுகிறார்கள்.

அன்னார் ஒரு ஃபார்ஸி கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

"بعد از خدا بعشق محمدؐ مخمرم — گر کفر ایں بود بخدا سخت کافرم"

அதாவது நான் அல்லாஹ்விற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் மூழ்கியுள்ளேன். எனவே, அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது இவ்வாறு நேசம் கொள்வது குஃப்ர் (நிராகரிப்பு) என்றால் இறைவன் மீது ஆணையாக! நானே முதல் காஃபிர் ஆவேன்.

(இஸாலா அவ்ஹாம் தொகுதி 1 ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 185)

அரபி எழுத்து வடிவிலுள்ள அன்னாரது கஸீதாக்கள் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால் அதைப் படிக்கும் அரபியல்லாதோரும் இப்படிப்பட்ட அன்பு மற்றும் நேசத்தில் மூழ்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து எழுதியதை இதுவரை நாங்கள் படித்ததும் கிடையாது. பார்த்தும் கிடையாது என்று கூறித் தலை குனிந்தவாறு வியப்படைகின்றனர்.

அல்லாஹ் உலகிலுள்ள முஸ்லிம்களை இந்த ரஸூலின் நேசரை அடையாளங்கண்டு கொள்ள வைப்பானாக. முஸ்லிம்கள் சூழ்நிலை மற்றும் ஆலிம்களின் அச்சுறுத்தல்களின் காரணமாக அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்ட இந்த ரஸூலின் நேசரை அவர்கள் நிராகரிக்காமல் இருக்கட்டுமாக. அதன் காரணமாக இறைக்கோபத்திற்கு ஆளாகாமல் அல்லாஹ் அவர்களைத் தடுப்பானாக.

தீய ஆலிம்கள் தொடர்பாக எனக்கு ஒரு நகைச்சுவை நினைவுக்கு வருகிறது. கடந்த நாட்களில் சமூக வலைதளங்களில் ஒரு மவ்லவி அஹ்மதிகளுக்கு எதிராக காஃபிர் என ஃபத்வா

பிறப்பித்துக் கொண்டிருந்தார். அப்போது அறியாமையின் காரணத்தினாலோ அல்லது பேசுகின்ற தோரணையிலோ அவர் இவ்வாறு பலமுறை கூறி விட்டார். அதாவது, தீய ஆலிம்களில் ஒருவராகக் கருதப்பட்ட நம்முடைய அந்த பெரிய மவ்லவியும் அஹ்மதிகள் காஃபிர்கள் என ஃபத்வா கொடுத்துள்ளார். எவ்வாறு இருப்பினும் அவருக்கு நம்முடைய நன்றி.

இந்த ஃபத்வா தீய ஆலிம்களிடமிருந்து தான் வந்துள்ளது என நாம் முன்னரே கூறிக் கொண்டிருந்தோம். எந்த ஒரு உண்மையான ஆலிமும் இவ்வாறு ஃபத்வா கொடுக்க மாட்டார். எவ்வாறு இருப்பினும் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவருக்கு எதிராக ஃபத்வா கொடுத்து தங்களைத் தீய ஆலிம்களின் பட்டியலில் இணைத்துக் கொண்டார்.

தற்போது நான் இந்த ரஸூலின் பேரன்பர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு நேசம் தொடர்பாக அன்னார் கூறியுள்ளவற்றையும், மேலும் அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து மற்றும் கண்ணியம் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளவற்றிலிருந்தும் சில மேற்கோள்களைத் தற்போது எடுத்து வைக்கின்றேன். அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அஹ்மதிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் காஃபிர் என்று கூறுபவர்களின் முகத்தில் அறைந்தது போல் இருக்கும்.

அனைத்து நபிமார்களிலும் சிறந்தவர் மற்றும் உலகின் மாபெரும் வழிகாட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டும்தான் என்பதை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மை என்னவென்றால், எவர் மூலமாக எல்லா குழப்பமும் நீங்கி உலகம் சீர்திருத்தம் பெற்றதோ, மேலும் எவர் மூலமாக உலகிலிருந்து மறைந்து போன மற்றும் அழிந்துபோன ஏகத்துவம் மீண்டும் நிலைபெற்றதோ அவரே அனைத்து நபிமார்களையும் விட சிறந்த நபி மற்றும் உலகின் மிகப்பெரிய வழிகாட்டி ஆவார். எந்த ஏகத்துவம் உலகிலிருந்து முற்றிலுமாக அழிந்து அதன் பெயரும் அடையாளமும் உலகில் இல்லாமல் போய் மறைந்து இருந்ததோ அந்த ஏகத்துவத்தை மீண்டும் நிலை நிறுத்தியவர் அவரே. அந்த மாபெரும் வழிகாட்டியால் மீண்டும் நிலைநாட்டப்பட்ட அந்த ஏகத்துவமானது உலகின் அனைத்துப் பொய்யான மார்க்கங்களையும் ஆதாரம் மற்றும் அத்தாட்சிகளைக் கொண்டு தோல்வியடையச் செய்தது.

மேலும் அந்த ஏகத்துவமானது எல்லாவிதமான வழிகேடான சந்தேகங்களையும் அழித்து ஒவ்வொரு இறை நிராகரிப்பாளரின் குழப்பங்களிலிருந்தும் தீர்வு தந்தது. அத்துடன் ஈடேற்றத்தின் உண்மையான வழிமுறைகளையும் அதைப் பெறுவதற்கான போதனைகளையும் அவரே நமக்குப் பெற்றுத் தந்தார்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதன் அடிப்படையில் அந்த ஏகத்துவத்தின் பயன் மற்றும் பலன் எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கிறது. அதனுடைய அந்தஸ்தும் படித்தரமும் எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கிறது. தற்போது வரலாறு கூறுகிறது. விண்ணின் வேதமும் சாட்சி பகர்கின்றது. எவர்களுக்கு கண்கள் உள்ளனவோ அவர்கள் அந்த ஏகத்துவத்தின் மகத்துவத்தைக் காண்கிறார்கள்.

ஆகவே தொலைந்து போன ஏகத்துவத்தை மீண்டும் நிலைபெறச் செய்த அந்த நபி இந்த வழிமுறைகளின்படி அனைத்து நபிமார்களையும் விட மிகச் சிறந்தவராகத் திகழ்கிறார்கள். அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 2, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 97 அடிக்குறிப்பு எண் 6)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் அன்னாரின் சிறப்புகள் தொடர்பான சான்றைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட காலத்தில் தோன்றினார்கள் என்றால் அப்போது முழு உலகிலும் ஷிர்க் என்னும் இணைவைத்தல், வழிகேடு, படைப்பினங்களை வணங்குதல் ஆகியவை பரவலாகக் காணப்பட்டது. அனைத்து மக்களும் சத்தியத்திலிருந்து விலகி விட்டனர். நேரான வழியை மறந்து விட்டு ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றத் தொடங்கியிருந்தனர்.

அரபு நாட்டில் சிலை வணக்கம் மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது. ஃபாரசீக நாட்டில் நெருப்பை வணங்குபவர்களின் நிலை மிக உச்சத்தை அடைந்திருந்தது. இந்துக்கள் சிலைகளை வணங்குவதோடு நின்று விடாமல் நூற்றுக்கணக்கான படைப்பினங்களை வணங்கும் வழக்கம் அவர்களிடத்தில் அதிகரித்துக் கொண்டே சென்றது. அந்நாட்களில்தான் வேதங்களில் முன்னறிவிப்புச் செய்திருந்தபடி இறையடியார்களும், இறை அவதாரங்களும் கடவுள்களாக ஆக்கப்பட்டனர். அதனடிப்படையில் இருபதுக்கும் மேற்பட்ட இறையடியார்கள் கடவுள்களாக ஆக்கப்பட்டனர். அத்துடன் அவதாரங்களை வணங்குவதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

ஜான் டவன்போட் (John Davenport) அவர்களின் கூற்றுப்படி நன்கு படித்த ஆங்கிலேயர்களின் மார்க்கமான கிறிஸ்தவ மார்க்கத்தை விட மிக சீர்கேடான மார்க்கம் அந்நாட்களில் இருந்ததில்லை. மேலும் பாதிரிகளின் தீய நடத்தை மற்றும் தீய கொள்கைகளினால் கிறிஸ்தவ மார்க்கத்தின் மீது ஒரு மிகப்பெரிய களங்கம் ஏற்பட்டிருந்தது. கிறிஸ்தவ கொள்கையில் ஒன்றல்ல; இரண்டல்ல; பல தவறான விஷயங்கள் இறைவனின் அரியணையைப் பெற்று விட்டது. அப்படிப்பட்ட வழிகேடுகளின் மூலமாக சமுதாயம் சீர்கெட்டு கொண்டிருந்த சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

மேலும் அவர்கள் தோன்றுவது அந்தக் காலத்தில் தேவையாகவும் இருந்தது. ஏனெனில் உலகை நல்வழிப்படுத்த ஓர் ஆன்மீக மருத்துவர் மற்றும் சீர்திருத்தவாதியின் தேவை அந்த நேரத்தில் இருந்தது. ஆகவே இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களை அனுப்பியதன் மூலமாக உலகில் மீண்டும் ஏகத்துவத்தை நிலைநாட்டினான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் நற்செயல்களின் மூலமாக உலகம் மீண்டும் ஆன்மீக ஒளியைப் பெற்றது. அத்துடன் தீமைகளுக்கெல்லாம் கருவாக விளங்குகின்ற இணைவைத்தல் மற்றும் படைப்பினங்களை வணங்குதல் போன்றவையும் முற்றிலும் இல்லாதொழிந்தது. இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையான இறைவனின் தூதர் என்பதற்கும் அனைத்து தூதர்களை விடவும் சிறந்த தூதர் என்பதற்கும் மிகத் தெளிவான சான்றாக அமைகின்றது.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 2, ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 112,113 அடிக்குறிப்பு எண் 10)

பாதிரிகள் சுயமே ஒன்றை ஒப்புக் கொள்கிறார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் இணைவைத்தல் அதிகமாகப் பரவியிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபுறம் ஏகத்துவம் மற்றும் நற்செயல்களை நிலைநாட்டினார்கள். மறுபுறம், எல்லாவிதமான தீமைகளுக்கும் கருவாக விளங்குகின்ற படைப்பினங்களை

வணங்குதல் மற்றும் இணைவைத்தல் போன்றவற்றை அழித்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் எல்லாரையும் விட அதிகமாக அல்லாஹ்வின் ஒளியை பெறக் கூடியவர்களாக விளங்கினார்கள். மேலும் அல்லாஹ்வின் ஒளியைப் பெறுவதில் அனைத்து நபிமார்களையும் விடவும் முழுமை பெற்றவராகவும் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னகத்தே பெற்றிருந்த வெளிப்படையான உள்ளம், திறந்த மனப்பான்மை, களங்கமில்லாத நிலை, ஞானம், உண்மை, நம்பிக்கை பற்று மற்றும் இறைநேசம் போன்ற விஷயங்களில் எல்லா நபிமார்களை விடவும் சிறந்தவராகவும், உயர்வானவராகவும், முழுமை பெற்றவராகவும், மேன்மைமிக்கவராகவும், தூய்மையானவராகவும், ஒளிமிக்கவராகவும் திகழ்ந்தார்கள்.

எனவேதான் அல்லாஹ் அனைத்து விதமான நற்பண்புகளின் சாராம்சத்தையும் அன்னாருக்கு வழங்கினான். மேலும் அதன் நறுமணத்தையும் அன்னாரிடத்தில் வெளிப்படச் செய்தான். பூமியில் வாழும் மக்கள் முன்னவர்கள் பின்னவர்கள் போன்ற அனைத்து மனிதர்களின் இதயம் மற்றும் உள்ளத்தை விடப் பரந்த, தூய்மையான, குற்றமற்ற ஒளி நிறைந்த மற்றும் நேசம் நிறைந்த உள்ளத்தையும் இதயத்தையும் உடையவராகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் திகழ்ந்தார்கள்.

மேலும் அந்த உள்ளம் எத்தகு தகுதியைப் பெற்றிருந்தது என்றால், அன்னார் தோன்றிய காலத்தின் அனைத்து முன்னவர்களும் பின்னவர்களும் பெற்ற இறைவஹீயை விட உறுதிவாய்ந்த, முழுமை பெற்ற, உயர்வான மற்றும் நிறைவான இறைப் பண்புகளைப் பிரதிபலிப்பதற்கென ஒரு தூய, படர்ந்த, விரிவான கண்ணாடியின் தேவை இருந்தது. அதில் உயர்ந்த அந்தஸ்தை பெற்ற முழுமையான மற்றும் நிறைவானதாக இருந்த இறைவஹீ இறங்கியது. அதன் மூலம் தூய்மையான இறைப் பண்புகள் வெளிப்பட வேண்டும் என்பதே அல்லாஹ்வின் நோக்கமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய வஹீயானது இறைப் பண்புகளை வெளிப்படுத்துவதற்கென இருந்த கண்ணாடியின் மீது பிரதிபிம்பமாக வெளிப்பட்டு உலகம் முழுவதிலும் பரவியது. எனவேதான் திருக்குர்ஆன் உயர்வான அற்புதங்களைக் கொண்டதாக உள்ளது. அதன் ஒளிமயமான மற்றும் ஆழமான கதிர்களின் முன்னால் அனைத்து முந்தைய வேதங்களின் ஒளி ஒன்றுமற்றதாக ஆகிவிட்டது. அதில் கூறப்பட்டுள்ள உண்மைத்துவத்தையும், அறிவு சார்ந்த சான்றுகளையும் வேறு எந்த ஏடுகளாலும் எடுத்து வைக்க முடியாது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இந்தத் திருக்குர்ஆனில் எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன. திருக்குர்ஆன் எந்த அளவிற்கு லட்சக்கணக்கான உள்ளங்களில் இறையருளின் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றால் அத்தகு பலன்தரக்கூடிய தாக்கத்தை எந்தவொரு சொற்பொழிவும் எவருடைய உள்ளத்திலும் ஏற்படுத்த முடியாது. தூய்மையான உள்ளத்துடன் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்பவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி ''திருக்குர்ஆன் என்பது முழுமை பெற்ற இறைப் பண்புகளை பிரதிபலிக்கக்கூடிய ஒரு கண்ணாடியாகும்'' என்பதை புரிந்து கொள்வர். மேலும் ''இறைநேசர் ஆன்மீகத்தில் படிப்படியாக உயர்ந்து இறைஞானத்தைப் பெறுவதற்கான வழியும் திருக்குர்ஆனில் காணப்படுகிறது'' என்பதையும் அவர்கள் புரிந்து கொள்வர்.

(சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 71,72 அடிக்குறிப்பு)

ஆக, இதுதான் அன்னார் (அலை) அவர்கள் கூறவரும் கருத்தின் மையப்புள்ளியாகும். அன்னாரின் போதனைகள் எதுவும் திருக்குர்ஆனுக்கு அப்பாற்றபட்டதாக இருந்ததில்லை. அப்படியிருக்கையில், அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும், திருக்குர்ஆனின் கண்ணியத்தையும் குறைக்கும் வகையில் போதித்தார்கள் என அன்னாரின் எதிரிகள் எவ்வாறு ஆட்சேபணை செய்கிறார்கள் என்பது புரியவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆற்றல் மிக்க தூய்மைப்படுத்தக்கூடிய ஆற்றலானதுதான் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களின் ஆன்மீக முன்னேற்றத்தை உயர்தகுதி அடையச் செய்தது என்பது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாடு அதாவது அவர்கள் பிறந்த இடம் ஒரு சிறிய தீவாக இருந்தது. அதைத்தான் அரேபிய நாடு என்று கூறுகிறோம். பிற நாடுகளிலிருந்து துண்டித்தவாறு எப்போதும் தனிமையிலேயே இருந்து வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்னால் அந்நாட்டின் நிலை எவ்வாறு இருந்தது என்றால் மக்கள் மிருகத்தனமான மற்றும் மூர்க்கத்தனமான வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

மார்க்கம் ஈமான் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய கடமை மற்றும் படைப்பினங்களுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளிலிருந்தும் முற்றிலும் கவனமற்றவர்களாக இருப்பது, சிலை வணக்கம் மற்றும் பிற தூய்மையற்ற எண்ணங்களில் மூழ்கி இருப்பது, சுகபோகங்கள் தீய நடத்தை, குடி, போதை, சூதாட்டம் போன்ற தீய வழிகளில் வரம்பு மீறுதல், திருட்டு, கொலை, கொள்ளை, பெண் சிசுக் கொலை அதாவது பெண் குழந்தைகள் மற்றும் பெண்களைக் கொலை செய்தல், அனாதைகளின் செல்வங்களை விழுங்குதல், ஆதரவற்றோரின் உரிமைகளைப் பறித்தல் ஆகியவற்றைப் பாவம் என்று எண்ணாமல் இருப்பது, ஆக இந்த அனைத்து விதமான தீய பழக்கங்கள், இருள், அறியாமை போன்றவை பொதுவாக அனைத்து அரபு மக்களின் உள்ளங்களில் பரவிவிடுதல் ஆகிய விஷயங்கள் எப்படிப்பட்டவை என்றால் கொடிய விரோதியும் அதை ஆமோதிப்பார்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அந்த அறிவற்ற நாகரீகம் இல்லாத மிருகத்தனமான ஏழ்மையான மக்கள் இஸ்லாத்தில் நுழைந்து திருக்குர்ஆனை ஏற்றுக் கொண்ட பிறகு எவ்வாறு மாறி விட்டார்கள் என்றால் அந்த மாற்றம் இறைவேதத்தின் விளைவு மற்றும் மாசற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையானது ஒரே நொடியில் சிறிது காலத்திலேயே அவர்கள் உள்ளத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அவர்கள் அறியாமையிலிருந்து விலகி இறை தியானத்தில் நிறைந்து காணப்பட்டார்கள். உலகத்தில் இருந்து விலகி இறைவனின் நேசத்தில் எவ்வாறு மூழ்கி விட்டார்கள் என்றால் தன்னுடைய நாடு, செல்வம், அன்பர்கள், கௌரவம், உயிர், இன்பங்கள் ஆகிய இவை அனைத்தையும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக விட்டு விட்டார்கள்.

ஆக இந்த இரண்டு நிலைமையைப் பற்றியும் அதாவது பழைய நிலை மற்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கிடைத்த

இந்த புதிய வாழ்வு தொடர்பாக திருக்குர்ஆனில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதை ஒரு நேர்மையான நல்லுள்ளம் கொண்ட மனிதன் படிக்கும்போது தன்னையும் அறியாமல் அவரின் கண்கள் கண்ணீரால் நிறைந்து விடும். எந்த விஷயம் அவர்களை இவ்வளவு வேகமாக ஓர் உலகத்திலிருந்து மற்றோர் உலகத்திற்கு இழுத்துச் சென்றது. அது இரண்டே விஷயம்தான்.

ஒன்று, அந்த மாசற்ற நபி (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தக்கூடிய ஆற்றலில் மிகவும் சக்தி வாய்ந்த தாக்கம் இருந்தது. எந்த அளவுக்கு என்றால் இதற்கு முன்னர் அவ்வாறு நடந்ததுமில்லை. இனி அவ்வாறு நடக்கப் போவதுமில்லை. இரண்டாவது விஷயம், எல்லாவற்றிலும் ஆற்றல் பெற்ற தானும் உயிருடன் இருந்து மற்ற எல்லாப் பொருள்களையும் உயிருடன் நிலைபெறச் செய்கின்ற எல்லாம் வல்ல இறைவனின் தூய வேதத்தின் வியக்கத்தகு தாக்கம் தான் அதிக எண்ணிக்கையைக் கொண்ட ஒரு சாராரை ஆயிரக்கணக்கான இருளில் இருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு வந்தது. திருக்குர்ஆன் ஏற்படுத்திய விளைவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அசாதாரணமான ஒன்றாகும். ஏனென்றால் எந்தவொரு வேதமும் இத்தகு விளைவை ஏற்படுத்தியதாக உலகில் யாரும் உதாரணத்தை எடுத்து வைக்க முடியாது. திருக்குர்ஆன் செய்த வியக்கத்தகு மாற்றத்தையும் சீர்திருத்தத்தையும் மற்ற வேதம் செய்தது என எவர் அதை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்?

(சுர்மா செஷ்மா ஆரியா, ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 76–78 அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒளி வேறு யாருக்கும் வழங்கப்படவில்லை என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மனிதனுக்கு அருளப்பெற்ற அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, விண்மீன்களிலோ, சந்திரனிலோ இருந்ததில்லை. மேலும் பூமியில் உள்ள கடல், ஆறுகளிலும் இருந்ததில்லை. அந்த ஒளி மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றிலும் இருந்ததில்லை. பூமி வானம் ஆகிய எந்தப் பொருளிலும் அந்த ஒளி இருந்ததில்லை. அந்த ஒளியானது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம் அதன் முழுமை, நிறைவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களின் உயர்ந்தவரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள்.

எனவே அவ்வொளி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் அவரின் குண இயல்புகளை சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கு ஏற்ப கொடுக்கப்பட்டது. மேலும் இச்சிறப்பு முழுமையாகவும், நிறைவாகவும், உயர்வாகவும், நம் தலைவரும், நம் அன்பிற்குரியவரும், நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும் உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் இருந்தது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ لَا شَرِيْكَ لَهٗ وَ
بِذٰلِكَ اُمِرْتُ وَ اَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ۔

நீர் அவர்களிடம் கூறுவீராக. என் தொழுகையும், என் தியாகமும், என் மரணமும், எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு இணையே இல்லை. இவ்வாறு எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் கட்டுப்பட்டு நடப்பவர்களில் நானே முதல்வனாவேன். (6:163,164)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَ اَنَّ هٰذَا صِرَاطِيْ
مُسْتَقِيْمًا فَاتَّبِعُوْهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيْلِهٖ

இதுவே எனது நேரான வழி ஆகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். ஏனைய வழிகளைப் பின்பற்றாதீர்கள். இல்லையென்றால் உங்களை அவனது வழியிலிருந்து திருப்பி விடும். நீங்கள் உங்களை இறையச்சம் உள்ளவர்களாக ஆக்குவதற்காக, அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்தி கூறுகின்றான். (6:154)

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَ يَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ۔ وَ اللّٰهُ
غَفُوْرٌ رَّحِيْمٌ

நீர் கூறுவீராக (மக்களே)! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் அருள் செய்பவனும் ஆவான். (3:32)

فَقُلْ اَسْلَمْتُ وَجْهِيَ لِلّٰهِ

நீர் கூறுவீராக! நான் அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிந்து விட்டேன். (3:21)

وَ اُمِرْتُ اَنْ اُسْلِمَ لِرَبِّ الْعٰلَمِيْنَ

நீர் கூறுவீராக! அனைத்து உலகங்களின் இறைவனுக்கே நான் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். (40:67)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நானே முஸ்லிம்களில் முதன்மையானவனாவேன் என்று அறிவிக்குமாறு அல்லாஹ் கூறுகின்றான். அதாவது உலகம் தோன்றிய நாளிலிருந்து இறுதிவரை என்னைப் போன்ற உயர் படித்தரத்தை அடைந்த, இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொண்ட, ஒரு முழுமையான மனிதன் யாரும் இல்லை. மேலும் இறைவனுடைய அனைத்து அமானிதங்களையும் அவனுக்குத் திருப்பி கொடுத்த நபர் என்னைப் போன்று வேறு எவரும் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிற நபிமார்களை விட முழுமையான முறையில் சிறந்தவர்களாகத் திகழவில்லை என்று கூறுகின்ற அப்படிப்பட்ட அறிவற்ற மக்களின் கூற்றை இந்தத் திருக்குர்ஆன் வசனங்கள் ரத்து செய்கின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள், யூனுஸ் பின் மதா அவர்களை விட எனக்கு அதிக சிறப்பை வழங்காதீர்கள் என்று கூறிய அந்த பலவீனமான நபிமொழியை வைத்து அவர்கள் அன்னார் (ஸல்) அவர்கள் அனைத்து நபிமார்களையும் விடச் சிறந்தவர்கள் அல்ல என்று கூறுகிறார்கள். அந்த நபிமொழி (ஸஹீஹான) சரியானதாக இருந்தாலும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியது அன்னாரின் வழக்கத்திலேயே இருந்த தன்னடக்கத்தையும் பணிவையும் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலை உள்ளது. ஒரு நல்லடியார் தன்னுடைய கடிதத்தில் தாழ்மையான அல்லாஹ்வின் அடியான் என்று எழுதுவதை வைத்து அந்த நபர் உண்மையிலேயே உலகிலுள்ள சிலை வணங்கிகள் மற்றும் அனைத்துப் பொய்யர்களை

விவும் கீழ்த்தரமானவர் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. அவ்வாறு செய்வது எந்த அளவிற்கு ஒரு அறிவில்லாத தவறான செயலாகும். அவ்வாறு கடிதத்தில் எழுதுவது பணிவின் வெளிப்பாடாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எந்த நிலையில் மகத்துவமிக்க கம்பீரமான அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை முஸ்லிம்களில் எல்லாம் முதன்மையானவர் என்று வைத்துள்ளான் என்றும் மேலும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றக்கூடிய மற்றும் அன்னாருக்குக் கட்டுப்படக்கூடிய அனைத்து மக்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களைத் தலைவராக நியமித்துள்ளான் என்று நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்களே அல்லாஹ்வினுடைய அனைத்து அமானிதங்களையும் முதலில் திருப்பிக் கொடுக்கக்கூடியவராகத் திகழ்கின்றார் என கூறியுள்ளான். இதன் பிறகும் திருக்குர்ஆனை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களுடைய உயர்ந்த அந்தஸ்தில் ஏதாவது குறை காண முடியுமா?

மேலே கூறப்பட்டுள்ள திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் இஸ்லாத்திற்கான பல படித்தகங்களை குறிப்பிட்டுள்ளான். அந்தப் படித்தரங்களை எல்லாம் எல்லாவற்றிற்கும் மேலான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயற்கைத் தன்மைக்கே வழங்கினான். இஸ்லாத்தில் பல படித்தரங்கள் உள்ளன. எல்லாவற்றையும் விட உயர்ந்த படித்தரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்னாரின் இயல்பிற்கேற்ப அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான்.

''سُبحَانَ اللهِ مَا اَعْظَمُ شَانَكَ یَارسولَ الله''

ஒரு ஃபார்ஸி கவிதையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

''موسیٰ وعیسیٰ ہمہ خیلِ تو اند    جملہ دریں راہ طفیلِ تو اند''

மூஸா மற்றும் ஈஸா அனைவரும் உன்னுடைய படையினங்கள்தான். அனைவரும் இவ்வழியில் உன் மூலமேதான் செல்ல வேண்டும். அதாவது மூஸாவும் ஈஸாவும் உன்னைப் பின்பற்றக் கூடியவர்களாகவே இருக்கிறார்கள்.

எனக்கு இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளது. எனக்கு கட்டுப்பட்டு நடங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் உண்மையான முஸ்லிமாக ஆகி விடுவீர்கள். மேலும் நான் முற்றிலுமாக இறைவனுக்காகவே ஆகிவிட வேண்டும். அதாவது அந்த இறைவனில் என்னை மாய்த்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு அவன் அனைத்து உலகங்களுக்கும் இறைவனாக இருக்கின்றானோ அதே போன்று நான் அனைத்து உலகங்களுக்கும் தொண்டனாக ஆக வேண்டும். என்னுடைய அனைத்து ஆற்றல்களையும் மேலும் என்னுடையதாக இருந்த அனைத்தும் அவருடையதாக ஆகிவிட்டது. தற்போது என்னுடையது எதுவும் இல்லை. எது இருக்கிறதோ அது அனைத்தும் அவனுடையதே ஆகும்.

(ஆயினா கமாலாத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 160–165)

இதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக கூறிய உயர்வான மகத்துவம் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் இறை இருப்பின் முழுமையான வெளிப்பாடாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் பல இடங்களில் சைகையாகவும், வெளிப்படையாகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் இறை ஆளுமையின் முழு வெளிப்பாடாக திகழ்கிறார்கள் என்று பல இடங்களில் வந்துள்ளன. அதாவது இறை இருப்பின் முழுத் தோற்றமாக இருக்கிறார்கள். மேலும் அன்னாருடைய சொல் இறைவனுடைய சொல்லாகவும் அன்னாருடைய தோற்றம் இறைவனுடைய தோற்றமாகவும் அன்னாரின் வருகை இறைவனுடைய வருகையாகவும் இருந்தது.

ஆகவே தான் திருக்குர்ஆனில் இது தொடர்பாக ஒரு வசனத்தில் இவ்வாறு வருகிறது:

وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۔ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا

நீர் (எல்லா மக்களிடமும்) கூறி விடுக; (இப்பொழுது) உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. பொய்யானது ஓடிவிடக்கூடிய ஒன்றேயாகும். (17:82)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இடத்தில் உண்மை என்பதன் பொருள் எல்லாம் வல்ல மகத்துவம் வாய்ந்த அல்லாஹ், திருக்குர்ஆன் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆவார்கள். பொய் என்பதன் பொருள் ஷய்த்தான் மற்றும் ஷய்த்தானின் கூட்டம் மற்றும் ஷய்த்தானிய போதனையாகும்.

ஆக, கவனித்துப் பாருங்கள். இறைவன் தன்னுடைய பெயருடன் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை ஏன் இணைத்தான்? மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தோற்றத்தை இறைவனுடைய தோற்றமாகக் கூறுகின்றான். அல்லாஹ் அன்னாரை எப்படிப்பட்ட கம்பீரமான தோற்றத்தில் தோன்றச் செய்தான் என்றால் ஷய்த்தான் தன்னுடைய அனைத்து படைகளுடன் வெருண்டோடி விட்டான். அவனுடைய போதனைகள் ஒன்றுமற்றதாகவும், இழிவாகவும் ஆகிவிட்டது. அவனது கூட்டம் மிகப்பெரிய தோல்வியைத் தழுவியது. இந்த முழுமை பெற்ற ஒருங்கிணைப்பின் காரணமாகத்தான் திருக்குர்ஆனில் அதிகாரம் ஆலி இம்ரானின் மூன்றாவது பாகத்தில் (3:82) மிகவும் தெளிவாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

அதாவது மகத்துவம் வாய்ந்த கம்பீரமான பெருமைக்குரிய தூதர்களுக்கெல்லாம் சிறந்தவராக திகழ்கின்ற முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அன்னாரின் மகத்துவம் மற்றும் கம்பீரத்தைப் பரப்புவதற்காக உடல் மற்றும் உயிரைக் கொண்டு உதவி செய்வது உங்கள் மீது கட்டாயக் கடமையாகும் என அனைத்து நபிமார்களிடமும் இவ்வாறு உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில்தான் (அல்லாஹ்வின் நேசர்) சைஃபுல்லாஹ் ஆகிய ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் (இறைவார்த்தை) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வரை எத்தனை தூதர்கள் சென்று உள்ளார்களோ அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் கம்பீரத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

(சர்மா செஷ்மா ஆரியா, ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 277–280 அடிக்குறிப்பு)

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தின் பெருமையை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வாறு நம்முடைய இறைவன் ஏகனும் வணக்கத்திற்குரியவனும் ஆவானோ அதே போன்று நம்முடைய தூதர் (ஸல்) அவர்கள் ஒருவரே பின்பற்றக்கூடிய தகுதியுடையவர் ஆவார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய நூலில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

”اَمَّا بَعْدُ فَيَقُوْلُ عَبْدُ اللهِ الْاَحَدِ اَحْمَدُ عَافَاهُ اللهُ وَاَيَّدَ …… وَمَا فَهَّمَنِىْ اِلَّا رَبِّىَ الَّذِىْ هُوَ خَيْرُ الْمُفَهِّمِيْنَ …… وَعَلَّمَنِىْ فَاَحْسَنَ تَعْلِيْمِىْ …… وَاَوْحٰى اِلَىَّ اَنَّ الدِّيْنَ هُوَ الْاِسْلَامُ وَاَنَّ الرَّسُوْلَ هُوَ الْمُصْطَفٰى، اَلسَّيِّدُ الْاِمَامُ، رَسُوْلٌ اُمِّىٌّ اَمِيْنٌ۔ فَكَمَا اَنَّ رَبَّنَا اَحَدٌ يَسْتَحِقُّ الْعِبَادَةَ وَحْدَهٗ، فَكَذٰلِكَ رَسُوْلُنَا الْمُطَاعُ وَاحِدٌ لَا نَبِىَّ بَعْدَهٗ، وَلَا شَرِيْكَ مَعَهٗ، وَاَنَّهٗ خَاتَمُ النَّبِيِّيْنَ۔“

பொருள்: ஏக இறைவனின் அடியான் அஹ்மது கூறுகிறார். (இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கி அன்னாருக்கு உதவி புரிவானாக) இறைவனைத் தவிர என்னை யாரும் புரிந்து கொள்ளவில்லை. புரிய வைப்பவர்களில் அவனே மிகவும் சிறந்தவன் ஆவான்... அவன் எனக்குக் கற்றுக் கொடுத்தான். மிகவும் நன்றாகக் கற்றுக் கொடுத்தான்.... இஸ்லாம் தான் அல்லாஹ்வின் மார்க்கம் என்றும் கல்வி கற்காத நம்பிக்கைக்குரிய இமாம்களுக்கு எல்லாம் தலைவராகிய நபி என்றும் எனக்கு வஹீ அறிவித்தான். எவ்வாறு அவன் ஒருவனே அவனுக்கு இணையில்லை என்றும் இறைவணக்கம் என்பது இறைவனுக்காக மட்டுமே உரியது என்பதை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோ, இவ்விஷயத்தில் அவ்வாறே நம்முடைய தூதரும் ஆவார். பின்பற்றத்தக்க கூடியவர்களில் அவர் ஒருவரே ஆவார். மேலும் நபிமார்களில் எல்லாம் சிறந்தவர் அவர் ஒருவரே ஆவார்.

(மினனுர் ரஹ்மான், ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 156–157)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் வாதத்திற்கு முன்பு ஒன்றைக் கூறினார்கள். வாதத்திற்குப் பிறகு வேறொன்றைக் கூறுகிறார்கள் என ஆட்சேபணை செய்கிறார்கள். ஆனால் இந்த அனைத்து மேற்கோள்களும் வாதத்திற்குப் பிறகு 1895 ஆம் ஆண்டு வெளிவந்ததாகும். பிறகு மனிதர்களுக்குரிய சிறப்புகளுக்குத் தமது வாழ்க்கையின் மூலமாக உயர்ந்த முன்மாதிரியை காட்டக் கூடியவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள் என்பதை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அனைத்து மார்க்கங்களிலும் இஸ்லாம் மட்டுமே உண்மையானது என்று எனக்குக் கூறப்பட்டிருக்கின்றது. எல்லா நேர்வழிகளை விடவும் திருக்குர்ஆன் கூறுகின்ற நேர்வழி மட்டுமே எவ்விதக் குறைவும் இல்லாமல் முழுமைபெற்ற தகுதியில் இருக்கக்கூடியதாகவும், மனித இடையூறுகளிலிருந்து தூய்மையானதாகவும் இருக்கின்றது என்று எனக்கு கூறப்பட்டிருக்கின்றது. எல்லா தூதர்களிலும் முழுமையான போதனையை வழங்குபவரும் உயரிய தகுதியுள்ள தூய்மை மற்றும் ஞானம் நிறைந்த போதனையை வழங்குபவரும் மனிதர்களுக்குரிய சிறப்புகளுக்குத் தமது வாழ்க்கையின் மூலமாக உயர்ந்த முன்மாதிரியை காட்டக் கூடியவர் நமது தலைவரும் எஜமானரும் ஆகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள்.

(அர்பயீன் எண் 1 ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 345)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நம்முடைய தலைவரும் படைப்பினங்களுக்கெல்லாம் தலைவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் எந்தவொரு முன்னறிவிப்பு அல்லது அன்னாரின் மூலமாக வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்கள் எதுவும் நிகழவில்லை (நவூதுபில்லாஹ்) என்று கூறித் திரிந்த அந்த பாதிரிமார்கள் எங்கே சென்று விட்டார்கள்? நான் உண்மையாகவே கூறுகின்றேன். பூமியில் அந்த ஒரு முழுமையான மனிதரே காலம் சென்றுள்ளார். அன்னாரின் முன்னறிவிப்புகள் மற்றும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன. மற்றும் அசாதாரணமான அற்புதங்கள் வெளிப்பட்டன என்பது எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால் இன்று வரை உம்மத்தில் அன்னாரைப் பின்பற்றுபவர்களின் உண்மை நேசர்களின் மூலம் கடல் அலைகள் போல் பொங்கி எழுகின்றன.

அன்னார் அனைத்து மார்க்கங்களுக்கும் அறைகூவல் செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

தன்னகத்தே இத்தகு சிறப்புத்தன்மை மற்றும் மகத்துவத்தைக் கொண்டுள்ள இஸ்லாத்தை தவிர வேறு ஒரு மார்க்கம் எங்கு எந்த இடத்தில் உள்ளது? இஸ்லாத்தின் அருள்கள் மற்றும் சான்றுகளை எதிர்கொள்ளக்கூடிய அந்த மக்கள் எங்கு எந்த நாட்டில் இருக்கின்றார்கள்?

(அர்பயீன் 1 ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 346)

இன்றும் கூட இஸ்லாத்தில் மட்டும்தான் அந்த அடையாளத்தை நாம் காண முடியும். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களை உண்மையான முறையில் பின்பற்றக் கூடியவர்களிடம் அந்த அடையாளத்தை நாம் காணலாம்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித குலத்திற்கு பூமியின் மேற்பரப்பில் இப்போது திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த வேதமும் இல்லை. ஆதமின் மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும், பரிந்துரையாளரும் இல்லை. ஆகவே நீங்கள் இந்த மகத்துவமான கம்பீரமான இந்த நபியை உண்மையாகவே நேசிக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் விண்ணில் இரட்சிக்கப்பட்டவர்களாக எழுதப்பட வேண்டும் என்றால் அவருக்குக் கொடுக்கப்படும் கண்ணியத்தை விட மேலான கண்ணியத்தை வேறு எவருக்கும் கொடுக்காதீர்கள்.

இரட்சிப்பு என்பது மரணத்திற்குப்பின் வெளிப்படக்கூடிய ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். உண்மையான இரட்சிப்பானது அது தன் ஒளியை இவ்வுலகிலேயே வெளிப்படுத்திக் காட்டுகிறது. இரட்சிப்பு பெற்றவர் யார்? உண்மையான இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்றும் இறைவனுக்கும் அவனது அனைத்து படைப்பினங்களுக்கும் இடையில் பரிந்து பேசக்கூடியவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள் என்றும் வானத்தின் கீழ் அவருக்கு நிகரான வேறு எந்த வேத நூலும் இல்லை என்றும் திருக்குர்ஆனுக்கு நிகரான அந்தஸ்தில் வேறு எந்த நூலும் இல்லை என்றும் நம்பிக்கை வைக்கக் கூடியவர்களே இரட்சிப்புப் பெற்றவர்களாவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர எவரும் என்றென்றும் உயிர் வாழ வேண்டும் என்று அல்லாஹ் நாடவில்லை. ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மாநபி (ஸல்) அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக வாழ்கிறார்கள்.... முந்தைய சமுதாயங்கள் இழந்து விட்ட அருட்கொடைகளை மூஸா நபி (அலை) அவர்கள் பெற்றார்கள். மேலும் மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயம் இழந்து விட்ட அந்த அருட்கொடைகளை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பெற்றார்கள். தற்போது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமுதாயமானது மூஸா நபியின் சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. ஆனால் (முஹம்மதிய்ய சமுதாயமானது மூஸா நபி (அலை) அவர்களின் சமுதாயத்தைவிட) அந்தஸ்தில் ஆயிரம் மடங்கு முன்னிலை வகிக்கிறது.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 13,14)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாகவே இறைவனைப் பெற்றோம்.

எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்ற உண்மையான நிறைவான முழுமைப் பெற்ற இறைவனுக்கு நம்முடைய ஆன்மா மற்றும் ஒவ்வொரு அணுவும் சிரம் பணிகிறது. அந்த இறைவனுடைய அனைத்து ஆற்றல்களும் வெளிப்பட்டது. அவனுடைய இருப்பில்தான் ஒவ்வொருவரின் இருப்பும் இருக்கிறது. மேலும் எந்தவொரு விஷயமும் அவனுடைய ஞானத்திற்கு அப்பாற்பட்டது இல்லை. எந்தவொரு பொருளும் அவனுடைய கட்டுப்பாட்டில் இருந்தும், அவனுடைய படைப்பில் இருந்தும் வெளியில் இல்லை.

எந்த நபியின் மூலம் நாம் உயிருள்ள இறைவனைப் பெற்றோமோ அந்த தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மீது ஆயிரம் ஆயிரம் தரூத், ஸலாம், கருணைகள் மற்றும் அருள்கள் இறங்கட்டுமாக! அந்த இறைவன் சுயமே உரையாடுவதன் மூலம் அவனே தன்னுடைய இருப்பின் அடையாளத்தைக் காட்டுகிறான். மேலும் அசாதாரணமான அடையாளத்தை வெளிப்படுத்தித் தன்னுடைய தொன்றுதொட்ட மற்றும் முழுமையான ஆற்றல்களின் மூலம் ஒளிவீசக்கூடிய முகத்தை நம்மிடத்தில் வெளிப்படுத்துகிறான்.

ஆக இப்படிப்பட்ட ஒரு இறைவனை நமக்குக் காட்டித்தந்த அந்தத் தூதரை நாம் பெற்றுள்ளோம். அந்த இறைவன் எப்படிப்பட்ட இறைவனாக இருக்கிறான் என்றால் தன்னுடைய ஆற்றல் எத்தகைய மகத்துவத்தை தன்னகத்தே கொண்டதாக இருக்கிறது என்றால் அதுவன்றி எந்த பொருளும் அணு அளவும் வளர்ச்சி பெற முடியாது. நம்முடைய அந்த இறைவன் எண்ணற்ற அருள்களையும், எண்ணற்ற ஆற்றல்களையும் எண்ணற்ற பொழிவுகளையும், எண்ணற்ற அன்பையும் கொண்டவன் ஆவான். அவனைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை.

(நஸீமே தஃவத், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 363)

அன்னார் (அலை) அவர்கள் எதையெல்லாம் பெற்றார்களோ அவை அனைத்தும் பெருமானார் (ஸல்) அவர்களின் மூலமே பெற்றார்கள் என்பதை கூறியவாறு கூறுகிறார்கள்:

நான் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். அவன் எவ்வாறு இப்ராஹீம் (அலை), இஸ்ஹாக் (அலை), இஸ்மாயீல் (அலை), யஃகூப் (அலை), யூசுஃப் (அலை), மூஸா (அலை) மற்றும் மர்யத்தின் மகன் ஈஸா (அலை) அவர்களிடம் உரையாடினானோ எவர்கள் எல்லாரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எத்தகைய உரையாடலை மேற்கொண்டான் என்றால் அதன் காரணமாக அன்னார் மீது எல்லாவற்றையும் விட அதிகமாக ஒளிமயமான மற்றும் தூய்மையான வஹீயை இறக்கினானோ அவ்வாறே எனக்கும் உரையாடக்கூடிய மேலான நற்பாக்கியத்தை வழங்கினான். ஆனால் இந்த நற்பாக்கியம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் தான் எனக்குக் கிடைத்தது.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சாராதவனாகவும், அன்னாரைப் பின்பற்றாமலும் இருந்து, முழு உலகிலுள்ள அனைத்து மலைகளுக்கு ஈடாக என்னுடைய அமல்கள் (செயல்கள்) இருந்திருந்தாலும் கூட இறைவனுடன் உரையாடக்கூடிய இந்த நற்பாக்கியம் எனக்கு ஒருபோதும் கிடைத்திருக்காது. ஏனென்றால் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தைத் தவிர மற்ற எல்லா நபித்துவ வாசலும் அடைக்கப்பட்டு விட்டது. புதிய ஷரீஅத்தை கொண்டு வரக்கூடிய நபி இனி ஒருபோதும் வர மாட்டார். ஆனால் முன்பிருந்தே உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பவரைத் தவிர. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்த ஒருவரே நபியாக வர முடியும்.

(தஜல்லியாத்தே இலாஹிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 411–412)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் என்னுடைய உண்மையான மற்றும் முழுமை பெற்ற ஞானத்தை கொண்டு அறிந்து கொண்ட விஷயமானது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் எந்தவொரு மனிதனும் இறைவனைச் சென்றடைய முடியாது. மேலும் நான் இந்த விஷயத்தையும் கூற விரும்புகிறேன். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகவும், முழுமையான முறையிலும் பின்பற்றிய காரணத்தினால் எல்லா விஷயங்களையும் விட உள்ளத்தில் தோன்றுகின்ற முதல் விஷயம் என்ன என்பதை நான் இங்கு கூற விரும்புகிறேன்.

நினைவில் கொள்ளுங்கள். அது கல்பே சலீம் ஆகும். அதாவது உள்ளத்திலிருந்து உலகத்தின் மீதுள்ள பற்று வெளியேறி விடுகிறது. மேலும் உள்ளம் ஒரு நிரந்தரமான என்றும் அழியாத பேரின்பத்தின் தேட்டத்தையுடையதாக இருக்கிறது. அதன் பிறகு கல்பே சலீமின் (திருப்தி அடைந்த உள்ளம்) காரணமாக ஒரு தூய்மையான முழுமைப் பெற்ற இறைநேசம் கிடைக்கிறது. இந்த அனைத்து அருள்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய காரணத்தினாலே வாரிசாகக் கிடைக்கிறது. அதைத்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் சுயமே இவ்வாறு கூறுகின்றான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللهُ

நீர் கூறுவீராக, (மக்களே) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போது தான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். (3:32)

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 64,65)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது நேசம் கொள்ளுதல் மற்றும் அன்னாரைப் பின்பற்றுதல் மனிதனை இறைநேசராக ஆக்கி விடுகிறது. இது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஒருவரை நேசிக்க வேண்டும் என்று விரும்பினால் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்பதை நிபந்தனையாக வைத்துள்ளான்.

நற்செயல் செய்தால் மட்டுமே போதுமானது என்று இருக்கும்போது இரட்சிப்பு பெறுவதற்கும் இறைவன் நம்மை ஏற்றுக் கொள்வதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்கான என்ன தேவை உள்ளது? என்று ஒருவர் செய்த ஆட்சேபணைக்குப் பதிலளித்தவாறு அன்னார் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நற்செயல்கள் என்பது இறைவனின் நற்பாக்கியத்தின் மூலம் வெளிப்படுகின்ற ஒன்றாகும். இறைவன் தன்னுடைய மகத்துவம் வாய்ந்த திட்டத்தின் அடிப்படையில் ஒருவரைத் தூதராகவும், இமாமாகவும் நியமித்து அவருக்குக் கட்டுப்படுமாறு கட்டளையிடுகின்றான். எவர் அந்தக் கட்டளைக்குக் கட்டுப்பட்டவாறு அவரைப் பின்பற்றவில்லையோ அவருக்கு நற்செயல்கள் செய்வதற்கான பாக்கியம் கிடைப்பதில்லை. இறைவனால் அனுப்பப்பட்டவரை பின்பற்றுவது மிகவும் அவசியமாகும். நம்முடைய நற்செயல்கள் மட்டும் போதுமானது அல்ல. மேலும் எல்லாவற்றையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவது, அன்னாரை உண்மையாக நேசிப்பது இறுதியில் இறைவிருப்பத்தைப் பெறக்கூடியவராக ஆக்கி விடுகிறது

என்பதை நான் என் சொந்த அனுபவத்திலிருந்து கூறுகின்றேன். இவ்வாறு அன்னாரைப் பின்பற்றும்போது அவருடைய உள்ளத்தில் இறைநேசத்தைப் பெற வேண்டும் என்ற ஒரு விதமான வேதனை உருவாகிறது. அப்போது அந்த நபரின் உள்ளம் அனைத்து விஷயங்களிலிருந்தும் கட்டுப்பாட்டை இழந்தவாறு இறைவனின் பக்கம் குனிந்து விடுகிறது.

மேலும் அதனுடைய அன்பு, உணர்ச்சி இறைவனிடமே எஞ்சி விடுகிறது. இறை நேசத்தின் ஒரு சிறப்பான தோற்றம் அவர் மீது விழுகிறது. மேலும் அவருக்கு அன்பு மற்றும் நேசத்தின் முழுமையான பண்பை அளித்து வீரியமுள்ள மன எழுச்சியை கொண்டு தன் பக்கம் இழுத்து விடுகிறது. அப்போது ஆன்மாவின் உணர்ச்சிகளின் மீது அவன் வெற்றி கொள்கிறான். எல்லாத் தரப்பிலிருந்தும் அவனுக்கு இறைவனின் வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்கள் செயல்களின் அடையாளத்தின் வடிவில் அவனுக்காக உதவி மற்றும் ஆதரவை வெளிப்படுத்துகின்றன.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 67,68 அடிக்குறிப்புடன்)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கவனம் நபியை உருவாக்குகிறன்றது. மகத்துவமும் கம்பீரமும் மிக்க எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சிறந்தவராக ஆக்கினான். மேலும் முழுமையான முறையில் பயன் பெறத்தக்க அன்னாரிடம் முத்திரையைக் கொடுத்தான். வேறு எந்த நபிக்கும் ஒருபோதும் அது கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே தான் அன்னாருக்கு காத்தமுன் நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் சிறந்தவர்) என்ற பெயர் வந்தது. அன்னாரைப் பின்பற்றுவதினால் நபித்துவத்தின் உயர் நிலையை நாம் அடைகின்றோம். அன்னாருக்கு வழங்கப்பட்ட ஆன்மீக மனப்பற்று மற்றும் தூய்மை செய்யக்கூடிய ஆற்றல் வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. இந்தப் பொருள்தான் இந்த நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.

عُلَمَاءُ أُمَّتِيْ كَأَنْبِيَاءِ بَنِيْ إِسْرَائِيْل அதாவது என்னுடைய உம்மத்தைச் சார்ந்த ஆலிம்கள் பனீ இஸ்ராயீலின் நபிமார்களுக்கு ஒப்பானவர்களாக இருப்பார்கள்.

பனீ இஸ்ராயீல் சமுதாயத்தில் எண்ணற்ற நபிமார்கள் தோன்றினார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைத்த நபித்துவம் மூஸாவைப் பின்பற்றிய காரணத்தினால் கிடைத்தது அல்ல. அந்த நபித்துவம் இறைவன் புறமிருந்து நேரடியாகக் கிடைத்த ஒரு வெகுமதி ஆகும். அதில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் எந்த தலையீடும் இல்லை.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 100 அடிக்குறிப்பு)

தற்போது நான் ஆலிம்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்கின்றேன். பெயர்தாங்கி ஆலிம்களே சிந்தித்துச் செயல்படுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பை மெருகேற்றியதன் மூலம் அன்னாரின் கம்பீரம் உயர்ந்ததா? தாழ்ந்ததா? உலக ஆதாயங்கள் இதனால் பாதிக்கப்படும் என்பதால் இதன் பக்கம் கவனம் செலுத்த மாட்டீர்கள். ஆனால் நாம் முழு நம்பிக்கையுடன் இவ்வாறு கூற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து மற்றும் உயர்வான மகத்துவத்தின் ஞானத்தை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களே நமக்கு வழங்கினார்கள்.

ஆக ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தருது மற்றும் ஸலவாத் ஓதுவதை கட்டாயமாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மேற்கொண்ட உண்மையான தொடர்பின் காரணமாக அதன் மூலம் கிடைக்கின்ற அருள்களிலிருந்து நாம் பயன்பெறக் கூடியவர்களாக ஆவோமாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது தருது ஓதுவதன் முக்கியத்துவம் தொடர்பாகக் கவனமூட்டியவாறு அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நம்முடைய தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையையும் நன்றியுணர்வையும் பாருங்கள். அன்னார் எல்லா விதமான தீய கொள்கைகளையும் எதிர்த்து நின்றார்கள். பல்வேறு துயரங்களையும் துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால் இவை அனைத்தையும் அன்னார் பொருட்படுத்தவே இல்லை. இந்த உண்மை மற்றும் நன்றியுணர்வின் காரணமாகவே அல்லாஹ் அவர்கள் மீது அருள் புரிந்தான். அதனால்தான் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும், சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிராத்தனை செய்யுங்கள். (33:57)

இந்த வசனத்திலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களுடைய செயல்கள் எத்தகையதாக இருக்கிறது என்றால் அவற்றைப் புகழ்வதற்கும் அல்லது அன்னாரது பண்புகளைக் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் கொண்டு வருவதற்காக எந்தவொரு குறிப்பிட்ட சொல்லையும் பயன்படுத்தவில்லை. சொற்கள் கிடைத்திருக்கும். ஆனால் சுயமே அவன் அவற்றைப் பயன்படுத்தவில்லை. அதாவது அன்னாரது நற்செயல்களைப் புகழ்வது குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இதைப்போன்ற வசனத்தை வேறு எந்த நபியின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இறைவன் பயன்படுத்தவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மாவில் எத்தகைய உண்மையும் நன்றியுணர்வும் இருந்தது என்றால் அன்னாரின் நற்செயல்கள் இறைவனுடைய பார்வையில் எத்தகு விருப்பத்திற்குரியதாக இருந்தது என்றால் அதன் காரணமாக அல்லாஹ் இனி வரும் காலத்தில் மக்கள் நன்றி தெரிவிக்கும் வகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நிரந்தரமாக ஸலவாத் ஓத வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 37,38)

ஸலவாத் எந்த நோக்கத்துடன் ஓதப்பட வேண்டும் என்பது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்: கண்ணியமிக்க இறைவன் தன் முழுமையான அருள்களைத் தன்னுடைய கண்ணியத்திற்குரிய நபி மீது இறக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நாம் ஸலவாத் ஓத வேண்டும். அது அனைத்து உலகிற்கும் அருள்களின் நீரூற்றாக இருக்க வேண்டும். அதனுடைய மேன்மைகளையும் கம்பீரத்தையும் மகத்துவத்தையும் இவ்வுலகிலும் மறு உலகிலும் வெளிப்படச் செய்ய வேண்டும். இந்த துஆ முழுவதுமாக முன்னிலை பெற்றதாக இருக்க வேண்டும். அதாவது கலப்பற்ற உள்ளத்துடனும் உணர்வுடனும் இருக்க வேண்டும். எவ்வாறு ஒருவர் துன்பத்தில் இருக்கும்போது உருக்கத்துடனும், முழு கவனத்துடனும் துஆ செய்வாரோ அதை

விட அதிகமாக உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். இதன் மூலம் எனக்குப் பலன் கிடைக்க வேண்டும் அல்லது உயர்ந்த அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்று நம்முடைய சுய தேவை எதுவும் அதில் இருக்கக் கூடாது. இறைவனின் முழுமையான அருள்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தத் தூதர் (ஸல்) அவர்களின் மீது இறங்க வேண்டும். மேலும் இவ்வுலகம் மற்றும் மறுமையில் அன்னாரின் கம்பீரம் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணமே முற்றிலும் கலப்பற்ற உள்ளத்துடன் இருக்க வேண்டும். வேறு எண்ணம் நம் உள்ளத்தில் மேலோங்காதவரை இந்த நோக்கத்திற்காகவே இரவும் பகலும் நாம் அயராது பாடுபட வேண்டும். (மக்தூபாத்தே அஹ்மது தொகுதி 1 பக்கம் 523)

அன்னார் கூறுகின்றார்கள்: ஸலவாத் அதிகமாக ஓதுங்கள். வெறும் சடங்கு சம்பிரதாய அடிப்படையில் ஓதாதீர்கள். மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கருணை மற்றும் அன்பை கருத்தில் கொண்டவாறும், அன்னாருடைய உயர் தகுதி மற்றும் படித்தரத்தின் முன்னேற்றத்திற்காகவும், அன்னாரின் வெற்றிக்காகவும் ஸலவாத் ஓதுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 23)

மற்றொரு சந்தர்ப்பத்தில் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகிறார்கள்: நீங்கள் மிகவும் கவனமாக ஸலவாத்தை ஓதுங்கள். எவ்வாறு ஒருவர் தன் அன்பருக்காக உண்மையான முறையில் அருளை வேண்டுவாரோ அதே போன்று முழு விருப்பத்துடனும் பற்றுடனும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக அருளை வேண்ட வேண்டும். மேலும் உருக்கத்துடன் வேண்ட வேண்டும். மேலும் அந்த துஆவில் எந்தவொரு பகட்டும் இருக்கக் கூடாது. பெருமானார் (ஸல்) அவர்களுடன் கொண்டுள்ள உண்மையான தோழமை மற்றும் நேசத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். ஸலவாத்தில் கூறப்பட்டுள்ள அந்த அருள்களை பெருமானார் (ஸல்) அவர்களுக்காக உண்மையான உள்ளத்துடன் நாம் கேட்க வேண்டும்.

தனிப்பட்ட அன்பின் அடையாளம் என்னவென்றால், மனிதன் ஒருபோதும் அவருக்காக துஆ செய்வதில் திகைக்க மாட்டான். சோர்வடைய மாட்டான். மன விருப்பத்தின் தலையீடு அதில் இருக்காது. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கண்ணியத்திற்குரிய இறைவனின் அருள்கள் வெளிப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே ஸலவாத் ஓத வேண்டும். (மக்தூபாதே அஹ்மது, தொகுதி 1 பக்கம் 534,535)

ஸலவாத் ஓதுவதிலுள்ள ஞானம் தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேறு எவருடைய துஆவின் அவசியமும் இல்லைதான். ஆனால் இதில் ஆழ்ந்த கருத்து உள்ளது. அந்த ஆழ்ந்த கருத்து என்னவென்றால், ஒருவர் தனிப்பட்ட நபர் மீது அன்பு கொண்டதன் காரணமாக அவருக்காக கருணையும், அருளும் வேண்டும்போது அவர் அந்த நபருடைய இருப்பின் ஒரு பகுதியாகவே ஆகி விடுகிறார். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஏக இறைவனின் எண்ணற்ற அருள்கள் இருக்கின்றன. அதனால் அன்னார் மீது கொண்ட தனிப்பட்ட அன்பின் காரணத்தினால் அன்னார் மீது ஸலவாத் ஓதுபவர்கள் எண்ணற்ற அருளை வேண்டுகின்றனர். அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்றார்போல் அதிலிருந்து பங்கும் கிடைக்கிறது. ஆனால் ஆன்மீக உணர்ச்சி மற்றும் தனிப்பட்ட அன்பின்றி இந்த அருள் மிகவும் குறைவாகவே வெளிப்படுகின்றன. (மக்தூபாதே அஹ்மது தொகுதி 1 பக்கம் 535)

ஆக மிகவும் ஆழ்ந்த உணர்வுடனும் நேசத்துடனும் ஸலவாத் ஓத வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் ஸலவாத் ஓதுவது தொடர்பாகக் கூறப்பட்ட இந்த உணர்வை நம்மில் ஏற்படுத்துவானாக. மேலும் நாம் உண்மையான முறையில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுபவர்களாக ஆவோமாக. அல்லாஹ்வால் வாக்குறுதி வழங்கப்பட்ட மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் மூலம் இக்காலத்தில் நிறைவேற வேண்டும் என்று தீர்மானித்த அந்த வெற்றிகளை நாம் காணக் கூடியவர்களாகவும் அதிலிருந்து பங்கு பெறக் கூடியவர்களாகவும் ஆவோமாக. நாம் முஸ்லிம்களா? இல்லையா? என்பதற்கு எந்தவொரு அரசாங்கத்தின் சான்றிதழும், எந்தவொரு மார்க்கத்தின் ஆலிம்களின் சான்றிதழும், எந்தவொரு பெயர்தாங்கி மார்க்க ஆலிம்களின் சான்றிதழும் தேவையில்லை.

அத்துடன் ஏதாவது ஒரு படிவத்தில் எழுதுவதனால் நாங்கள் முஸ்லிம் அல்லது முஸ்லிம் அல்லாதவர்கள் என்று ஆகிவிடுவதில்லை. மாறாக ஒருவனுடைய சான்றிதழ் மட்டும் எங்களுக்குப் போதுமானதாகும். அது அல்லாஹ்வின் விருப்பம் என்னும் சான்றிதழாகும். அல்லாஹ்வின் விருப்பத்தை எப்போது நாம் பெற முடியும் என்றால், எப்போது அல்லாஹ் அந்த சான்றிதழை நமக்கு வழங்குவான் என்றால், நாம் உண்மையான முறையில் பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தாரின் உரிமையை செலுத்தாத வரையிலும் அன்னாரை முழுமையான முறையில் பின்பற்றாத வரையிலும் அந்த சான்றிதழைப் பெற முடியாது. நம்முடைய ஸலவாத் பெருமானார் (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்து மீண்டும் அல்லாஹ் அன்னாருக்கு அளித்த வாக்குறுதிக்கேற்ப நாமும் அந்த அருள்களிலிருந்து பங்கு பெறக்கூடியவர்களாக ஆகிவிடுவோம். அல்லாஹ் நமக்கு இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இந்த வருடமும் தன்னுடைய முடிவை அடைந்துள்ளது. சில நாடுகளில் 24 மணி நேரமும், சில நாடுகளில் இரண்டு பகலும், இரண்டு இரவும் எஞ்சியுள்ளது. ஆக இந்த கடைசி நாட்களையும் தரூதைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய வருடத்தையும் தரூது மற்றும் ஸலவாத்தைக் கொண்டு வரவேற்போம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் மிக விரைவாக பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொடர்புடைய அருள்களைப் பெறுபவர்களாக ஆகிவிடுவோம். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் எல்லா எதிரிகளிடமிருந்தும் நம்மைக் காப்பாற்றுவானாக. அவர்களுடைய தீங்குகளை அவர்கள் மீதே திருப்புவானாக. தற்போது நாம் துஆ செய்வோம். துஆவில் அனைவரும் என்னுடன் கலந்து கொள்ளுங்கள். (துஆவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்)

தற்போது காதியான் ஆண்டு மாநட்டில் வருகை தந்திருப்பவர்களின் எண்ணிக்கை 18,19 ஆயிரம் என்று நான் கூறியிருந்தேன். சரியான புள்ளிவிவரம் தற்போது என் முன்னால் உள்ளது. அதற்கேற்ப தற்போது 18864 பேர் வருகை தந்துள்ளனர். 48 நாடுகளின் பிரதிநிதித்துவம் இதில் உள்ளது. அல்லாஹ் அனைவருக்கும் இந்த மாநாட்டின் அருள்களிலிருந்து பயன்பெறுவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. பல நாடுகளிலிருந்து வருகை தந்து இருக்கின்றவர்கள், பாகிஸ்தானிலிருந்து வருகை தந்திருப்பவர்கள் ஆகிய இவர்கள் அனைவரையும் அல்லாஹ் நலமுடன் தன்னுடைய நாட்டிற்கு திரும்பக் கொண்டு செல்வானாக. தன்னுடைய பாதுகாப்பில் வைப்பானாக. இங்கு இலண்டனில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 5365 ஆகும். இவர்களில் பெண்கள் 2400 ஆகும். ஆண்கள் 2600 ஆகும். இப்போது காதியானில் உள்ளவர்கள் தமது அடுத்த நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கவும்.

**மொழியாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித் சாஹிப்**

**அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம்; தாங்கள் நலமாக இருக்கும்போது வேறெவரின் மரணத்தைப் பற்றியும் நான் பொருட்படுத்த மாட்டேன்**

**கிறிஸ்தவ எழுத்தாளர்கள் மரியம் மகதலேனாவும் அவளுடைய தோழிகளும் காலை நேரத்தில் பகைவர்களுக்குத் தெரியாமல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கல்லறைக்குச் சென்று காட்டிய வீரத்தைக் குறித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். நான் அவர்களிடம் கேட்கின்றேன்: கிறிஸ்தவர்களே! இங்கு வந்து, என் அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தூய்மையான பற்று கொண்டவர்களும் அவர்களுக்காகத் தியாகம் செய்தவர்களும் எவ்வாறான நிலைகளில் அன்னாருக்கு உதவியளித்தார்கள்? எவ்வாறான நிலைமைகளில் அவர்களெல்லாம் ஏகத்துவம் என்னும் கொடியை எவ்வாறு உயரச் செய்தார்கள்? என்பதைப் பாருங்கள்**

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை என்ற நூலிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய ஒரு சம்பவம்**

நிராகரிப்பவர்களின் படை வீரர்கள் பத்ர் போர்க்களத்திலிருந்து வெருண்டோடியபோது, தாங்கள் அடுத்த ஆண்டு மீண்டும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தி தங்களுக்குக் கிடைத்த தோல்விகளுக்காக முஸ்லிம்களைப் பழிவாங்கப் போவதாகப் பகிரங்கமாக அறிவித்தனர்.

எனவே, அவர்கள் அடுத்த ஆண்டில் மீண்டும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்காக முழுமையான ஆயத்தம் செய்தார்கள். பத்ர் போருக்குப் பின் மிக அதிகமாக கோபங் கொண்டிருந்த மக்காவாசிகள், எவருடைய உறவினர்கள் மரணமடைந்தாலும் அதற்காக அழ அவருக்கு அனுமதி கிடையாது என்றும் வாணிபம் செய்துவிட்டுத் திரும்பும் குழுக்களின் வருமானங்கள் அடுத்த ஆண்டுப் போருக்காகப் பாதுகாத்து வைக்கப்படும் என்றும் அறிவித்தனர். ஆகவே, அவர்கள் பெருமளவில் ஆயத்தம் செய்து கொண்டு, அபூசுஃப்யானின் தலைமையில் மூவாயிரத்திற்கும் அதிகமான போர் வீரர்களைக் கொண்ட ஒரு படையைக் கொண்டு மதீனாவைத் தாக்கினர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களிடம், நாம் மதீனா நகரத்தில் இருந்து கொண்டே அவர்களை எதிர்க்கலாமா? அல்லது வெளியே சென்று எதிர்க்கலாமா? என்று கலந்து ஆலோசித்தார்கள். அவர்கள் மதீனாவிலிருந்தே போர் செய்ய விரும்பினார்கள். முதலில் போர் தொடுப்பவர்கள் எதிரிகளாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவும், முஸ்லிம்களை எதிரிகள் அவர்களது வீட்டில் தாக்க வரும்போது அவர்களை எளிதாக எதிர்கொள்ளலாம் என்பதற்காகவும் தாக்குதலைத் தொடங்க எதிரிகளை விட்டு விடலாம் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருதினார்கள்.

ஆனால் பத்ர் போரில் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்காததால், இறைவழியில் உயிர் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு தங்களுக்கும் கிடைக்கவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் இறைவழியில் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு தங்களுக்கு ஏன் அளிக்கப்படுவதில்லை? என்று பிடிவாதமாகக் கூறியதால், வெளியில் சென்று போர் செய்ய வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

கலந்தாலோசனை செய்தபோது அவர்கள் கண்ட ஒரு கனவையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள்:

நான் ஒரு கனவில், சில பசுக்களைக் கண்டேன். எனது வாளின் முனை உடைந்து விட்டதாகவும், அந்தப் பசுக்கள் அறுக்கப்படுவதாகவும், பின்னர் நான் என் கையை வலிமை வாய்ந்த பாதுகாப்பானதுமான ஒரு கவசத்திற்குள் நுழைத்திருப்பதாகவும் ஒரு செம்மறிக் கடாவின் மீது சவாரி செய்வதாகவும் கண்டேன் என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் இக்கனவிற்கு என்ன பொருள் செய்துள்ளீர்கள் என்று நபித்தோழர்கள் வினவியதற்கு, பசுக்கள் அறுக்கப்படுவதன் விளக்கம், என் தோழர்களுள் சிலர் போரில் கொல்லப்படுவார்கள் என்பதாகும்; வாளின் முனை உடைந்து விட்டதன் விளக்கம், என் உறவினர்களுள் மிகவும் முக்கியமான ஒருவர் கொல்லப்படுவார் அல்லது இப்போரில் எனக்கே ஏதேனும் துன்பம் ஏற்படலாம் என்று தெரிகிறது. கவசகத்திற்குள் என் கையை நுழைப்பதன் விளக்கம், நாம் மதீனாவிலிருந்து எதிர்ப்பதே மிகவும் பொருத்தமானதாக இருக்கும் எனத் தெரிகிறது. செம்மறிக் கடாவின்மீது சவாரி செய்வதன் விளக்கம், நிராகரிப்பாளர்களின் தளபதி முஸ்லிம்களின் கையால் கொல்லப்படுவான் எனத் தெரிகிறது என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

இந்தக் கனவின் மூலம் முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து எதிர்ப்பதே மிகவும் நன்றாகும் என்று அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது என்றாலும் இக்கனவின் விளக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த விளக்கமாக இருந்ததாலும் இது இறையறிவிப்பின் மூலம் செய்யப்பட்ட விளக்கமாக இல்லாமல் இருந்ததாலும் பெரும்பான்மையினரால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்றுக் கொண்ட அவர்கள், மதீனாவிற்கு வெளியே சென்று போர் செய்ய முடிவு செய்தார்கள்.

அவர்கள் வெளியேறியபோது, அந்த இளைஞர்கள் வருத்தமடைந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுடைய ஆலோசனையே சரியானது. மதீனாவிலிருந்து கொண்டே எதிரிகளை நாம் எதிர்க்க வேண்டும் என்றனர். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

இறைனுடைய நபி கவசம் அணிந்து விட்டால், அதனைக் களைவதில்லை. இப்பொழுது என்ன நேர்ந்தாலும சரியே. நாம் முன்னேறிக் கொண்டேதான் இருப்போம். நீங்கள் பொறுமையை மேற்கொண்டால் இறைவனுடைய உதவி உங்களுக்குக் கிடைக்கும் என்று கூறிவிட்டு, ஓராயிரம் படை வீரர்களுடன் அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள்.

சிறிது தூரம் சென்றதன் பின்னர், இரவைக் கழிப்பதற்காகக் கூடாரம் அமைத்துத் தங்கினார்கள். எதிரிகளை சந்திப்பதற்கு முன்னர் தங்கள் போர் வீரர்கள் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு தத்தமது பொருள்கள் முதலியவற்றை ஆயத்தம் செய்வதற்கான வாய்ப்பை அவ்வீரர்களுக்கு அளிப்பது அவர்களின் வழக்கமாக இருந்தது. காலைத் தொழுகை வேளையில் அவர்கள் சுற்றிப் பார்த்த பொழுது, சில யூதர்களும், தாங்கள் உடன்படிக்கை செய்திருந்த கோத்திரத்தினர்களுக்கு உதவி செய்யப் போவதாகப் பாசாங்கு செய்து கொண்டு வந்திருந்தது அவர்களுக்குத் தெரிந்தது. யூதர்களின் சதித்திட்டங்கள் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்ததால் அந்த யூதர்களைத் திருப்பி அனுப்பி விடுமாறு அவர்கள் கூறினார்கள்.

இதனால் நயவஞ்சகர்களின் தலைவனாக இருந்த அப்துல்லாஹ் பின் உபை இப்னு ஸுலூல் என்பவன், இப்பொழுது நடக்கப்போவது போர் அன்று, இது அழிவின் வாயிலில் நுழைவதாகும். ஏனென்றால் தங்களுக்கு உதவி செய்ய வந்திருப்பவர்களே போர் செய்யக்கூடாதென்று தடுக்கப்படுகின்றனர் என்று கூறியவாறு தன்னைப் பின்பற்றும் முன்னூறு பேரையும் அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விட்டான்.

இதன் விளைவாக இஸ்லாமியப் படையில் எழுநூறு வீரர்களே எஞ்சியிருந்தனர். இவர்களின் எண்ணிக்கை, நிராகரிப்பாளர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியை விடவும் குறைவாகவே இருந்தது. போர் ஆயுதங்களைப் பொருத்த வரையில் இஸ்லாமியப் படை மிகவும் பலவீனமானதாக இருந்தது.

ஏனென்றால், நிராகரிப்பாளர்களுள் எழுநூறு பேர் கவசம் அணிந்தவர்களாக இருந்தனர். முஸ்லிம்களுள் நூறு பேர் மட்டுமே கவசம் அணிந்தவர்களாக இருந்தனர். நிராகரிப்பாளர்களுள் இருநூறு பேர் குதிரைப்படை வீரர்களாக இருந்தனர். ஆனால், முஸ்லிம்களிடம் இரண்டு குதிரைகளே இருந்தன.

இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது என்னுமிடத்திற்குச் சென்று அங்குள்ள ஒரு கணவாயில் பாதுகாப்பிற்காக ஐம்பது போர் வீரர்களை நியமித்து அவர்களின் தலைவரிடம் இந்தக் கணவாய் மிக முக்கியமாகக் கண்காணிக்கப்பட வேண்டிய ஓர் இடமாகும். நாங்கள் கொல்லப்பட்டாலும் சரியே. நாங்கள் வெற்றி பெற்றாலும் சரியே. எந்த நிலையிலும் இந்த இடத்திலிருந்து நகர்ந்து விடக்கூடாது என்று வலியுறுத்திக் கூறினார்கள்.

(இப்னு ஷிஹாம் தொகுதி 2 பக்கம் 78)

இதன் பின்னர் அவர்கள் எஞ்சிய 650 பேருடன் பகைவர்களை எதிர்ப்பதற்குப் புறப்பட்டார்கள். இப்பொழுது இவர்களின் எண்ணிக்கை பகைவர்களின் எண்ணிக்கையில் சற்றேறக்குறைய ஐந்தில் ஒரு பகுதியாகவே இருந்தது. போர் தொடங்கிற்று. இறைவனின் பேருதவியினால் 650 முஸ்லிம்களை எதிர்த்துப் போர் செய்த மக்காவின் போர்ப்பயிற்சி பெற்ற மூவாயிரம் போர் வீரர்களும் வெருண்டோடினார்கள்.

### தோல்வியாக மாற்றப்பட்ட வெற்றி

முஸ்லிம்கள் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர். பின்புற கணவாயில் பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டு இருந்தவர்கள் தங்கள் தலைவரிடம் இப்பொழுது பகைவர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். எனவே எங்களையும் போரின் பயனைப் பெற்றுக் கொள்ள விட்டு விடுங்கள் என்றனர். அவர்களின் தலைவர் அவர்களைத் தடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையை அவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

ஆனால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலியுறுத்திக் கூறியது உண்மைதான்; எனினும் பகைவர்கள் வெருண்டோடிய பின்னரும் நீங்கள் இங்கேயே தொடர்ந்து நின்று கொண்டிருக்க வேண்டும் என்பதன்று அதன் கருத்து என்று கூறி விட்டு அந்தக் கணவாயை விட்டு விட்டு மிகுந்த ஆர்வத்துடன் போர்க்களத்திற்குச் சென்றனர்.

வெருண்டோடிய படையில் பின்னர் இஸ்லாத்தின் மாபெரும் தளபதியாகத் திகழ்ந்த காலித் பின் வலீத் என்பவர் தமது கூரிக் கண்களால் பாதுகாப்பற்றிருந்த அந்தக் கணவாயையும் சிலர் மட்டும் தமது தலைவருடன் அங்கு நிற்பதையும் கண்டார். அவர் நிராகரிப்பாளர்களது படையின் மற்றொரு தளபதி அம்ர் இப்னுல் ஆஸை அழைத்து இதோ பின்னால் உள்ள கணவாயைப் பாருங்கள் என்றார். அம்ர் அந்தக் கணவாயைப் பார்த்ததும் தமது வாழ்விற்குக் கிடைக்கவிருக்கும் மிகச் சிறந்த வாய்ப்பாக அதனைக் கருதினார்.

அவ்விரு தளபதிகளும் வெருண்டோடிக் கொண்டிருந்த தமது படைகளை நிறுத்தி சரிசெய்து கொண்டு இஸ்லாமியப் படையின் ஒருபக்கமாக சுற்றிச் சென்று மலையின் மீது ஏறிக் கொண்டார். அங்குள்ள கணவாயில் பாதுகாப்பிற்காக நின்று கொண்டிருந்த சில முஸ்லிம்களைக் கொன்று விட்டு பின்புறமிருந்து இஸ்லாமியப் படையைத் தாக்கினார். வெருண்டோடிக் கொண்டிருந்த நிராகரிப்பாளர்களின் எஞ்சிய படையினர்கள் அவர்களின் வெற்றி முழக்கங்களைக் கேட்டு போர்க்களத்திற்குத் திரும்பினர்.

இந்த தாக்குதல் திடீரென நிகழ்ந்ததாலும் நிராகரிப்பாளர்களைத் தொடர்ந்து விரட்டிச் சென்றதால் முஸ்லிம்கள் பல பகுதிகளிலும் சிதறி விட்டதாலும் அவர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு முறையான இஸ்லாமியப் படை எதுவும் அங்கு இருக்கவில்லை. தனித்தனியாக ஒரு சில முஸ்லிம் வீரர்கள் போர்க்களத்தில் காணப்பட்டனர்.

இவர்களுள் சிலரையும் அவர்கள் கொன்று விட்டனர். இங்கு ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்று எண்ணி சிலர் விரைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி வளையமாக நின்று கொண்டனர். அவர்களைச் சூழ்ந்து நின்றவர்கள் இருபது பேர்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்ற இடத்தை நோக்கி நிராகரிப்பாளர்கள் கடுமையாகத் தாக்கினார்கள். அவர்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்த நபித்தோழர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கொல்லப்பட்டனர். வாள்களால் போர் செய்தவர்கள் மட்டுமின்றி அம்புகளால் போர் செய்தவர்கள் உயரமான குன்றுகளில் நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி சரமாரியாக அம்புகளை எய்தனர்.

அப்பொழுது குறைஷியர்களைச் சார்ந்தவராகவும் மக்காவைத் துறந்து மதீனாவுக்குச் சென்று முஹாஜிர்களைச் சார்ந்தவராகவும் இருந்த தல்ஹா (ரலி) அவர்கள் எதிரிகள் எல்லாரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை நோக்கி அம்புகள் எய்து கொண்டிருப்பதைக் கண்டு தங்களின் கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திற்கு முன்னால் நீட்டியவாறு நின்று கொண்டார்கள்.

அவர்களின் முகத்தை நோக்கி எறியப்பட்ட அம்புகள் எல்லாம் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் கையில் பாய்ந்தன. ஆனால், வீரம் நிறைந்த நம்பிக்கைக்குரிய அந்த நபித்தோழர் தமது கையை சிறிதும் அசைக்கவில்லை. இவ்வாறாக, அம்புகளால் தாக்கப்பட்ட அவர்களின் கை கடுமையான காயத்திற்குள்ளாகி முற்றிலும் பயனற்றதாகி விட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் இஸ்லாத்தின் நான்காம் கிலாஃபத்தின் காலத்தில் முஸ்லிம்களுக்கிடையே உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்தபோது ஒரு பகைவன் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைப் பார்த்து முடவர் தல்ஹாவே என்று இழிவாகக் கூறினான். இது கேட்டு நபித்தோழர் ஒருவர், ஆம்! முடவர்தாம். ஆனால் அவர் தம் கைகளை எங்கு இழந்தார் என்று உமக்குத் தெரியுமா? ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் இந்தக் கை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை எதிரிகளின் அம்புகளிலிருந்து பாதுகாத்ததினால் துண்டிக்கப்பட்டது என்றார்.

உஹதுப் போருக்குப் பின்னர் ஒருவர் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் தங்கள் கையில் அம்புகள் பாய்ந்தபோது தங்களுக்கு வலி ஏற்பட்டவில்லையா? தங்கள் வாயிலிருந்து கதறல் எழவில்லையா? என்று வினவியதற்கு ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், மிகுந்த வலி ஏற்பட்டது. கதறி அழ வேண்டும் என்று மனமும் விரும்பியது. ஆனால் என் நாவிலிருந்து கதறல் ஒலி எழுவதனால் என் கை அசைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் எதிரிகளின் அம்புகள் பாய்ந்து விடக்கூடாது என்பதற்காகவே நான் கதறாமல் இருந்தேன் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி நின்ற இந்த சிலரால் அந்தப் பெரும் படையை எவ்வளவு நேரம் எதிர்க்க முடியும்? நிராகரிப்பாளர்களது ஓர் அணியினர் முன்னேறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்றவர்களைப் பின்வாங்கச் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னந்தனியாக ஒரு சுவரைப் போன்று அங்கு நின்றார்கள். அப்பொழுது வேகமாக வந்த ஒரு கல் அவர்களின் நெற்றியைத் தாக்கியதால் ஆழமான காயம் ஏற்பட்டது. இன்னொரு கல் அவர்களின் தலைக்கவசத்தில் விழுந்ததால் அதிலிருந்த வளையம் அவர்களின் கன்னத்தைக் கிழித்து உள்ளே சென்றது. அம்புகள் அவர்களைத் தொடர்ந்து தாக்கியதால் அவர்கள் மயக்கமுற்றுச் சுற்றி நின்று போர் செய்தவாறு கொல்லப்பட்ட அவர்களின் தோழர்களது உடல்களுக்கிடையே விழுந்து விட்டார்கள்.

(இப்னு ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 84)

இதன் பின்னர் மற்றுஞ் சில நபித்தோழர்கள் அவர்களின் உடலைப் பாதுகாத்துக் கொண்டிருந்தபோது கொல்லப்பட்டார்கள். இவர்களின் சடலங்கள் அவர்கள் உடலின் மேல் விழுந்தன. அவர்களின் உடல் அந்தச் சடலங்களுக்குக் கீழே கிடப்பதைக் கண்ட நிராகரிப்பாளர்கள் அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகக் கருதினர். எனவே மக்கத்துப் படையினர் தங்கள் அணிகளைச் சரி செய்வதற்காகப் பின்வாங்கிச் சென்றனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்றவர்களும் நிராகரிப்பாளர்களின் படையினரால் தாக்கப்பட்டு பின்வாங்கியவர்களுமாகிய நபித்தோழர்களுள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். போர் செய்பவர்கள் எவரும் போர்க்களத்தில் இல்லாமலிருப்பதைக் கண்ட இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக உறுதி கொண்டார்கள்.

பின்னொரு காலத்தில் ரோமானிய மன்னருடனும் பாரசீக மன்னருடனும் ஒரே நேரத்தில் மிகுந்த வீரத்துடன் போராடியவரும் என்றும் பதற்றமடையாத உள்ளத்தையும் அஞ்சா செஞ்சத்தையும் கொண்டிருந்தவருமான அந்த மாபெரும் மனிதரான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு கல்லின் மீது அமர்ந்து கொண்டு குழந்தையைப் போன்று அழத்தொடங்கி விட்டார்கள்.

இந்த நேரத்தில் நபித்தோழர்களுள் ஒருவரான ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் இரவிலிருந்து எதுவும் சாப்பிடாமல் பசியுள்ளவராக இருந்ததால் இஸ்லாமியப் படைக்கு வெற்றி கிடைத்திருக்கும்போது சில பேரீச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு அவற்றை சாப்பிட்டு பசியாறிக் கொள்வதற்காக போர்க்களத்தில் இருந்து வெளியே சென்று விட்டார்கள். அந்த வெற்றியின் மகிழ்ச்சியில் அவர்கள் இங்குமங்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் போர்க்களத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? இஸ்லாத்தின் வெற்றியைக் கண்டு தாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டாமா? அல்லது அழ வேண்டுமா? என்று வியப்புடன் கேட்டதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், மாலிக்

அவர்களே! நீங்கள் வெற்றியைக் கண்டவுடன் போர்க்களத்தில் இருந்து பின்னால் சென்றிருப்பீர்கள் என்றும் இங்கு என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியாது என்றும் நினைக்கிறேன். நிராகரிப்பவர்களின் படை மலை அடிவாரத்திலிருந்து சூழ்ந்து கொண்டு இஸ்லாமியப் படையைத் தாக்கியது. முஸ்லிம்கள் கலைந்து சிதறி விட்டதால் இவர்களுள் எவராலும் அவர்களை எதிர்க்க முடியாது போயிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய சில தோழர்களுடன் அவர்களை எதிர்த்துப் போர் செய்து மரணமடைந்து விட்டார்கள் என்று பதிலளித்தார்கள்.

இது கேட்டு ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள், உமர் அவர்களே! உண்மையிலேயே இவ்வாறு நிகழ்ந்துள்ளதென்றால், தாங்கள் இங்கு உட்கார்ந்து கொண்டு ஏன் அழுது கொண்டிருக்கின்றீர்கள்? நம்மால் நேசிக்கப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த உலகிற்குச் சென்று விட்டார்களோ அதே உலகிற்கு நாமும் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டு, தாம் சாப்பிடுவதற்காக தமது கையில் வைத்திருந்த அந்தக் கடைசி பேரீச்சம் பழத்தைப் பார்த்து, பேரீச்சம்பழமே! மாலிகிற்கும் சொர்க்கத்திற்கும் இடையில் உன்னைத்தவிர வேறு எது தடையாக இருக்கிறது? எனக் கூறி அதை வீசி எறிந்து விட்டு வாளை எடுத்துக் கொண்டு பகைவர்களின் படையினுள் பாய்ந்து சென்றார்கள்.

மூவாயிரம் எதிரிகளை எதிர்த்துப் போராட ஒருவரால் எப்படி முடியும்? எனினும் ஒரே இறைவனை வணங்கும் ஒருவர் பலரை விட மிகவும் உயர்ந்தவராகவே விளங்குகின்றார். ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் மிகுந்த வீரத்துடன் போர் செய்வதைக் கண்ட பகைவர்கள் மிகவும் வியப்படைந்தனர். ஆனால், இறுதியாக அவர்கள் பலத்த காயமடைந்து கீழே விழுந்து விட்டார்கள். கீழே விழுந்தாலும் கூட எதிரிகளை தொடர்ந்து தாக்கினார்கள்.

இதனால் மக்காவாசிகளான நிராகரிப்பாளர்கள் அவர்களை மிகவும் கொடூரமாக எதிர்த்துத் தாக்கினார்கள். போர் முடிந்த பிறகு அவர்களின் உடல் எழுபது துண்டுகளாகக் கிடந்தது. அதனால் அவர்களின் உடலைக் கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. இறுதியில் அவர்களின் சகோதரி, அவர்களின் ஒரு விரலைக் கண்டு இது என் சகோதரரின் உடல் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சூழ்ந்து நின்றவர்களும் நிராகரிப்பவர்களின் பெருங்கூட்டத்தின் திடீர் தாக்குதலால் பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களுமாகிய நபித்தோழர்கள், நிராகரிப்பாளர்கள் பின்வாங்கிச் சென்றவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து ஒருங்கிணைந்து அவர்களின் உடலைத் தாங்கினார்கள். அபூ உபைதா பின் அல் ஜராஹ் என்னும் நபித்தோழர் ஒருவர் தமது பற்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கன்னத்தில் பதிந்திருந்த வளையத்தை பலமாக இழுத்து வெளியே எடுத்தார்கள். இதனால் அவர்களின் இரு பற்கள் உடைந்து விட்டன.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உணர்வு வந்து விட்டது. முஸ்லிம்களை மீண்டும் ஒருங்கிணையுமாறு செய்த நபித்தோழர்கள், போர்க் களத்தின் நான்கு புறத்திற்கும் ஆட்களை விரைவாக அனுப்பினார்கள். சிதறடிக்கப்பட்ட படை மீண்டும் ஒருங்கிணையத் தொடங்கிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை அழைத்துக் கொண்டு மலை அடிவாரத்திற்குச் சென்றார்கள்.

அங்கு சிறிய அளவில் எஞ்சியிருந்த இஸ்லாமியப் படையைக் கண்ட அபூசுஃப்யான், மிகவும் உரத்த குரலில் நாங்கள் முஹம்மது அவர்களைக் கொன்று விட்டோம் என்று முழங்கினார். அப்போது பகைவர்கள் உண்மை நிலையினைத் தெரிந்து கொண்டு தாக்குதல் நடத்தாமலிருப்பதற்காகவும், காயமடைந்த முஸ்லிம்கள் மீண்டும் பகைவர்கள் தாக்குதல்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்காகவும் அபூசுஃப்யானின் அந்த முழக்கத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளிக்கவில்லை,

தமது முழக்கத்திற்கு இஸ்லாமியப் படையிலிருந்து எந்தப் பதிலும் கிடைக்காமலிருந்ததனால், தமது எண்ணம் சரியானதுதான் என்று அபூசுஃப்யான் உறுதிகொண்டார். எனவே, அவர் நாங்கள் அபூபக்கரையும் கொன்று விட்டோம் என்று முழங்கினார். இதற்கும் எந்தப் பதிலும் கொடுக்க வேண்டாம் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

பின்னர் அபூசுஃப்யான் நாங்கள் உமரைக் கொன்று விட்டோம் என்று முழங்கினார். மீண்டும் அபூசுஃப்யான் நாங்கள் மூவரையும் கொன்று விட்டோம் என்று முழங்கினார். தீரம் மிகுந்தவராக விளங்கிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது, அந்த முழக்கத்திற்குப் பதிலாக, இறைவனின் அருளால் நாங்கள் உயிருடனும் இருக்கிறோம். உங்களை எதிர்க்க ஆயத்தமாகவும் இருக்கின்றோம் என்று கூற விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் முஸ்லிம்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து விடாதீர்கள். மவுனமாக இருங்கள் என்று கூறி அவர்களைப் பதில் கூறாமல் இருக்கச் செய்தார்கள்.

இப்பொழுது நிராகரிப்பாளர்களுக்கு, இஸ்லாத்தைத் தோற்றுவித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும்., அவர்களின் வலக்கையாகவும் இடக்கையாகவும் இருந்த இருவரையும் தாங்கள் கொன்று விட்டதாக உறுதி ஏற்பட்டது. எனவே அபூசுஃப்யானும் அவருடைய நண்பர்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன், உஃலு ஹுபுல்; உஃலு ஹுபுல் அதாவது நமது கண்ணியத்திற்குரிய ஹுபுல் வாழ்க! நமது கண்ணியத்திற்குரிய ஹுபுல் வாழ்க!! இன்று சிலை இஸ்லாத்தை முற்றாக அழித்து விட்டது என்று முழங்கினார்கள்.

காயமடைந்த முஸ்லிம்களை நிராகரிப்பாளர்களின் படை மீண்டும் கடுமையாகத் தாக்கி, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு மிகக்குறைவாக இருந்த முஸ்லிம்களைக் கொன்று விடக் கூடாதே என்பதற்காக, தாங்கள் மரணமடைந்து

விட்டதாக அறிவிக்கப்பட்டதற்கும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டதற்கும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டதற்கும் பதில் ஏதும் கூறாமல் மவுனமாக இருக்குமாறு அறிவுரை கூறிக் கொண்டிருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரே இறைவன் என்ற கொள்கையின் கண்ணியம் கேள்விக்குரியதாகி அவனுக்கு இணை வைத்தல் என்னும் ஷிர்க்கின் முழக்கம் அந்தப் போர்க்களத்தில் செய்யப்பட்டபோது, அவர்களின் ஆன்மாவுக்கு அமைதியின்மை ஏற்பட்டது.

எனவே அவர்கள், தங்கள் தோழர்களைப் பார்த்து மிகுந்த கோபத்துடன், இதற்கு நீங்கள் ஏன் பதில் கூறாமல் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் என்ன பதில் கூற வேண்டும்? என்று அந்தத் தோழர்கள் வினவியதற்கு, அல்லாஹு அஃலா வ அஜல்லு; அல்லாஹு அஃலா வ அஜல்லு – அல்லாஹ் மட்டுமே மிகவும் உயர்வானவன்; அவன் மட்டுமே எல்லா வல்லமைகளையும் உடையவன்; அல்லாஹ் மட்டுமே மிகவும் உயர்வானவன்; அவன் மட்டுமே எல்லா வல்லமைகளையும் உடையவன் என்று பதில் கூறுங்கள்.

(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 270)

மேலும் ஹுபுல் சிலையின் மகத்தும் உயர்ந்து விட்டதென்று நிராகரிப்பாளர்களாகிய நீங்கள் கூறுவது பொய். இணை துணையில்லாத அல்லாஹ்வே மகத்துவத்திற்குரியவன் என்று பதில் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் தாங்கள் உயிருடன் இருக்கும் செய்திகளைப் பகைவர்களுக்குத் தெரிவித்தார்கள். வீரம் செறிந்த இந்த பதிலைக் கேட்ட நிராகரிப்பாளர்களின் படைக்குப் பெரும் நடுக்கம் ஏற்பட்டு விட்டது. இந்தப் பதிலால், அவர்களின் நம்பிக்கைகளெல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன. அவர்களுக்கு முன், விரல் விட்டு எண்ணும் அளவிற்கு மிகக்குறைவானவர்களும் காயமடைந் தவர்களுமாகிய முஸ்லிம்கள் நின்றனர். போர் நியதிகளின் அடிப்படையில் பார்த்தால் மிகவும் எளிதாக அந்த முஸ்லிம்களைத் தாக்கிக் கொன்றிருக்கலாம்.

இவ்வாறிருந்தும் கூட, அவர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தத் துணிவு கொள்ள முடியாதவர்களாகி விட்டனர். அவர்களுக்குக் கிடைத்த சிறிதளவு வெற்றியில் பூரிப்படைந்து, மக்காவுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். மேற்போக்காகப் பார்க்கும்போது உஹது போரில் முஸ்லிம்களுக்கு கிடைத்த வெற்றி தோல்வியாக மாறியது. ஆனால் உண்மையிலேயே இந்தப்போர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கு மாபெரும் ஓர் அடையாளமாக விளங்குகிறது.

இந்தப் போரில் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப முஸ்லிம்களுக்கு முதலில் வெற்றி கிடைத்தது. அடுத்து அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். பின்னர் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இந்தப் போரின் தொடக்கத்திலேயே நிராகரிப்பாளர்களது படைத்தளபதி கொல்லப்பட்டார். இதன் பின்னர் அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, அவர்களும் காயமடைந்து, அவர்களுடைய தோழர்களுள் பலரும் ஷஹீதானார்கள்.

இவை மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மகத்தான பற்றையும் நம்பிக்கையையும் மிகத் தெளிவாகக் காட்டும் ஓர் அரிய வாய்ப்பு கிடைத்தது. இத்தகு பற்றுக்கும் நம்பிக்கைக்கும் ஓர் எடுத்துக்காட்டை வரலாற்று ஏடுகளில் எங்கும் காண முடியாது. இவற்றை எடுத்துக்காட்டும் சில நிகழ்ச்சிகள் இதற்கு முன் விளக்கப்பட்டுள்ளன. இன்னொரு நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அவர்களைத் தேடிச் சென்ற நபித்தோழர் ஒருவர், போர்க்களத்தில் காயமடைந்து கிடந்த மதீனாவைச் சேர்ந்த ஒரு முஸ்லிமிடம் சென்றபோது, அவரது நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருந்ததையும் அவரது உயிர் பிரியும் நிலையில் இருந்ததையும் கண்டு அவரிடம் அஸ்ஸலாமு அலைக்கும் (உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக) என்று கூறினார். அவர் நடுங்கிக் கொண்டிருந்த தமது கையை உயர்த்தி நபித்தோழருடைய கையைப் பிடித்துக் கொண்டு எவராவது ஒரு சகோதரர் இங்கு வந்து என்னைச் சந்திப்பார் என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் என்றார்.

நபித்தோழர் அவரிடம், உங்களது நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறதே! நீங்கள் உங்கள் உறவினர்களுக்குத் தெரிவிக்க விரும்பும் தூதுச் செய்தி ஏதாவது இருக்கிறதா என்று கேட்டார்.

மரணமடையும் நிலையிலிருந்த அவர், ஆம்; இருக்கிறது. நீங்கள் என் சார்பாக என்னுடைய ஸலாமை என் குடும்பத்தினர்களுக்குக் கூறுங்கள். நான் சிறிது நேரத்தில் மரணமடைந்து விடுவேன். ஆனால் நான் எனக்குப் பின்னால் இறைவனால் ஒப்படைக்கப்பட்ட – மிகவும் மதிக்கத்தக்க – புனிதமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உங்களுக்கிடையே விட்டுச் செல்கிறேன்.

எனவே என் சகோதரர்களே! என் குடும்பத்தினர்களே! அவர்கள் இறைவனுடைய உண்மையான தூதர் ஆவார்கள். ஆகவே நீங்கள் அவர்களைப் பாதுகாப்பதில் உங்கள் உயிர்களைக் கூட அர்ப்பணிக்கத் தயங்கமாட்டீர்கள் என்றும் என் வாழ்வின் இறுதிப் போதனையாகிய இதனை நினைவில் கொள்வீர்கள் என்றும் நான் நம்புகிறேன் என்றார்.

மரணமடைகின்ற நிலையிலிருக்கும் ஒருவருடைய உள்ளத்தில் தமது உறவினர்களுக்குத் தெரிவிப்பதற்கு ஆயிரக்கணக்கான செய்திகள் தோன்றும். ஆனால், நபித்தோழர்களாகிய இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் இருந்ததனால், இவர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் பற்றிய ஞாபகமோ, செல்வங்களைப் பற்றிய ஞாபகமோ சிறிதும் இல்லாதிருக்கும் அளவிற்குத் தன்னலமற்றவர்களாக விளங்கினர். இவர்களுக்கு ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பற்றி மட்டுமே ஞாபகமிருந்தது.

ஏனென்றால், உலகின் ஈடேற்றமே அவர்களுடன் தொடர்பு கொண்டாகும். நம்முடைய மரணத்திற்குப் பின்னர் நம்முடைய குழந்தைகள் உயிருடனிருந்தால், அவர்களால் அப்படியொன்றும் பெரும் சாதனைகள் புரிந்து விட முடியாது. ஆனால், உலகின் ஈடேற்றத்திற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதில் தங்களின் உயிர்களை அர்ப்பணம் செய்தால் நம்முடைய குடும்பம் அழிந்து விட்டாலும் உலகம் உயிர் பெற்றதாகி விடும். ஷய்த்தானின் பிடியில் சிக்கிக் கிடக்கும் மனிதன் ஈடேற்றம் பெறுவான். நம் குடும்பங்களின் வாழ்வை விடப் பல்லாயிரக்கணக்கான மடங்கு அதிக மதிப்புள்ளது மனித குலத்தின் வாழ்வும் அதன் ஈடேற்றமுமாகும் என்பதை இவர்கள் நக்கு தெரிந்திருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமடைந்து கிடந்தவர்களையும், போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களையும் ஒன்று திரட்டினார்கள். காயமடைந்திருந்தவர்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. உயிர்த்தியாகிகளை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது. இந்த நேரத்தில், அநியாயக்காரர்களான நிராகரிப்பாளர்கள், கொலை செய்யப்பட்ட சில முஸ்லிம்களின் மூக்கையும் காதுகளையும் அறுத்திருந்தது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிய வந்தது. மூக்கு, காது துண்டிக்கப்பட்டவர்களுள் அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

இக்காட்சியைக் கண்டு அவர்களுக்குப் பெருந் துயரம் ஏற்பட்டது. தகாத செயல்கள் என்று நாம் கருதியவற்றை நிராகரிப்பாளர்கள், இவ்வாறு கீழ்த்தரமாகப் பழிவாங்குவதன் மூலம் தங்களுக்கு ஏற்ற செயல்களாக்கி விடடனர் என்று அவர்கள் கூறினார்கள். அப்போது இறைவனிடமிருந்து அவர்களுக்கு, நிராகரிப்பாளர்கள் செய்பவற்றைச் செய்ய விட்டு விடுவீராக; நீர் என்றென்றும் அருள் செய்வதையும் நீதியாக நடப்பதையும் மேற்கொள்வீராக என்று இறையறிவிப்பு வந்தது.

### உஹது போருக்குப் பின்னர் மதீனா மக்கள் காட்டிய தியாக உணர்வு

உஹது போர் முடிந்து இஸ்லாமியப் படை மதீனாவை வந்தடைவதற்கு முன்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றும் இஸ்லாமியப் படை சிதறிப் போய்விட்டது என்றும மதீனாவுக்குத் தவறான செய்தி கிடைத்தது. மதீனாவின் பெண்களும் சிறுவர்களும் பைத்தியம் பிடித்தவர்கள் போன்று மிக வேகமாக உஹது போர்க்களம் நோக்கி விரைந்தனர்.

இவர்களுள் பெரும்பாலாருக்கு வழியிலேயே உண்மையான செய்தி கிடைத்துத் திரும்பி விட்டனர். ஆனால் பனூ தீனார் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண் பைத்தியம் பிடித்தவர் போன்று விரைந்து சென்று உஹதுப் போர்க்களத்தை அடைந்தாள்.

அந்தப் பெண்ணின் கணவரும், சகோதரரும், தந்தையும் உஹது போரில் கொல்லப்பட்டனர். மற்றும் சில அறிவிப்புகளில் அவர்களுடைய ஒரு மகனும் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவள் பைத்தியம் போன்று உஹதுப் போர்க்களம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரத்தில் அவளுடைய தந்தை கொல்லப்பட்ட செய்தி அவளிடம் கூறப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? என்பதை எனக்குத் தெரிவியுங்கள் என்று வினவினாள்.

இந்த செய்தியை அறிவித்தவருக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு நலமாகத் திரும்பிக் கொண்டிருப்பது தெரியுமாதலால் அவர், அவர்களின் நலன் குறித்துத் தெரிவிக்காமல், அவளுடைய சகோதரர், கணவர், மகன் ஆகியவர்கள் கொல்லப்பட்ட செய்தியை அவளிடம் கூறிக் கொண்டிருந்தார். ஆனால் மாஃபஅல ரஸூலுல்லாஹி (ஸல்) – ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன காரியம் செய்து விட்டார்கள்? என்றே வினவிக் கொண்டிருந்தாள்.

வெளிப்படையாகப் பார்க்கும்பொழுது, அவர் கூறிய இந்தச் சொற்றொடர் தவறானதாகத் தெரியலாம். இதனால் தான் வரலாற்றாசிரியர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது என்பதே இத்தொடரின் கருத்து என்று வரைந்துள்ளார்கள்.

ஆனால் உண்மையிலேயே இந்தச் சொற்றொடர் தவறானதன்று. மாறாக, பெண்களின் மொழி வழக்கிற்கேற்ப முற்றிலும் சரியானதேயாகும். பெண்களின் உணர்வுகள் மிகவும் தீவிரமானவையாக உள்ளன. சில சமயங்களில் அவர்கள் மரணமடைந்தவர்கள் உயிருள்ளவர்களாகக் கருதி அவர்களிடம் பேசுகின்றனர். சில பெண்களின் கணவர்கள் அல்லது ஆண் மக்கள் மரணமடைந்து விட்டால், அவர்களை நோக்கி, நீங்கள் எங்களை எவர்களிடம் விட்டுச் செல்கின்றீர்கள்? மகனே! வயதாகி விட்ட என்னை விட்டு விட்டு எங்கே சென்று விட்டாய்? என்பன போன்ற வாக்கியங்களைக் கூறுகின்றனர்.

ஆழ்ந்த வருத்தத்தின் காரணமாக மனித இயல்பின் ஒரு நுட்பமான வெளிப்பாடாகும் இது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண செய்தியைக் கேட்ட அந்தப் பெண்ணிற்கும் அவ்வாறான நிலை ஏற்பட்டது. அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை அவள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. மறுபுறம் அந்தச் செய்தியை மறுக்கவும் அவளால் முடியவில்லை.

எனவே, ஆழ்ந்த வருத்தத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன காரியம் செய்து விட்டார்கள்? அதாவது நம்பிக்கைக்குரிய இத்தகு உயர்வான தலைவர், எங்களுக்குப் பிரிவின் பெருந் துன்பங்களை அளிக்க எவ்வாறு விருப்பம் கொண்டு விட்டார்கள்? எனக் கூறிக் கொண்டிருந்தாள். தமது தந்தை, சகோதரர், கணவர் ஆகியவர்கள் மரணமடைந்தது பற்றி அவள் சிறிதும் பொருட்படுத்தாமலிருந்ததை அந்த நபித்தோழர் கண்ட போது,

அவளது உண்மையான உணர்வுகளை அவர் புரிந்து கொண்டு அவளிடம், நீங்கள் விரும்புவது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் அருளால் உயிருடன் நலமாக இருக்கிறார்கள் என்றார்.

அப்படியனால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை எனக்குக் காட்டுங்கள் என்று அவள் கேட்டதற்கு, அவர்கள் இருக்கும் இடத்தை சுட்டிக் காட்டி, அவர்கள் அதோ இருக்கிறார்கள். அங்கே செல்லுங்கள் என்று அவர் கூறியதும், அவள் மிக விரைவாக அவர்களிடம் சென்று, அவர்களின் மேலாடையைப் பிடித்து முத்தமிட்டு, இவ்வாறு கூறினாள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம்; தாங்கள் நலமாக இருக்கும்போது வேறெவரின் மரணத்தைப் பற்றியும் நான் பொருட்படுத்தமாட்டேன் என்று கூறினாள்.

மேற்கூறப்பட்டது போன்று இந்தப் போரில் முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தங்கள் நம்பிக்கையின் முன்மாதிரியையும் தங்கள் பற்றின் முன்மாதிரியையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

கிறிஸ்தவ எழுத்தாளர்கள் மரியம் மகதலேனாவும் அவளுடைய தோழிகளும் காலை நேரத்தில் பகைவர்களுக்குத் தெரியாமல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் கல்லறைக்குச் சென்று காட்டிய வீரத்தைக் குறித்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் பனூ தீனார் கோத்திரத்தைச் சார்ந்த இந்தப் பெண் காட்டிய பற்றுக்கு இதனை ஒப்பிட முடியுமா? நான் அவர்களிடம் கேட்கின்றேன்:

கிறிஸ்தவர்களே! இங்கு வந்து, என் அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தூய்மையான பற்றுக் கொண்டவர்களும் அவர்களுக்காகத் தியாகம் செய்தவர்களும் எவ்வாறான நிலைகளில் அன்னாருக்கு உதவியளித்தார்கள்? எவ்வாறான நிலைமைகளில் அவர்களெல்லாம் ஏகத்துவம் என்னும் கொடியை எவ்வாறு உயரச் செய்தார்கள்? என்பதைப் பாருங்கள்.

இத்தகு தியாகத்திற்கு இன்னொரு எடுத்துக்காட்டும் வரலாற்றில் காணப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் உயர்த்தியாகம் செய்தவர்களை நல்லடக்கம் செய்து விட்டு மதீனாவுக்குத் திரும்பியபோது, பெண்களும் சிறுவர்களும் நகரத்திற்கு வெளியே அவர்களை வரவேற்பதற்காகப் புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த ஒட்டகத்தின் கயிற்றை மதீனாவின் தலைவர் சஅது பின் மஆஸ் (ரலி) அவர்கள் பிடித்துக் கொண்டு, நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலமாக எங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டோம் என்று மிகுந்த பெருமிதத்தோடும் உற்சாகத்தோடும் உலகிற்குப் பகிரங்கமாக அறிவிப்பது போல் பீடுநடை போட்டுக் கொண்டு மிக விரைவாக முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது நகருக்குப் பக்கத்தில், தமது வயது முதிர்ந்த பார்வை குறைந்த தாயார் வந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். உஹது போரில் அவளுடைய ஒரு மகன் அம்ரு பின் மஆது என்பவரும் கொல்லப்பட்டிருந்தார். தமது தாயாரைக் கண்டு, சஅது பின் மஆஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதோ என் தாயார் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறியதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் முன்னோக்கி வரட்டும் என்றார்கள்.

அந்த முதியவள் முன்னேறிச் சென்று, தமது பலவீனமான கண்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் தெரிகிறதா என்று இங்கும் அங்கும் பார்த்தாள். இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளங்கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவளிடம், தாயே! உமது மகன் போரில் உயிர்த்தியாகம் செய்ததற்காக உமக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியதற்கு, எனது எஜமானரே! தாங்கள் நலமாக இருப்பதை நான் கண்டு விட்டேனாதலால் என்னுடைய எல்லாத் துன்பத்தையும் பொரித்துச் சாப்பிட்டு விட்டேன் என்று அவள் கூறினாள்.

துன்பத்தை பொரித்துச் சாப்பிட்டு விட்டேன் என்ற தொடர், மிகவும் வியக்கத்தக்கதாகவும் அன்பிற்குரிய மிக ஆழமான உணர்ச்சியினை எடுத்துக் காட்டக்கூடியதாகவும் அமைந்துள்ளது. துன்பமானது மனிதனைச் சாப்பிட்டு விடுகின்றது.

ஆனால் தனது முதிர்ந்த வயதில் தனக்கு ஊன்றுகோலாக இருந்த மகனை இழந்த அந்தப் பெண்ணோ மிகுந்த வீரத்துடன், என் மகனை இழந்ததனால் ஏற்படும் கவலையானது என்னை எப்படிச் சாப்பிட முடியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்றால், நான் அந்தக் கவலையைச் சாப்பிட்டு விடுவேன்.

என் மகனின் மரணம் என்னைச் சாப்பிடுவதற்குக் காரணமாக இருக்காது. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அவன் தனது உயிரைத் தியாகம் செய்துள்ளான் என்ற எண்ணமானது, எனக்கு மேலும் வலுவூட்டுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்று கூறினாள்.

மதீனாவாழ் மக்களே! என் உயிர் உங்களுக்கு அர்ப்பணம். நீங்கள் எவ்வளவு அதிகமான நன்மையைப் பெற்று விட்டீர்கள்!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....**

நமது நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளிப்பட்டது போன்று வேறு எந்த நபியிடமிருந்தும் இந்த அளவு அற்புதங்கள் வெளிப்பட்டதில்லை. ஏனென்றால், முந்தைய நபிமார்களின் அற்புதங்கள் அவர்கள் மரணித்ததோடு மரணித்து விட்டன. ஆனால் நமது நபி (ஸல்) அவர்களது அற்புதங்கள் இதுவரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை கியாமத் வரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

(ததிம்மா ஹகீக்கத்துல் வஹீ பக்கம் 35)

**:பஸல் ஹமீது இலாஹி**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், திட்டச்சேரி

2018 ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு

# மனிதத்துவத்தை கண்ணியப்படுத்துதல் என்ற அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிமுறை

முஹம்மது இனாம் கோரி, நாஸிர் ஆலா சத்ர் அஞ்ஜுமன் அஹ்மதிய்யா காதியான்
மொழியாக்கம்: மவ்லவி O.M. முஸம்மில் அஹ்மது சாஹிப்

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَلَقَدْ كَرَّمْنَا بَنِيْٓ اٰدَمَ وَحَمَلْنٰهُمْ فِي الْبَرِّ وَالْبَحْرِ وَرَزَقْنٰهُمْ مِّنَ الطَّيِّبٰتِ وَفَضَّلْنٰهُمْ عَلٰى كَثِيْرٍ مِّمَّنْ خَلَقْنَا تَفْضِيْلًا۔

அதாவது நாம் நிச்சயமாக ஆதமுடைய மக்களுக்கு (மிகுந்த) சிறப்பினை வழங்கி, நிலத்திலும், நீரிலும் அவர்களுக்காக வாகனங்களை படைத்துத் தூய்மையான பொருட்களிலிருந்து அவர்களுக்கு உணவளித்துள்ளோம். நாம் படைத்த படைப்பின் ஒரு பெரும் பகுதியின் மீது நாம் அவர்களுக்கு (மகத்தான) சிறப்பினை வழங்கியுள்ளோம். (17:71)

ஒரு ஹதீஸே குத்ஸி இருக்கிறது. அதில் அல்லாஹ்வின் கூற்றை ஆதாரமாகக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''اَرَدْتُ اَنْ اُعْرَفَ فَخَلَقْتُ اٰدَمَ''

அதாவது நான் அறியப்பட வேண்டும் என விரும்பினேன். இந்த நோக்கத்திற்காக நான் ஆதமைப் படைத்தேன்.

(இஸ்மாயீல் பின் முஹம்மதில் உஜ்லானி இயற்றிய முஸீலுல் கிஃபாயி வல் அல்பாஸி தொகுதி 2 பக்கம் 132)

இன்னொரு ஹதீஸில் அல்லாஹ் கூறியதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

''خَلَقَ اللّٰهُ اٰدَمَ عَلٰى صُوْرَتِهٖ''

அதாவது அல்லாஹ் ஆதமை தனது வடிவத்தில் படைத்திருக்கிறான்.

(புகாரி. கிதாபுல் இஸ்திஹ்ஸான். பாபு பத்வுல் அஸான்)

இதன் பொருள், மனிதன் இறைவனின் பண்புகள் மற்றும் குணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடியாக இருக்கிறான். ஆனால் அப்படி இருப்பதற்கு அவன் உண்மையான பொருளில் நம்பிக்கையாளராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். இப்போது நாம் பார்க்க வேண்டியது, மனிதன் என்பதன் உண்மை நிலை என்ன? என்பதாகும்.

எனவே நினைவில் கொள்ள வேண்டும். (மனிதன் என்பதைக் குறிப்பிடும்) 'இன்ஸான்' என்பது ஓர் அரபிச் சொல்லாகும். அதாவது எவரிடம் இரண்டு 'உன்ஸ்' என்னும் அன்புகள் காணப்படுகின்றனவோ அவர் மனிதன் என்று அழைக்கப்படுகிறார். அந்த இரண்டு அன்புகளில் ஒன்று, இறைவனிடம் அன்பு; இன்னொன்று இறைவனின் படைப்பினங்களுடன் அன்பு.

அல்லாஹ் எல்லா மனிதர்களின் இயல்பிலும் இந்த இரண்டு அன்புகளையும் வைத்திருக்கின்றான். சிலரிடம் இந்த அன்பின் பொலிவு அதிகமாக காணப்படுகிறது; இன்னும் சிலரிடம் குறைவாகக் காணப்படுகிறது என்பது வேறு விஷயமாகும். சிலரிடம் தனது செயல்களுடைய விளைவுகளின் காரணமாக முற்றிலும் மங்கலாய்ப் போய் விடுகிறது. அதன் காரணமாக அவருக்கும் விலங்குகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் காணப்படுவதில்லை.

மக்களில் இந்த இரு அன்புகளும் தனது முழுமைத்தன்மையை அடைந்திருந்த ஒரு மனிதரையும் அல்லாஹ் படைத்திருக்கிறான். அவர் இறையன்பிலும் இறை நெருக்கத்திலும் மேலே ஏறிக் கொண்டே சென்றார். எதுவரை என்றால், عَشِقَ مُحَمَّدٌ رَبَّهٗ அதாவது முஹம்மது (ஸல்) தனது இறைவனை நேசிக்கக் கூடியவராக ஆகி விட்டார் என எதிரிகளும் கூறும் அளவுக்கு இறைவனிடத்தில் அவர்கள் தன்னை மாய்த்துக் கொண்டார்கள்.

பிறகு படைப்பினங்களின் பக்கம் கவனம் செலுத்தியபோது படைப்பினங்களிடம் அனுதாபம் காட்டுவதில் எந்த அளவுக்கு மூழ்கினார்கள் என்றால், அவர்களைப் பற்றி அர்ஷிலிருந்து, رَحْمَةٌ لِّلْعٰلَمِيْنَ (அனைத்துலகங்களுக்கும் அருட்கொடையானவர்), ரவூஃபுர் ரஹீம் (பரிவு காட்டுபவர், கருணை காட்டுபவர்) என்ற பட்டம் கிடைத்தது.

எனவே இறைவன் மீதும், இறைப்படைப்பினங்கள் மீதும் அன்பு, நெருக்கம், அனுதாபம் காட்டுதல் ஆகியவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றார்கள். அதன் காரணமாக அவர்கள் முழுமையான மனிதர் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான மனிதன் ஆவார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான நேசம் கொண்டவரும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும் ஆகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை மிகவும் மாய்த்துக் கொண்ட நிலையில் இவ்வாறு கூறகிறார்கள்:

''மனிதனுக்கு வழங்கப்பட்ட அதாவது முழுமையான மனிதனுக்கு வழங்கப்பட்ட ஒளி வானவர்களிடம் இருந்ததில்லை; நட்சத்திரங்களிடம் இருந்ததில்லை. சந்திரனிடம் இருந்ததில்லை. சூரியனிடம் இருந்ததில்லை. பூமியிலுள்ள கடல்களிலும் ஆறுகளிலும் இருந்ததில்லை. அது மாணிக்கத்திலோ, மரகதத்திலோ, நீலக்கல்லிலோ, வைரத்திலோ, முத்திலோ, வைடூரியத்திலோ இருந்ததில்லை. சுருக்கமாக அது வானங்கள், பூமி ஆகியவற்றின் எந்த பொருளிலும் இருந்ததில்லை. அது முழுமையான மனிதனிடம் மட்டுமே இருந்தது; அதன் நிறைவானதும், முழுமையானதும், உயர்வானதும், மேலானதுமான நபர் நமது தலைவரும்

எஜமானரும், நபிமார்களின் தலைவரும், உயிருள்ளவர்களுக்கு தலைவரும் ஆகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.''

(ஆயினா கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 160,161)

அந்த முழுமையான மனிதர் மனிதத்துவத்தின் கண்ணியத்தை எந்தெந்த வகையில் நிலைநாட்ட முயற்சி செய்தார்கள் என்பதைப் பற்றிய சில துளிகளை இன்றைய இந்த மாநாட்டில் நேரத்தைக் கருத்திற் கொண்டு எடுத்து வைப்பேன் – வபில்லாஹித் தவ்ஃபீக். (அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்குவதற்கேற்ப)

கண்ணியத்திற்குரிய செவியேற்பவரே! சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன் மனிதத்துவத்திற்கு எந்தவொரு கண்ணியமும் இல்லாதிருந்தது. மனித உரிமைகள் என்பது பற்றிய எந்த சிந்தனையும் இல்லாதிருந்தது. எவரிடம் தடி இருக்குமோ அவருக்கே எருமை மாடு சொந்தம் என்ற பழமொழிக்கேற்ப கொள்கை நிலைபெற்றிருந்தது. பெண்கள், அடிமைகள், அடிமைப் பெண்கள் ஆகியோர் பலவீனமான உரிமைகளைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டு வந்தனர்.

அந்த காலத்தில் அரபு நாட்டில் மட்டுமின்றி நாகரீகமான எல்லா நாடுகளிலும் கூட வெற்றி பெற்ற சமுதாயங்கள் தமது கைதிகளை அடிமைகளாக்கும் பழக்கம் பொதுவானதாக இருந்தது. போர் இன்றி பொதுவாகக் கூட ஏழைகள், ஆதரவற்றவர்கள் ஆகிய ஆண்களையும் பெண்களையும் விற்று விடுவதும் அடிமைகளாக்கி விடுவதுமான அநீதியான வழக்கம் இருந்து வந்தது.

ஆனால் முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடிமைகளை விடுவிப்பதற்கான தொடரை ஆரம்பித்து வைத்தார்கள். அன்னாரின் துணைவி ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் திருமணத்திற்குப் பிறகு தனது செல்வங்கள், அடிமைகள் ஆகியோரை அன்னாரிடம் ஒப்படைத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா அடிமைகளையும் விடுதலை செய்து விட்டார்கள். விடுதலையான ஒரு நபரை அவரது ஏழ்மை, இயலாமையின் காரணமாக விற்று விடுவதையும் அடிமைத்தனத்தின் சங்கிலியில் பிணைப்பதையும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் சுதந்திரமான நபரை விற்று விடுகிறாரோ அவரை சுவர்க்கத்தின் காற்று கூடத் தொடாது.

(புகாரி. கிதாபுல் பைஃ)

மேலும் திருக்குர்ஆன் அதிகாரம் 47 வசனம் 5–ல் கூறப்பட்டிருப்பதாவது, எவர்கள் போரில் கைதியாகி வருகின்றார்களோ அவர்களை அருள் பாலித்தவாறு விடுதலை செய்து விடுவதும் அல்லது ஈட்டுத் தொகை பெற்று விடுதலை செய்து விடுவதும் பொருத்தமானதாகும். இந்த இறைக் கட்டளையை செயல்படுத்தியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி எண்ணற்ற நிகழ்வுகளால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. ஒரு நிகழ்வைப் பற்றி மட்டும் கூறுகிறேன்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) பின் ஹரிஸ் அவர்களை ஓர் அடிமை என்ற அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்தபோது அன்னார் அவரை விடுதலை செய்து விட்டது மட்டுமல்லாமல் அவரை வளர்ப்பு மகனாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அவருடன் எந்த அளவுக்கு அன்புடனும் பரிவுடனும் நடந்து கொண்டார்கள் என்றால் ஸைது அவர்களின் உண்மையான பெற்றோர்கள் அவரைத் தேடியவாறு வந்து அவரை தம்முடன் அழைத்துக் கொண்டு செல்ல விரும்பியபோது அவர்கள் பெற்றோருடன் செல்ல மறுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருப்பதற்கு முன்னுரிமை வழங்கினார்கள். பிறகு விடுதலை செய்யப்பட்ட அடிமையாகிய ஸைதின் மகன் உஸாமாவுக்கு எந்த அளவுக்கு கண்ணியமளித்தார்கள் என்றால், தமது வாழ்நாளின் கடைசி நாட்களில் ஆயத்தம் செய்த படைக்கு உஸாமா அவர்களையே படைத் தளபதியாக ஆக்கினார்கள்.

எனவே நாம் சமுதாயத்தின், சமூகத்தின் பலவீனமானவர்கள், சீர்குலைந்தவர்கள் ஆகியோருடன் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதன் மூலமாகவே மனிதத்துவத்தின் கண்ணியம் வெளிப்பட முடியும். இல்லை என்றால் நாகரிகமான சமுதாயம் என்று அழைக்கப்படுகின்ற இன்றைய காலகட்டத்திலும் நாள்தோறும் வேலையாட்களுடனும், தொழிலாளர்களுடனும் விலங்குகளைப் போன்று நடந்து கொள்வதை நாம் பார்க்கின்றோம். ஆனால் மனிதத்துவத்தின் மீது பேரருள் புரிந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். புகாரி கிதாபுல் இத்க் –ன் ஒரு ஹதீஸின் மொழியாக்கம் இதுவாகும்:

''உங்கள் அடிமைகள் உங்களின் சகோதரர்கள் ஆவர். எனவே ஒருவரின் கீழ் ஓர் அடிமை இருக்கின்றார் என்றால் அவர், தான் உண்ணும் உணவையே அவருக்கும் உண்ணக் கொடுக்க வேண்டும்; தான் அணியும் ஆடையையே அவருக்கும் அணியக் கொடுக்க வேண்டும். நீங்கள் உங்கள் அடிமைக்கு அவருடைய சக்திக்கு அப்பாற்பட்ட சுமையைச் சுமத்தாதீர்கள். அப்படிப்பட்ட வேலையை அவருக்கு நீங்கள் கொடுத்தால் நீங்களும் அதில் அவருக்கு உதவி செய்யுங்கள்.''

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டல்கள் மற்றும் செயல் வடிவிலான முன்மாதிரிகளுக்கு நபித்தோழர்கள் முழுமையாக கட்டுப்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களைப் பற்றி வருகிறது: அவர்கள் ஓர் ஆடை அணிந்திருந்தார்கள். அவர்களுடைய அடிமையும் அதே மாதிரியான ஆடையை அணிந்திருந்தார். அவ்வாறே நபித்தோழர்கள் எங்கேயாவது தமது அடிமைகளுடன் பயணத்தில் செல்லும்போது வாகனம் ஒன்று இருக்குமென்றால் தாமும் வாகனத்தில் அமர்ந்து செல்வார்கள். சில நேரத்தில் அடிமையையும் வாகனத்தில் அமர வைப்பார்கள்; தாம் நடந்து செல்வார்கள்.

இவ்வாறே சமூகத்தில் பெண்களும் மிகவும் பலவீனமானவர்களாகவும் அநீதிக்குட்பட்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில் பெண்கள் மனிதர்களாகவே கருதப்படவில்லை. பெண் குழந்தை பிறப்பதை எந்த அளவுக்கு அபசகுனமாகக் கருதப்பட்டு வந்ததென்றால் எந்த வீட்டில் பெண் குழந்தை பிறந்ததோ அவர் சமுதாயத்தில் முகத்தை மறைத்துக் கொண்டு சென்றனர். சில கல்நெஞ்சம் கொண்ட தீயவர்கள் தமது பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்து வந்தனர்.

செவிமடுத்துக் கொண்டிருக்கும் கண்ணியத்திற்குரியவர்களே! இது திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றில் காணப்படுகின்ற 1400 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அறியாமைக் காலத்தின் நிலையாகும். ஆனால் இன்றைய நாகரிகமான காலத்திலும் பாருங்கள். மனித இனத்தின் சம உரிமை மற்றும் ஆண்கள் பெண்களுக்கு மத்தியிலான எல்லா வித்தியாசத்தை நீக்குவதாக வாதிடுபவர்கள் கூட ஏதாவதொரு கருவுற்ற பெண்ணுக்கு அல்ட்ரா சவுண்டு கொடுப்பதன் மூலமாக கருவில் வளர்வது ஆணா? பெண்ணா? எனக் கண்டறியப்படுவது சட்டப்படி குற்றம் எனக் கருதப்படுகிறது.

இன்றைய காலத்தில் மருத்துவமனைகளின் வெளியில் இந்த விதமான போர்டுகளை பார்க்க முடிகிறது. இது ஏன்? ஏனெனில் இன்றும் சில வீடுகளில் பெண் குழந்தைகள் பிறப்பதை அபசகுனமாகக் கருதப்படுகிறது. கருவில் பெண் வளர்கிறாள் என்பது தெரிய வந்தால், அந்தக் கருவைக் கலைப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது.

ஆனால் மனிதத்துவத்திற்கு பேருதவி புரிந்தவராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களின் சிறந்த கல்வி, மார்க்கப் பயிற்சி ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

''எவர் தமது இரண்டு மகள்களுக்கு நல்ல முறையில் மார்க்கப் பயிற்சி கொடுத்தாரோ அவரும் நானும் இந்த இரண்டு விரல்களும் ஒன்றாக இணைந்திருப்பது போன்று ஒன்றாக இருப்போம்.'' (முஸ்லிம்)

மனைவியிடம் அழகிய முறையில் நடந்து கொள்வது பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

''உங்களில் தம் மனைவியிடம் நல்ல முறையில் நடந்து கொள்பவரே உங்களில் மிகச் சிறந்தவர் ஆவார். பிறகு தமது முன்மாதிரியைக் காட்டியவாறு, வ அன கைருக்கும் லி அஹ்லீ எனக் கூறினார்கள். அதாவது பாருங்கள். நான் என் மனைவி மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில் உங்களில் மிகச் சிறந்தவனாக இருக்கிறேன்.'' (திர்மிதி)

பிறகு தாயின் கண்ணியத்தையும், மதிப்பையும் எந்த அளவுக்கு நிலைநாட்டினார்கள் என்றால், அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

''சுவர்க்கம் உங்கள் தாய்மார்களின் காலடிகளின் கீழ் இருக்கின்றது.'' (புகாரி)

பிறகு எல்லாத் தரத்திலும் பெண்களுக்கு வாரிசுரிமையை வழங்கினார்கள். மேலும் மனைவியின் அனுமதியின்றி அவளது செல்வத்தில் அதிகாரம் செலுத்தும் உரிமையை ஆண்களுக்கு வழங்கவில்லை.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! சமூகத்தில் பொதுவான ஏழைகளும், வறியோர்களும் எந்த அளவுக்கு பலவீனமானவர்களாகவும் ஒன்றுமற்றவர்களாகவும் கருதப்படுகிறார்கள் என்றால், எவரும் அவர்களை கட்டித் தழுவுவதை விரும்புவதில்லை; எவரும் அவர்களின் அருகில் அமர விரும்புவதில்லை; அவர்களை தம் அருகில் வர வைக்க விரும்புவதில்லை. அவர்களுடன் நடந்து செல்வதையும் தனது கவுரவக் குறைவாகக் கருதுகின்றனர்.

ஆனால் மனிதத்துவத்திற்கு பேருதவி புரிந்த நமது நபி கரீம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தே தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் பெரும்பாலும் இந்த துஆவை செய்து வந்தார்கள்:

''இறைவா! என்னை ஏழையாகவே வாழ வைப்பாயாக. மேலும் அந்த நிலையிலேயே ஏழைகளிலிருந்தே எழுப்புவாயாக.'' (திர்மிதி)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஸாஹிர் என்ற பெயரைக் கொண்ட ஒரு கிராமவாசி, உருவத்தில் அவர் மிகவும் சாதாரண காட்டரபியைப் போன்று இருந்தார். ஒருமுறை அவர் கடைவீதியில் தனது பொருள்களை விற்றுக் கொண்டிருந்தார். மேலும் வியர்வையால் நனைந்திருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்குப் பின்னாலிருந்து அவருடைய தோளில் தமது கையை வைத்தார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என அவருக்குத் தெரிந்தபோது அவர் மகிழ்ச்சியாலும், அன்பினாலும் தனது முதுகை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உடலுடன் நன்கு தேய்க்க ஆரம்பித்தார். எனது இந்த அடிமையை யார் விலைக்கு வாங்கிக் கொள்வார்? என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னை யார் விலைக்கு வாங்குவார்? அது உங்களுக்கு மிகவும் குறைந்த விலையுடைய வியாபாரமாகி விடும் என்றார். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவ்வாறன்று. அல்லாஹ்வின் பார்வையில் நீர் நஷ்டத்திற்குரிய வியாபாரமல்ல. அல்லாஹ்விடம் உமக்கு அதிக விலையும் மதிப்பும் இருக்கிறது எனக் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது தொகுதி 3)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருமண விருந்தில் ஏழைகளையும், வறியோர்களையும் அழைக்குமாறு மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். செல்வந்தர்களை மட்டும் அழைத்து ஏழைகளை புறக்கணிக்கின்ற விருந்து மிகவும் தீயதாகும் எனக் கூறினார்கள். (புகாரி, கிதாபுன் நிகாஹ்)

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! மனிதத்துவம், Humanity என்பதெல்லாம் எலும்பினாலும் தோலினாலும் உருவான உடலுக்குப் பெயரல்ல – அதற்கு கண்ணியமளிப்பதற்கு அல்லது அதை ஓர் உயர்ந்த இடத்தில்

வைத்து வணங்குவதற்கு. மாறாக, மனிதத்துவம் என்பது மனிதனுடைய உள்ளத்தின் சிந்தனைகள், மூளையின் சிந்தனைகள், உணர்வுகள், அவனுடைய ஆன்மாவின், நல்லொழுக்கத்தின், ஆன்மீக நிலைகளின் பெயராகும்.

இந்த நல்லொழுக்கங்களை வளர்ப்போமென்றால், முன்னேற்றமடையச் செய்ய முயற்சி செய்வோம் என்றால் அவர் மனிதத்துவத்தை நிலைநாட்ட முயற்சி செய்தார் எனக் கூற முடியும். இந்த வகையில் நாம் நமது எஜமானரும் பின்பற்றத்தகுந்தவருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையைப் பார்க்கும்போது எத்தகைய அற்புதமான ஆச்சரியமான முன்மாதிரிகள் காணப்படுகின்றனவென்றால், அவற்றிற்குரிய உதாரணத்தை வேறு எங்கும் காண்பது சாத்தியமில்லாததாகும்.

ஒரு மனிதர் தனது நண்பர், உறவினர், ஒரே கொள்கையைக் கொண்டவர், ஒரே மார்க்கத்தைச் சேர்ந்த மக்கள் ஆகியோருடன் நல்லிணக்கத்துடன் நடந்து கொள்வார். ஆனால் அவர் மற்றவர்களுடன் – இன்னும் சொல்லப் போனால் எதிரிகளுடன், பகைவர்களுடன் எப்படி நடந்து கொள்கிறார் என்று பார்க்க வேண்டும்.

♦ ஒருமுறை ஒரு யூதருடைய ஜனாஸா வந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது யூதரின் ஜனாஸாவாகும் என ஒருவர் கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ‘அவரிடம் உயிர் இருந்ததில்லையா? அவர் மனிதர் இல்லையா?’ எனக் கேட்டார்கள். (புகாரி. கிதாபுல் ஜனாயிஸ்)

ஹஸ்ரத் யஃலா பின் முர்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் பல பயணங்களில் சென்றிருக்கிறேன். அன்னார் ஒரு மனிதரின் சடலம் கீழே கிடக்கக் கண்டு அதை அடக்கம் செய்யக் கூறாமல் இருக்க நான் ஒருபோதும் கண்டதில்லை. அவர் முஸ்லிமா? அல்லது நிராகரிப்பாளரா? என்று அவர்கள் ஒருபோதும் கேட்டதில்லை.

♦ பத்ர் போரில் இறந்த இணை வைக்கும் 24 தலைவர்களின் சடலத்தையும் அவர்களே பத்ர் களத்தின் ஒரு குழியில் இறங்கி அடக்கம் செய்தார்கள். அது ‘கலீபே பத்ர்’ (Qaleebe Badr) என்று அழைக்கப்படுகிறது.

(புகாரி. கிதாபுல் மகாஸி)

♦ அஹ்ஸாப் போரில் இணை வைப்பவர்களின் ஒரு தலைவர் நவ்ஃபில் பின் அப்தில்லாஹ் மக்ஸமி என்பவர் எதிர்த்துப் போராடும்போது அழிவுக்குள்ளானார். உஹது போரில் மக்கத்து இணைவைப்பவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சடலத்தின் மூக்கையும், காதுகளையும் வெட்டி அந்த சடலத்தை சின்னாபின்னமாக்கி விட்டார்கள். அதுவே இணைவைப்பவர்களின் பழக்கமாக இருந்தது. தமது தலைவருடைய சடலத்துடனும் அவ்வாறே நடந்து கொள்ளப்படும் என இணைவைப்பவர்கள் பயந்தனர். எனவே அந்த எதிரிகள் 10 ஆயிரம் திர்ஹம்கள் எங்களிடமிருந்து வாங்கிக் கொண்டு எங்கள் தலைவரின் சடலத்தை எங்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள் எனக் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாங்கள் சடலத்திற்கு காசு வாங்குவதில்லை. நீங்கள் உங்கள் தலைவரின் சடலத்தைக் காசு தராமலேயே எடுத்துச் செல்லுங்கள் எனக் கூறினார்கள். (தாலியிலுன் நுபுவ்வத்தி லில்வைஹகி தொகுதி 3)

♦ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் ஒரு யூத சிறுவனை தனது வீட்டு வேலைக்காக நியமித்தார்கள். அவன் நோயுற்றபோது அவனை நலம் விசாரிப்பதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவன் வீட்டிற்குச் சென்றார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 3)

♦ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபி ஸமாமா பின் அஸால் ஆவார். அவர் யமாமாவில் இருந்தார். அவர் சார்பாக மக்கத்தினர்களுக்கு கோதுமை வந்து கொண்டிருந்தது. அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் தீய முறையில் நடந்து கொள்கின்றனர் என்று அவருக்குத் தெரிய வந்தபோது, இனிமேல் இங்கிருந்து ஒரு தானியம் கூட மக்காவுக்கு அனுப்ப மாட்டேன் என அவர் தீர்மானித்தார். அதனால் மக்கத்தினர்கள் துன்பத்திற்குள்ளானார்கள். ஹஸ்ரத் ஸமாமா பின் அஸால் (ரலி) அவர்கள் மக்கா வந்தபோது, எனது அன்பிற்குரியவர் அனுமதியளிக்காதவரை யமாமாவிலிருந்து கோதுமையின் ஒரு தானியம் கூட மக்காவுக்கு வராது எனக் கூறினார்.

அப்போது மக்கத்தினர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, தாங்கள் உறவினர்களைப் பேணுமாறு போதனை செய்கிறீர்கள். எங்களின் கோதுமை நிறுத்தப்பட்டு விட்டது. பசியின் காரணமாக நாங்கள் மரணித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் மீது கருணை காட்டுங்கள் என்று விண்ணப்பித்தனர். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸமாமா (ரலி) அவர்களிடம், ஸமாமாவே! இவர்களின் கோதுமையைத் தடை செய்யாதீர் எனக் கூறினார்கள். மனித குலத்திற்கு அருள்பாலிக்கும் இந்த நபி (ஸல்) அவர்களின் பரிவால் மக்கத்தினர்களுக்கு மீண்டும் கோதுமை கிடைக்க ஆரம்பித்தது.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம்)

லாஹூரிலிருந்து வெளியாகும் ‘சத் உபதேஷ்’ என்ற பத்திரிகையின் ஆசிரியர் 7 ஜூலை 1915 –ல் இவ்வாறு எழுதினார்:

“இஸ்லாம் வாளின் பலவந்தத்தினால் பரப்பப்பட்டது என மக்கள் கூறுகின்றனர். ஆனால் நாம் அவர்களின் இந்த கருத்தில் உடன்பட முடியாது................. ஏன்? ஏனெனில் இஸ்லாத்தின் தோற்றுநரிடம் ஆன்மீக ஆற்றல் இருந்தது. மனிதகுலத்தின் மீது அன்பு இருந்தது. அவரிடமிருந்து அன்பு மற்றும் கருணையின் தூய உணர்வு வெளிப்பட்டது. நல்ல சிந்தனைகள் அவருக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தன.”

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதத்துவத்தின் கண்ணியத்திற்காகக் காட்டிய கண்ணியமிக்க நல்லொழுக்கத்தின் ஒரு காட்சியாகும். ஆனால் மேலும் அதிகமான விபரங்களில் சென்று நாம் ஆய்வு செய்தால், ஒவ்வொரு மனிதனின் உடலும் ஆன்மாவும் எவராவது தனது பசியைப் போக்க வேண்டும் என்றும், எவராவது ஒருவர் தனக்குச் சுத்தமான தண்ணீரை வழங்க வேண்டும் என்றும், தன்னை எவரும் வானத்தின் கீழ் வெட்ட வெளியில் கிடக்க வைக்கக் கூடாது என்றும் அடிப்படையான முறையில் எதிர்பார்க்கின்றது. முன்னேற்றமடைந்த இன்றைய உலகமும் உணவு, உடை, உறைவிடம் என்னும் இந்த அடிப்படைப் பொருள்களை கொடுப்பதை மனிதத்துவத்திற்கான தொண்டின் உச்ச கட்டமாகக் கருதுகிறது.

ஆனால் முழக்கமிடும் முன்னேற்றமடைந்த மாபெரும் அரசாங்கங்களும் இந்த முக்கியமான திட்டத்தில் வெற்றி காண முடியவில்லை என்பதை நாம் கேட்கவும் பார்க்கவும் செய்கிறோம். முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கும் நாடுகள் இந்த வகையில் வெட்கமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

ஆனால் இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பே திருக்குர்ஆன் மனிதகுலத்தின் இந்த அடிப்படை உரிமையை ஒப்புக் கொண்டவாறு இவ்வாறு அறிவிப்பு செய்திருந்தது:

إِنَّ لَكَ أَلَّا تَجُوعَ فِيهَا وَلَا تَعْرَىٰ ○ وَأَنَّكَ لَا تَظْمَؤُا فِيهَا وَلَا تَضْحَىٰ ○

அதாவது மனிதனே! நீ இங்கு பசியோடு இருக்கக் கூடாது. ஆடையின்றி இருக்கக் கூடாது. மேலும் நீ இதில் தாகித்தவராகவும் இருக்கக் கூடாது. மேலும் வெயிலில் காய்பவராகவும் இருக்கக் கூடாது. (20:119–120)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் அவர்களுடைய கலீஃபாக்களின் காலத்திலும் இந்த போதனை செயல்படுத்திக் காட்டப்பட்டது. ஆனால் முஸ்லிம் அரசாங்கத்தின் தலைவர்களிடம் மனிதத்துவத்திற்கு கண்ணியமளிப்பதை மறந்து, தன்னலம், சொந்த பயன்களுக்கு முன்னுரிமை வழங்குதல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்குவது இடம்பிடித்துக் கொண்டபோது அங்குள்ள பொதுமக்களும் மனிதத்துவத்தின் அடிப்படை பயன்களிலிருந்து இழப்பிற்குரியோராகிக் கொண்டிருந்தனர்.

மேலும் இன்று பொதுமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் போராட்டம் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. மறுபக்கம் முன்னேற்றமடைந்த நாடுகள் மனிதத்துவத்தின் இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாபெரும் திட்டங்களை தீட்டின. முதலாளித்துவத்திற்கு எதிராக பொதுவுடைமைத்துவம் முன்னால் வந்தது. அவ்வாறு இருந்தும் ஏழைகள் செல்வந்தர்கள் ஆகியோருக்கிடையில் சமத்துவத்தை நிலைநாட்டும் முயற்சி தோல்வியடைந்தது. செல்வந்தர்கள் மேலும் அதிக செல்வந்தர்களாயினர்; ஏழைகள் மேலும் அதிக ஏழைகளாயினர். அதன் காரணமாக மனிதனே மனிதனுக்குப் பகைவனாக மாறினான்.

எனவே ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பற்றி பரிசீலனை செய்து அவற்றை எட்ட வைப்பதற்கான ஏற்பாடு செய்யாவிட்டால் மனிதத்துவத்தின் கண்ணியம் நிலைபெற முடியாது. மனிதன் அமைதியான, சாந்தியான வாழ்க்கை வாழ முடியாது. இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பிற்கேற்ப சரியான பொருளில் செயல்படும்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின்படியும் அழகிய முன்மாதிரியின்படியும் செயல்படும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.

அதன் முதல் கோட்பாடு, செல்வத்தைச் சரியான வழியில் விநியோகிப்பதற்கான ஏற்பாட்டையும், ஆளுமை செய்வதற்கான ஏற்பாட்டையும் செய்வது ஆகும். அதற்காக இஸ்லாம் சொத்துக்களை விநியோகிக்கும் அமைப்பை நிலைநாட்டியுள்ளது. குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் அவர் மகனாக இருந்தாலும் மகளாக இருந்தாலும் – சொத்தை விநியோகம் செய்வதில் அவர்களை பங்குதாரராக ஆக்கி விட்டது. இந்நிலையில் சொத்துக்கள் பங்கிடப்பட்டு சிலருடைய பிடியில் மட்டுமே இருக்க முடியாது.

சொத்தை விநியோகம் செய்வது பற்றி இரண்டாவது கொள்கையாக கூறப்பட்டிருப்பது என்னவெனில், பணத்தை சேமித்து வைப்பதை அல்லாஹ் தடுத்து விட்டான். அல்லாஹ் கூறுகிறான்:

தங்கத்தையும் வெள்ளியையும் குவித்து வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாதிருப்பவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனையைப் பற்றி நீர் அறிவிப்பீராக. (சேகரிக்கப்பட்ட தங்கமும் வெள்ளியுமாகிய) அதனை நரக நெருப்பில் காய்ச்சப்படும் நாளில், அதனைக் கொண்டு அவர்களின் நெற்றிகளிலும், விலாப்புறங்களிலும், முதுகுகளிலும் சூடு போடப்படும். (அவர்களிடம்) இது நீங்கள் உங்களுக்காகச் சேர்த்து வைத்த பொருளாகும். எனவே நீங்கள் சேர்த்து வைத்தவற்றைச் சுவைத்துப் பாருங்கள் (என்று கூறப்படும்). (திருக்குர்ஆன் 9:34–35)

குறிப்பாக ஆண்கள் பட்டு, தங்கம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தடை செய்துள்ளான். வீட்டில் தங்கம், வெள்ளி பாத்திரங்களைப் பயன்படுத்துவதையும் தடுத்துள்ளான்.

மூன்றாவது கொள்கை, வட்டிக்குத் தடை விதித்ததுடன் தொடர்புடையதாகும். ஏனெனில் பணத்தினால் பணத்தை சம்பாதிக்கலாம். அதன் மூலமாக செல்வந்தர் எவ்வித உழைப்பும் முயற்சியுமின்றி செல்வந்தரிலும் செல்வந்தராக மாறிக் கொண்டே செல்கின்றார். எனவே வட்டி மனிதகுலத்தின் தலை மீது இருக்கும் ஒரு சாபமாகும். உலகம் அமைதி, சாந்தியின் மூச்சு விட விரும்பினால் அதற்குரிய வழி, உலகத்திலிருந்து வட்டியை ஒழிக்க வேண்டும். இவ்வாறு செல்வத்தை சில கைகளுக்குள் ஒன்று சேர்வதை தடுக்க வேண்டும்.

நான்காவது கொள்கை, மனிதகுலத்திற்காக அனுதாபம் காட்டுகின்ற, கவலையைப் போக்குகின்ற உணர்வுகளைத் தூண்ட வேண்டும். இது தொடர்பாக இஸ்லாத்தின் போதனை என்னவெனில், அல்லாஹ் கூறுகிறான்:

هُوَالَّذِیۡ خَلَقَ لَکُمۡ مَّا فِی الۡاَرۡضِ جَمِیۡعًا அதாவது, அவனே உலகில் உள்ள அனைத்தையும் உங்கள் அனைவருக்காகவும் படைத்துள்ளான். (2:30)

அதாவது, இந்த உலகில் உள்ள அனைத்தும் மனிதகுலத்தின் ஒட்டுமொத்தமான சொத்து ஆகும். இறைவன் ஒருவருடைய சொந்தத் திறமை, உழைப்பு ஆகியவற்றின் விளைவாக அதிக செல்வந்தராக ஆக்கி இருக்கிறான் என்றால் அவருடைய அதிகப்படியான செல்வங்களில் மற்ற குறைந்த திறமையைக் கொண்ட ஏழைகள், வறியோர்கள் ஆகியோருக்கும் பங்கு இருக்கிறது என்று அவர் உறுதி கொள்ள வேண்டும். அவருக்காக இஸ்லாம் ஸகாத்திற்கான கட்டளையை இட்டிருக்கிறது.

மேலும் அதற்கென்று விகிதாச்சாரத்தையும் வகுத்துள்ளது. அவ்வாறே எந்தச் செல்வம் செலவிடப்படாமல் ஆண்டு முழுக்க வீணாகக் கிடக்கின்றதோ அதன் மீதும் ஸகாத்தை வித்துள்ளது. மேலும் தேவைக்கு அதிகமாக வீட்டில் இருக்கும் நகைகளின் மீதும் ஸகாத்தை விதித்துள்ளது. இவ்வாறு அனுதாப உணர்வுகளுடன் உரிமையுள்ள, தேவையுடைய மனிதகுலத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை இறைவன் உருவாக்கி இருக்கிறான்.

கண்ணியத்திற்குரிய செவியேற்பவர்களே! இதைத் தவிர மனிதத்துவத்திற்கு என்ன அபாயம் இருந்ததோ அது இன்றும் இருக்கிறது. அது குலம், கோத்திரத்தில் வித்தியாசம் பாராட்டுவதும், நிற, இன பாகுபாடு காட்டுவதும் ஆகும். பிறகு மார்க்கக் கருத்து வேறுபாடுகள் எந்த அளவுக்கு மனிதனை மனிதத்துவத்திலிருந்து வீழ்த்தி விட்டதென்றால், அதன் முடிவு கொலை, கொள்ளை வரை சென்றடைந்து விட்டது. மனித தீவிரவாதம், தற்கொலைத் தாக்குதல்கள் மட்டுமின்றி மிகவும் நாசமாக்கக் கூடிய ஆயுதங்கள், அச்சுறுத்தும் தாக்குதல்களின் விளைவாக முதியோர், பெண்கள், அப்பாவி உயிர்கள் கொல்லப்படுவதை அன்றாடம் நாம் கேட்டும் பார்த்தும் வருகிறோம். திருக்குர்ஆன் அப்படிப்பட்ட அப்பாவிகளைக் கொல்வது முழு மனிதகுலத்தையும் கொல்லுவது எனக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறது:

مَنۡ قَتَلَ نَفۡسًۢا بِغَیۡرِ نَفۡسٍ اَوۡ فَسَادٍ فِی الۡاَرۡضِ فَکَاَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِیۡعًا

وَمَنۡ اَحۡیَاهَا فَکَاَنَّمَاۤ اَحۡیَا النَّاسَ جَمِیۡعًا

“கொலைக்குப் பதிலாகவோ, நாட்டில் குழப்பத்தைப் பரப்பினாலோ அன்றி, ஒருவரை கொலை செய்கின்றவர் எல்லா மக்களையும் கொலை செய்தவர் போன்றவராவார். ஒருவருக்கு உயிர் கொடுக்கின்றவர் எல்லா மக்களுக்கும் உயிர் கொடுப்பவரைப் போன்றவராவார்.” (திருக்குர்ஆன் 5:33)

எனவே முஸ்லிம் தீவிரவாதிகளாக இருந்தாலும் அல்லது முஸ்லிமல்லாத தீவிரவாதிகளாக இருந்தாலும், முன்னேற்றமடைந்த நாடுகளின் நாசமாக்கும் ஆயுதங்களை விநியோகம் செய்பவர்களாக இருந்தாலும், முன்னேற்றமடைந்த நாடுகளின் இந்த நாசமாக்கும் ஆயுதங்களை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துபவர்களாக இருந்தாலும் அவர்கள் மனிதகுலத்தின் மீது பேரருள் புரிந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த அடிப்படையான போதனையின்படி செயல்படாதவரை மனிதகுலத்திற்கு எப்போதும் அபாயம் இருந்து கொண்டிருக்கும்.

இந்த அமைதியை வழங்கும் தூதுச் செய்தியை எடுத்துச் சென்றவாறு நமது அன்பிற்குரிய இமாம் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் உலக தலைவர்களுக்கு மாபெரும் மாளிகைகளுக்கும் பாராளுமன்றங்களுக்கும் சென்று உலக சமுதாயங்களுக்கு எச்சரிக்கின்றார்கள்.

ஹுஸூர் அவர்கள் 11 ஜூன் 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாவின்போது இலண்டன் பார்லிமெண்ட் ஹவுஸில் ஆற்றிய தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்:

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது முழுமையான தூய வாழ்வையும் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக அர்ப்பணித்து விட்டார்கள். இதுவே அன்னாரின் உயர்ந்த குறிக்கோளாக இருந்தது. அன்னார் (ஸல்) தீவிரவாதத்தின் எந்த போதனையும் போதிக்கவில்லை என்பதை மனிதகுலம் உணர்ந்து கொள்ளும் காலம், புரிந்து கொள்ளும் காலம் நிச்சயமாக வரவிருக்கிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முழுக்க முழுக்க சாந்தி, அன்பு, அனுதாபம் ஆகியவற்றிற்கான போதனை மட்டுமே கொண்டு வந்தார்கள் என்பதை மனிதகுலம் உணர்ந்து கொள்ளும்.......

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்த போதனைகளின்படியே செயல்படுகிறது. அவற்றின்படியே வாழ்க்கை நடத்துகிறது. ஒற்றுமை, நல்லிணக்கம், அனுதாபம் ஆகியவற்றின் இந்த போதனையைத்தான் நாங்கள் உலகின் மூலை முடுக்குகள் வரை சென்றடைய வைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகரற்ற, இணையில்லாத மென்மையை, அன்பை, பரிவை பின்பற்றுகிறோம்.”

(உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் உருது பதிப்பு பக்கம் 127)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சார்பாக இங்கிலாந்தில் நடைபெற்ற 9–ஆம் ஆண்டு அமைதிக் கருத்தரங்கில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

“உலகத்தையும் மனிதகுலத்தையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற முயற்சியில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உறுப்பினர்களாகிய நாங்கள் ஈடுபட்டுக்

கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம், நாங்கள் இந்த காலத்தில் அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக அனுப்பியுள்ள காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும் அவர்கள் அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையாகத் தோன்றிய ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஊழியராக தோன்றியுள்ளார்கள். ஏனெனில் நாங்கள் எங்களுடைய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் போதனைகளின்படி உள்ளத்தாலும் உயிராலும் செயலாற்றுகிறோம்.

எனவே உலகத்தின் நிலைமைக் கண்டு எங்களுடை உள்ளம் மிகவும் கடுமையாக கவலையிலும் துக்கத்திலும் ஆழ்ந்துள்ளது. மனிதகுலத்தை அழிவிலிருந்தும் துன்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற்கு நாங்கள் செய்யும் முயற்சிக்குப் பின்னால் இந்த துக்கமும் கவலையும்தான் செயல்படுகிறது. எனவேதான் எளியவனும், எல்லா அஹ்மதி முஸ்லிம்களும் உலகில் நிம்மதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.''

(உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் உருது பதிப்பு பக்கம் 46)

மேலும் 11 ஜூன் 2013 அன்று இலண்டன் பார்லிமெண்டு ஹவுஸில் ஆற்றிய சொற்பொழிவில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினர்கள்:

''உலக அமைதியையும், ஒற்றுமையையும் நிலைநாட்டும் முயற்சியில் அனைவரும் ஒருவர் மற்றவருடைய, எல்லா மார்க்கங்களுடைய கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டும். இது காலத்தின் முக்கியத் தேவையாகும். இல்லையென்றால் அபாயமான விளைவுகள் தோன்றலாம்.

உலகம் ஒரு Global Village (உலக கிராமம்) ஆகி விட்டது. எனவே ஒருவருக்கொருவர் கண்ணியமாக நடந்து கொள்வது இல்லாமல் போய்விட்டதனால், அமைதியை வளர்ப்பதற்காக ஒருவருக்கொருவர் ஒற்றுமை உருவாகாமல் போய்விட்டதனால் உள்ளூர் அல்லது நகரம் அல்லது ஏதாவது ஒரு நாட்டிற்கு மட்டும் நஷ்டம் ஏற்படாது. மாறாக, உண்மையில் இவை அனைத்தும் உலக அழிவுக்குக் காரணமாக அமையும். நாம் அனைவரும் சென்ற கால இரண்டு உலகப் போர்களின் பயங்கரமான நாசங்களைப் பற்றி நன்றாக அறிந்திருக்கிறோம். சில நாடுகளின் கொள்கைகளின் காரணமாக இன்னோர் உலகப் போருக்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

மூன்றாம் உலகப் போர் ஆரம்பித்து விட்டால், நீண்ட காலம் வரை நிலைத்திருக்கும் இந்த அழிவுக்குரிய தாக்கங்களினால் மேற்கத்திய நாடுகளும் பாதிப்படையும். அவர்கள் தாமாகவே தங்களை இந்த அழிவிலிருந்து காப்பாற்றினாலும் சரி; அவர்களே தமது எதிர்கால சந்ததிகளை போரின் நாசத்திற்குரிய, அழிவை ஏற்படுத்தக்கூடிய விளைவுகளிலிருந்து பாதுகாத்துக் கொண்டாலும் சரியே! ஏனெனில் அழிவை ஏற்படுத்தக் கூடிய இந்தப் போர் அணு ஆயுதப் போராகவே இருக்கும். உலகம் சென்று கொண்டிருக்கும் அந்தப் பாதையில் நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு போர் மூளும் அபாயம் இருக்கிறது. இந்த பயங்கரமான விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்காக நீதி, நேர்மை, நாணயம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டியது வரும். வெறுப்புகளை சூடேற்றி உலக அமைதியை அழிக்க முயல்கின்றவர்களுக்கு எதிராக ஒன்றாக இணைந்து அவர்களை தடுக்க வேண்டியது வரும். எனது விருப்பமும், உள்ளத்தின் துஆவும் என்னவெனில், இறைவன் பெரும் சக்திகளுக்கு இது தொடர்பாக தமது பொறுப்புகளையும், கடமைகளையும் மிகவும் நீதியுடனும் சரியான முறையிலும் நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.''

(உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் உருது பதிப்பு பக்கம் 129)

கண்ணியத்திற்குரிய செவியேற்போரே! மனிதகுலத்திற்கு பேருதவி புரிந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தமது வாழ்வில் ஹஜ்ஜத்துல் விதா என்ற பெயரால் புகழ்பெற்ற ஹஜ்ஜின்போது ஆற்றிய உரை மனிதத்துவத்தின் மாண்பை உயர்த்தக்கூடியதும் உயரமாக பறக்கவிடப்பட்டதுமான கொடியாகும். அது மறுமை வரை பகிரங்கமான முறையில் பறக்க விடப்பட்டுக் கொண்டிருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 9 –ஆம் ஆண்டு ஸுல்ஹஜ் மாதம் 11 –ஆம் நாளன்று வருகை தந்திருந்த முஸ்லிம்களுக்கு முன்னால் நின்றவாறு ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இதுவாகும்:

''மக்களே! கேளுங்கள். உங்கள் இறைவன் ஒருவன் ஆவான். அவ்வாறே உங்கள் தந்தை ஒருவர் ஆவார். (அதாவது நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததிகள் ஆவீர்கள்.) எந்தவோர் அரபிக்கும் அரபி அல்லாதவரை விடவோ எந்தவோர் அரபி அல்லாதவருக்கும் அரபியை விடவோ எந்தச் சிறப்பும் இல்லை. கருப்பருக்கு வெள்ளையரை விடவோ அல்லது எந்த வெள்ளையருக்கு கருப்பரை விடவோ எந்தச் சிறப்பும் இல்லை – இறையச்சம் கொண்டவராக இருப்பவரைத் தவிர. உங்களில் அதிக இறையச்சம் கொண்டவரே அல்லாஹ்விடத்தில் உங்களில் அதிக கண்ணியமிக்கவர் ஆவார்.''

மேலும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''எல்லா மனிதர்களும் – அவர் எந்த சமுதாயத்தை சாந்தவராக இருந்தாலும் எந்த விதமானவராக இருந்தாலும் – மனிதன் என்ற முறையில் அவர்கள் ஒரே அந்தஸ்தைக் கொண்டவராக இருக்கின்றனர். மேலும் தமது இரண்டு விரல்களையும் ஒன்றாக இணைத்து, இந்த இரண்டு விரல்கள் ஒன்றுக்கொண்டு சரிசமமாக இருக்கின்றதைப் போன்றே மனிதகுலமாகிய நீங்கள் ஒருவருக்கொருவர் சரிசமமான இருக்கின்றீர்கள். உங்களில் ஒருவர் மற்றவர் மீது சிறப்பை வெளிப்படுத்துவதற்கோ அல்லது அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்கோ எந்த உரிமையும் இல்லை. நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் போன்றவர்கள் ஆவீர்கள்.''

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்று ஒரு நீண்ட உரை நிகழ்த்தினார்கள். அதில் தனக்குக் கீழ் பணி செய்பவர்கள், அடிமைகள், பெண்கள் ஆகியோருடன் நல்ல விதமாக நடந்து கொள்வது ஆகியவைப் பற்றி அறிவுரை கூறியவாறு இறுதியில் இவ்வாறு கூறினார்கள்:

''இந்த கட்டளை இன்றைக்காக அல்ல; நாளைக்காக அல்ல. மாறாக, நீங்கள் இறைவனை சென்றடையும் நாள் வரைக்குமான கட்டளையாகும்.''

பிறகு இவ்வாறு கூறினார்கள்: ''இன்று நான் உங்களுக்கு கூறும் விஷயங்களை நீங்கள் உலகின் மூலைகள் வரை எட்ட வையுங்கள். ஏனெனில் இன்று என்னிடமிருந்து கேட்பவர்களை விட என்னிடமிருந்து கேட்காத மக்கள் அதிகமாக செயல்படுத்தக் கூடும்.''

(புகாரி. கிதாபுல் மகாஸி. பாபு ஹஜ்ஜத்துல் விதா)

ஓர் இந்திய தத்துவவாதி திரு. ராம கிருஷ்ணா ராவ் பல நூல்களை எழுதியவர். இவருக்கு **2011 –**ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் பத்மஸ்ரீ பட்டத்தை வழங்கி கண்ணியப்படுத்தியது. இவர் **1996 –**ஆம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கை மற்றும் மனிதகுலத்தின் கண்ணியத்திற்காக செய்யப்பட்ட முயற்சியால் தாக்கத்திற்குள்ளாகி பாராட்டி ஆங்கிலத்தில் கூறிய இரண்டு மேற்கோள்களின் மொழியாக்கத்தை உங்கள் முன்னால் எடுத்து வைக்கிறேன்:

''முஹம்மது அவர்கள் வழங்கிய உலக சகோதரத்துவம் தொடர்பான கோட்பாடுகள் மனிதனின் சமத்துவம் தொடர்பான போதனைகள் மனிதத்துவத்தின் சமூக முன்னேற்றத்தில் அன்னாரின் மகத்தான பங்கை பிரதிபலிக்கின்றன. எல்லா பெரிய மார்க்கங்களும் இந்த போதனைகளையே செய்துள்ளன. ஆனால் இஸ்லாத்தின் தோற்றுநர் இந்த கொள்கைக்கு செயல் வடிவத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஒருவேளை பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு உலக ஐக்கிய நாடுகளின் மனசாட்சி விழிப்புணர்வு கொள்வதன் காரணமாக தலைமுறை தொடர்பான காழ்ப்புணர்ச்சிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படலாம். எல்லா மனிதர்களும் சகோதரத்துவம் என்னும் ஒரே மணியில் கோர்க்கப்படலாம். அப்போது இந்த விஷயத்தின் முக்கியத்துவம் கணிக்கப்படலாம்.

ஆற்றல்மிக்கவர் தனது ஆற்றலினால் வாரிசுரிமையைப் பெறும் சம்பிரதாயம் நிலவி வந்தது. ஆனால் இஸ்லாம் நலிந்தவர்களின் வாரிசுரிமையை வழங்கியது. மனசாட்சியின் ஆரம்பப் பள்ளிக்கூடம் என அழைக்கப்படும் இங்கிலாந்தில் இஸ்லாத்தின் இந்த கொள்கை **1881** –ல்தான் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த சட்டம் The Married Woman's Act (திருமணமான பெண்களுக்கான சட்டம்) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மேலும் முஹம்மது அவர்களின் காலத்தைச் சேர்ந்தவர்கள் – அவர்கள் நண்பர்களாக இருந்தாலும், பகைவர்களாக இருந்தாலும் முஹம்மது அவர்களின் சிறப்பான பண்புகளையும், கறைபடியாத நேர்மையையும், தூய்மையையும், இறையச்சத்தையும் மட்டுமின்றி வாழ்வின் எல்லா களத்திலும் மனித பழக்கவழக்கங்கள் மற்றும் நடந்து கொள்ளும் முறைகள் ஆகியவற்றில் அன்னாரின் முன்மாதிரியை மிகச் சிறந்ததாக ஒப்புக் கொள்கின்றனர்.................. ஒரு நேர்மையான மனிதர் இறைவனின் மிகச் சிறந்த படைப்பு எனக் கூறப்படுகிறது.

முஹம்மது அவர்கள் நேர்மையிலும், நாணயத்திலும் மிகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார். மனிதத்துவம் என்பது அன்னாரிடம் இயல்பாகவே காணப்பட்டது. அன்னாரின் ஆன்மா, அன்பு மற்றும் அனுதாபத்தின் பாடலைப் பாடிக் கொண்டிருந்தது. மனிதனுக்கு தொண்டாற்றுவது, மனிதனை உயர்த்துவது, மனிதனை தூய்மைப்படுத்துவது, மனிதனுக்கு போதனை வழங்குவது, மனிதனை மனிதாக்குவது ஆகியவை அன்னாரின் குறிக்கோளாகவும், வாழ்வின் நோக்கமாகவும் இருந்தது. அன்னாரின் வாழ்வின் ஒரே தூண்டுதலும் வழிகாட்டும் கோட்பாடும் மனிதகுலத்திற்கு நன்மை செய்வதாகவே இருந்தது. அது அன்னாரின் சிந்தனை, சொற்கள், செயல்கள் ஆகியவற்றிலிருந்து தெளிவாகிறது.''

**(ஹாஃபிஸ் முஸஃப்பர் அஹ்மது அவர்கள் இயற்றிய 'உஸ்வயே இன்ஸானே காமில்' பக்கம் 628–629)**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதைகளில் என்ன அருமையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்:

*''ஐரோப்பாவின் அறிவிலிகள் இந்த நபியை முழுமையானவர் இல்லை எனக் கூறுகின்றனர்.*

*மிருகத்தனமானவர்களிடம் மார்க்கத்தைப் பரப்புவது எவ்வளவு கடினமானதாகும்!*

*ஆயினும் ஒரு மிருக்கத்தனமானவரை மனிதனாக்குவது ஓர் அற்புதமாகும்.*

*நுபுவ்வத்திற்கான இரகசியத்தின் பொருள் இதிலிருந்தே கண்டறியப்படுகிறது.''*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள மிருகத்தனமான மக்களுக்கு மனிதத்தன்மையைப் பற்றி அறிவுறுத்தினார்கள். பிறகு மனிதனை நல்லொழுக்கமுள்ள மனிதனாக மாற்றினார்கள். நல்லொழுக்கமுள்ள மனிதனை இறைதொடர்புள்ள மனிதனாக மாற்றினார்கள். பிறகு இறைதொடர்புள்ள மனிதனை இறைவனை வெளிப்படுத்தும் மனிதனாக மாற்றினார்கள். மேலும் மனிதத்துவத்தின் கண்ணியத்தை அதன் உச்சத்திற்கு கொண்டு சென்றார்கள்.

يَارَبِّ صَلِّ عَلٰى نَبِيِّكَ دَائِمًا فِيْ هٰذِهِ الدُّنْيَا وَ بَعْثٍ ثَانِ

பொருள்: இறைவா! உனது நபியின் மீது நிரந்தரமாக அருள் பொழிவாயாக. இவ்வுலகிலும் மீண்டும் உயிர்த்தெழும் நாளிலும் அருள் பொழிவாயாக.

اللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

......☆......☆......☆......

# தரூது ஓதுவதன் அருள்கள் மற்றும் அதன் ஆன்மீகப் பயன்கள்

மவ்லவி தாஹிர் அஹ்மது சீமா, ஆசிரியர் ஜாமி அஹ்மதிய்யா, காதியான்.
மொழியாக்கம்: மவ்லவி M.ஷாஜஹான்

إِنَّ اللَّهَ وَمَلَٰئِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ ۚ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

பொருள்: நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது வானவர்களும் நபி (ஸல்) அவர்கள் மீது அருளை அனுப்புகிறார்கள். நம்பிக்கை கொண்ட மக்களே! நீங்கள் அவருக்கு தரூது மற்றும் சலாத்தை அதிகமாக அனுப்புங்கள். (33:57)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

இந்த இறைவசனத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திலிருந்து வெளிப்படுவதாவது ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் நற்செயல்கள் எவ்வாறு இருந்ததென்றால் அதனை எடுத்துக் கூற அல்லது அதன் மேன்மையை எல்லைக்குள் கொண்டுவர எவ்வித தனிச்சொல்லையும் அல்லாஹ் பயன்படுத்தவில்லை. தனிச்சொல் கிடைத்துவிடும். ஆனால் அவன் பயன்படுத்தவில்லை. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்செயல்களை எடுத்துக் கூறுவது எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். இந்த விதமான வசனம் வேறு எந்த நபியின் மேன்மைக்காகவும் பயன்படுத்தப்படவில்லை. அன்னாரின் ஆன்மாவில் அந்த உண்மை மற்றும் தூய்மை இருந்தது. மேலும் அவர்களின் செயல்கள் இறைவனின் பார்வையில் எந்த அளவுக்கு விருப்பத்திற்கு உரியதாக இருந்ததென்றால் இனி வரக்கூடிய மக்கள் நன்றி செலுத்தும் விதமாக தரூதை அனுப்ப வேண்டும் என்ற கட்டளையை அல்லாஹ் நிரந்தரமாக தந்து விட்டான்.

(அல் ஹகம், தொகுதி 7 பக்கம் 25)

இறை அருட்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எல்லையில்லா அருட்களின் ஒளியின் பாகத்தை பெற ஒரு காரணியாக தரூது ஷரீஃபை வைத்திருப்பது அல்லாஹ் நம்பிக்கை கொண்டோர் மீது செய்துள்ள மாபெரும் கருணை ஆகும். இதனால் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தமது சக்தி மற்றும் வாய்ப்பிற்கேற்ப அருள்களை பெற முடியும்.

தரூது ஷரீஃபின் பரக்கத்துகள் தொடர்பாக எண்ணற்ற ஹதீஸ்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை வாசகர்களுக்கு முன் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு அபீ தல்ஹா (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி தென்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜிப்ராயீல் (அலை) என்னிடம் வந்து, முஹம்மதே! உங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த எவராவது ஒருவர் உங்கள் மீது தரூது மற்றும் ஸலாம் அனுப்பினால் நான் அவர் மீது பத்து முறை தரூது மற்றும் ஸலாம் அனுப்புவேன். இது உங்களுக்கு மகிழ்ச்சிக்கு உரியது இல்லையா எனக் கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஏதேனும் முஸ்லிம் எப்போதெல்லாம் என்மீது தரூது அனுப்பினால் இறைவனும் அவர்மீது தரூது அனுப்புகிறான். எனவே அந்த அடியார் விரும்பினால் குறைவாக அனுப்பட்டும் அல்லது விரும்பினால் அதிகமாக அனுப்பட்டும்.

(இப்னு மாஜா துல் இகாமத்துஸ் பாப் ஸலவாத் அலன்நபி (ஸல்)

ஓர் அறிவிப்பில் வருகிறது. தரூதின் காரணமாக அல்லாஹ், தரூது ஓதுபவரின் பத்து பாவங்களை அகற்றுகிறான். மேலும் அவரின் பத்து படித்தரங்களை உயர்த்துகிறான். (நஸாயீ)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: இந்த ஹதீஸை படித்ததும் நானும் இவ்வாறே செய்ய வேண்டும் என எனது உள்ளத்திலும் விருப்பம் ஏற்பட்டது. எனவே ஒரு நாள் காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன் நான் எனது அனைத்து விருப்பங்களையும் மற்றும் நோக்கங்களையும் விட தரூது ஷரீஃபின் துஆவையே வேண்டுவேன் என்ற எனது இந்த விருப்பத்தைத் தெரிவித்தேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் இதனை விரும்பினார்கள். மேலும் அங்கிருந்த அனைவருடனும் இணைந்து எனக்காக துஆ செய்தார்கள். அப்போதிருந்து எனது அனைத்து விருப்பங்களையும் தரூது ஷரீஃபின் துஆவுடன் இணைத்து அல்லாஹ்விடம் வேண்டுவது எனது நடைமுறை ஆகும்.

(திக்ரே ஹபீப் பக்கம் 236)

அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒரு நாளில் ஆயிரம் முறை என்மீது தரூது அனுப்புவாரோ அவர் இதே வாழ்கையில் சுவர்க்கத்தில் தமது அந்தஸ்தை பார்த்துக் கொள்வார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஸ் (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் ஷேக் கரம் இலாஹி சாஹிப் பட்யாலவி (ரலி) அவர்களின் கூற்று என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் ஒரு முறை நான் காதியானிலிருந்து திரும்பி செல்ல ஆயத்தமானேன். நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் எனக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்கள் என்றேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதிகமாக தரூது ஷரீஃப் மற்றும் இஸ்திஃபார் அதிகமாக ஓத அறிவுறுத்துவார்கள். இதை விட அதிகமாக நான் என்ன கூற முடியும். எனவே தரூது ஷரீஃப் எவ்வளவு முடியுமோ ஓதுங்கள். நடந்து கொண்டும். சுற்றித் திரிந்தவாறும் இஸ்திஃபார் ஓதுங்கள் என்றார்கள். எனவே வாய்ப்புக்கேற்ப இதனை நான் கடைபிடித்து வந்தேன்.

பிறகு கூறுகிறார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குத்தாம்களுடன் முபாரக் பள்ளிவாசலில் உணவு அருந்திக் கொண்டு இருந்தார்கள். மேலும் நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் மெதுவாக என்னிடம் மஃரிப் தொழுகைக்கு பின் எவ்வளவு நேரம் கடந்திருக்கும் எனக் கேட்டார்கள். அதற்கு நான், ஏறக்குறைய ஒரு மணி நேரம் என்று கூறினேன்.

அவர்கள் கூறினார்கள்: நாம் எவருக்காவது தரூது ஷரீஃப் மற்றும் இஸ்திஃபார் ஓத கூறினால் பெரும்பாலான மக்கள் நேரமின்மை மற்றும் வாய்ப்பு இல்லாமையை காரணமாக

கூறுகின்றனர். ஆனால் இந்த காரணம் சரியானது இல்லை. பாருங்கள். நாம் ஹஸ்ரத் சாஹிபின் கூற்றையும் கவனமாக கேட்டு வந்தோம். மேலும் நான் ஐநூறு முறை இந்த ஒரு மணி நேரத்தில் தரூது ஷரீஃப் ஓதி விட்டேன்.... அல்லாஹ்வின் அருளால் நான் இந்த முக்கிய தத்துவத்தை கடைபிடித்தவனாக அதிக பலனை பெற்றுள்ளேன். மேலும் கவனமின்மை அல்லது நற்செயல் வீண்செய்தல் இல்லை எனில் இவ்வாறாக மனிதன் நேரத்தை வீணாக்குவதிலிருந்து அதிகமாக தப்பித்துக் கொள்ள முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது முழு கவனத்துடன் மற்றும் கொள்கை பிடிப்புடன் மேலும் உண்மையான அன்பு கொண்டவாறு மனப்பூர்வமாக ஓத வேண்டும். மேலும் வெறும் எண்ணிக்கையின் அதிகம் எவ்வித மேன்மையும் சிறப்பும் கொண்டதல்ல. மாறாக, மேன்மைக்குரியது என்பது சிறந்ததிலும் சிறந்த தரூதை நபி (ஸல்) அவர்கள் மீது அனுப்புவதாகும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்மீது தரூதை அனுப்புங்கள். நீங்கள் என்மீது தரூது அனுப்புவது உங்களுடைய தூய்மை மற்றும் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்

இந்த ஹதீஸ் மிகவும் தெளிவாகும். தரூது ஷரீஃப் தூய்மையை பெற காரணியாக இருக்கிறது. இதனால் சிந்தனை தூய்மை அடைகிறது. மேலும் செயல்கள் தூய்மையாகிறது. எவரேனும் ஆய்வு செய்வதாயின் நிச்சயம் செய்து பார்க்கட்டும். அதிகமாக ஆயிரக்கணக்கில் தரூது ஓதிவிட்டு அதனுடன் கையூட்டும் பெறுவது, அதனுடன் நம்பிக்கையற்ற செயல் செய்வது, அதனுடன் மற்றவர்களை ஏசிப் பேசுவது என்றிருந்தால் தரூதின் அருள்களை நாமே நமது கைகளால் வீணாக்குவதாகும்.

தரூது ஷரீஃப் ஓதுவதால் ஒன்று உள்ளத்தில் இறைவனின் அன்பில் வேகம் பிறக்கிறது. இரண்டாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உள்ளம் ஈர்க்கப்படுகிறது. மேலும் மனிதன் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த செயல்களை செய்கிறான். ஆக அவன் நபியின் நடைமுறையை நேசிக்க மற்றும் பின்பற்றக் கூடியவனாக ஆகிவிடுகிறான். தரூது ஷரீஃப் மனிதனை ஆன்மீக நோயிலிருந்தும் தூய்மைப்படுத்தி உயரிய மேன்மைகளை வழங்குகிறது.

அந்த அன்பிற்குரியவர்கள் மீது நாள்தோறும் நூறு நூறு முறை தரூது அனுப்புகங்ள. முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நபிமார்களின் தலைவரும் தூயவரும் ஆவார்கள்.

தரூது ஷரீஃபின் அருளால் மனிதனுக்கு அமைதி கிடைக்கிறது. இதனால் மனிதன் என்ன பறவைகளும் பயன் பெறுகின்றன. ஹயாத்தே குத்ஸி தொகுதி 4 பக்கம் 36ல் ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜிகி (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது: காதியானில் தங்கியிருந்த சமயத்தில் ஒரு முறை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகி அவர்களிடம் நூல் தொடர்பான சில வேலைகளை ஒப்படைத்து இருந்தார்கள். அந்த தருணத்தில் தரூது ஷரீஃபின் அருள்களின் சம்பவம் நடைபெற்றது.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் வழிகாட்டலுக்கேற்ப நற்பலனின் பணிகளை செய்யத் தொடங்கினேன். 12 மணிக்கு பள்ளிக் கூடப் பணிகளை முடித்துக் கொண்டு மீதமுள்ள அனைத்து நேரங்களிலும் புத்தக வேலைகளில் ஈடுபடுவேன். அந்த நாட்களில், ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் நகர்புற வீட்டின் ஒரு அறையில் எனது தங்குமிடம் இருந்தது. அறையின் முற்றத்தில் இரண்டு காட்டுப்புறாக்கள் முட்டையிட்டு இருந்தது. ஒரு நாள் வீட்டை சுத்தம் செய்பவர் சுத்தம் செய்தவராக கூட்டை உடைத்து விட்டார். மேலும் முட்டை கீழே விழுந்து உடைந்து விட்டது. நான் அப்போது புத்தக பணியில் மூழ்கியிருந்தேன். கூடு காலியாகவும் முட்டைகள் உடைந்திருப்பதைக் கண்ட புறாக்கள் வேதனையுடன் ஓசை எழுப்பி சிறகுகளை அடித்துக் கொண்டது. அவற்றின் வேதனையுடனான சப்தம் மற்றும் நிம்மதியின்மை என்னை அதிகம் பாதித்தது. நான் எழுதுவதை நிறுத்திவிட்டு அவற்றின் பக்கம் எனது கவனத்தை திருப்பினேன். மேலும் அவற்றின் துன்பத்தில் பங்கெடுத்தவனாக இந்த வாயில்லா ஜீவன்களின் உள்ளத்தை எவ்வாறு அமைதிப்படுத்துவேன் என மிக நீண்ட நேரம் சிந்தித்துக் கொண்டு இருந்தேன்.

ஆனால் எந்த வழியும் தென்படவில்லை. இறுதியாக தரூது ஷரீஃப் எனது நினைவுக்கு வந்தது. ஏனெனில் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆ ஆகும். அல்லாஹ் இதன் நன்மையை எனக்கு தருவதற்கு பதிலாக இந்த பறவைகளுக்கு அமைதியை தரச் செய்தால் இந்த வாயில்லாதவைகளின் துன்பம் அகன்று போகலாம் என்ற எண்ணத்தில் ஓதலாம் என்று நான் இந்த எண்ணத்துடன் தரூது ஷரீஃப் ஓதத் தொடங்கினேன். அப்போது அதன் நிம்மதியின்மை விலகி விட்டது. மேலும் அவை அமைதியாக அமர்ந்து விட்டன. அவை அமைதி அடைந்ததை கண்ட நான் தரூது ஓதுவதை நிறுத்தி விட்டு பேனாவை எடுத்து புத்தகம் எழுதத் தொடங்கினேன். ஆனால் நான் அப்போது சில வரிகள்தான் எழுதியிருப்பேன். புறாக்கள் மீண்டும் நிம்மதியின்மை மற்றும் தமது கூச்சலை வெளிப்படுத்தியது. அதன் வேதனையின் நிலையை பார்த்து நான் மீண்டும் தரூது ஷரீஃப் ஓத ஆரம்பித்தேன். அதன் காரணமாக அவை நிம்மதியாக அமர்ந்து விட்டன. ஆனால் சிறிது நேரத்தில் நான் புத்தக பணியை தொடங்கியதும் அவைகளின் நிலை மீண்டும் மாறி விட்டன. மூன்று நான்கு முறை இவ்வாறு நடைபெற்றது. அதன் பிறகு பாங்கு சொல்லப்பட்டதால் நான் அறையை மூடிவிட்டு பள்ளிவாசலுக்கு சென்று விட்டேன். புறாக்களும் பறந்து சென்றது.

இந்த காலத்தில் அன்னாரை விட அதிக அன்பு மற்றும் நேசத்துடன் தரூது ஷரீஃப் ஓதுபவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆவார்கள். மேலும் இதன் அடிப்படையில் அவர்கள் அருள்களையும் பெற்றுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு முறை தரூது ஷரிஃப் ஓதுவதில் இவ்வாறான சந்தர்ப்பம் அமைந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்புவதில் நான் ஒரு காலம் வரை மூழ்கியிருந்தேன். ஏனெனில் இறைவனின் வழிகள் மிகவும் நுட்பமான வழிகள் ஆகும் என்பது எனது நம்பிக்கையாக இருந்தது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிந்துரை இல்லாமல் கிடைப்பதில்லை என்பதை இறைவனும் கூறுகிறான்: இத்தஹூ இலைஹில் வஸீலஹ் (5:36)

அப்போது நீண்ட நாட்களுக்குப் பிறகு நான் ஆன்மீக காட்சியில் கண்டேன். இரண்டு சுவர்க்க நீர் விளம்பிகள் அதாவது தண்ணீர் வழங்குவர்கள் வருகின்றனர். ஒருவர் உள் வழியாகவும் மற்றொருவர் புற வழியாகவும் எனது வீட்டில் நுழைகிறார்கள். மேலும் அவர்களின் தோள்களில் ஒளிகளின் குவளைகள் உள்ளன.

மேலும் கூறுகின்றார்கள்: ஹாதா பிமா ஸல்லைத்த அலா முஹம்மதின் அதாவது இது நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அனுப்பிய அந்த தரூதின் அருள்கள் ஆகும்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 131)

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு முறை வயிற்றுப்போக்கு வியாதியினால் கடுமையாக நோயுற்றேன். மேலும் 16 நாட்கள் ஆசனவாயில் இரத்தம் வந்த வண்ணம் இருந்தது. மேலும் கூற முடியாத கடுமையான வேதனை இருந்தது..... எனவே

நோயின் நிலை இவ்வாறான போது இறைவன் எனது உள்ளத்தில் மற்ற வைத்தியங்களை விட்டுவிடு. மேலும் ஆற்று மணல் அதனுடன் தண்ணீரும் இருக்க வேண்டும். மேலும் தஸ்பீஹ் மற்றும் தரூதுடன் தமது உடலில் தேய்க்கவும் என உதிக்கச் செய்தான். அப்போது மிக விரைவாக அவ்வாறான மணல் வரவழைக்கப்பட்டது. மேலும் நான் சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அழீம் என்ற இந்த கலீமாவுடன் தரூது ஷரீஃபை ஓதி அந்த மணலை உடலில் தேய்க்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு முறையும் உடலில் மணல்படும்போது எனது உடல் நெருப்பிலிருந்து விடுதலை பெற்றது. அந்த முழு நோயும் விடிவதற்குள் விலகி விட்டது.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 246 அடிக்குறிப்பு)

அன்னார் மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: தரூது, உறுதியான நிலைநிற்றலை பெற ஒரு சிறந்த வழிமுறை ஆகும். அதிகமாக ஓதுங்கள். ஆனால் சடங்கு சம்பிரதாயமாக அல்லாமல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறப்பு மற்றும் கருணையை முன் வைத்தும், அன்னார் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் படித்தர உயர்வுக்காகவும், மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் வெற்றிக்காக ஓதுங்கள். இதன் விளைவு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட இனிய சுவையான கனியாக உங்களுக்குக் கிடைக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 38)

நமது தற்போதைய இமாம் அவர்களும் ஜமாஅத் நபர்களுக்கு அவ்வப்போது தரூது ஓதுவதன் பக்கம் கவனமூட்டி வருகிறார்கள். கிலாஃபத் ஜூப்ளியின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அன்வர் எந்த துஆவின் பக்கம் கவனமூட்டினார்களோ அதில் தரூது ஷரீஃப் தொடர்பாக கூறும்போது குறைந்தபட்சம் தினமும் 33 முறை தரூது ஷரீஃப் ஓதுங்கள் என்று கூறினார்கள். பிறகு 11 மே 2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இந்த துஆக்களை மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறி தரூது ஷரீஃப் அதிகம் அதிமாக ஓதுமாறு வலியுறுத்தினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கோடிக்கணக்கான முறை தரூது அனுப்புங்கள். எனவே எப்போது வரை தரூதில் கவனம் இருக்குமோ அதன் அருளால் ஜமாஅத்தின் வளர்ச்சி மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் அதன் பாதுகாப்பின் ஏற்பாடு இருக்கும். இன்று இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் மீது சேற்றை தெளிக்க முயற்சிக்கின்றார்கள். அவர்கள் இந்த முயற்சியின் விளைவு அவர்களுக்கு தீய முடிவைத் தவிர வேறொன்றும் பெற்றுத் தராது. ஆனால் அவர்கள் இந்த இழிவான முயற்சியின் காரணமாக அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கோடிக்கணக்கான தரூது அனுப்புவது என்ற இந்த உறுதிமொழியை எடுக்க வேண்டும்.

(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 18 ஏப்ரல் 2008)

ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்: எனவே இவ்வாறான சமயங்களில் எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரில் ஒழுங்கீனத்தில் ஒரு புயல் வீசுகிறதோ இறைவனின் வானவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நிச்சயமாக தரூது அனுப்புவார்கள். அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். அனுப்புகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் மற்றும் காலத்தின் இமாமின் அமைப்புடன் மற்றும் ஜமாஅத்துடன் இணைத்துக் கொண்டவர்கள் ஆகிய நமது பணி, நமது துஆக்களை தரூதினால் மூட வேண்டும். உண்மையான உள்ளத்துடன் தரூதை வான்வெளியில் எந்த அளவுக்கு பரப்ப வேண்டும் என்றால் வான்வெளியின் ஒவ்வொரு துகளும் தரூதினால் மனம் கமழ வேண்டும். மேலும் நமது அனைத்து துஆக்களும் இந்த தரூதின் பரிந்துரையால் இறைவனின் சந்நிதானத்தில் சென்று ஒப்புக் கொள்ளத்தக் அந்தஸ்தை பெற வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதும், அவர்களின் குடும்பத்தார் மீதும், நமக்கு இருக்கும் அன்பு மற்றும் நேசத்தின் வெளிப்பாடு இவ்வாறு இருக்க வேண்டும்.

(குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 4 பக்கம் 115)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரூது ஷரீஃபின் அருள்கள் மற்றும் அதன் ஆன்மீக விளைவுகள் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

தரூது ஷரீஃபின் அருள்கள் பற்றி எவ்வளவு கூறினாலும் அது குறைவானதாகும். நான் அதனை அனுபவித்தவன் ஆவேன். என்மீதுள்ள இறைவனின் அருட்கொடைகளுக்கு தரூது ஷரீஃபின் அருள்கள் மற்றும் விளைவுகளுக்கு அதில் பெரும் பங்கு உள்ளது. தரூது ஷரீஃப் ஓதுபவர் மறுமையின் நன்மையை மட்டும் பெறுபவராக இருப்பதில்லை. மாறாக, இந்த உலகத்திலும் கண்ணியத்தைப் பெறுகிறார். ஆனால் இவ்வாறிருந்தும் மனிதனை தேவையில் இருந்து விலக்குகிற மேலும் அதனை ஓதியபின் இயற்கை விதியின் சட்டங்கள் இறைவனின் கரங்களில் இல்லாமல் மாறாக, தரூது ஓதுபவர் அதன் அதிபதி ஆகிவிடுகிற அவ்வாறான தரூதை நான் நம்புவது இல்லை. இந்த இடத்தில் ஹுஸூர் அவர்களின் கூற்றில் உணர்ச்சியின் அடையாளம் தென்பட்டது. மேலும் முகம் சிவந்து விட்டது.

மேலும் கூறினார்கள்: தரூது ஷரீஃபினால் பெரும் அருள்கள் மற்றும் பயன்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. மேலும் அதனை அதிகப்படுத்துவதால் மனிதன் மீது அருள்கள் இறங்குகின்றன. மேலும் அதன் அருளால் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மேலும் அதனால் எண்ணற்ற அருள்கள் உள்ளன. ஆனால் இவ்வாறு இருந்தும் மனிதன், இறைவனை பொருட்படுத்தாமல் மேலும் அவனின் தேவைகளை மறந்தவனாக ஒருபோதும் ஆகிவிடக்கூடாது. எந்த நபி (ஸல்) அவர்களின் மீது தரூது அனுப்பி மக்கள் நன்மை மற்றும் அருளை பெற்று வந்தனரோ அவர் தாமே இறைவனின் கட்டளைகளுக்கு முன்னால் ஒப்புக் கொள்வது தவிர வேறு வழி இல்லாத நேரமும் சில வந்துள்ளது. எனவே தரூது நன்றாக ஓதுங்கள். மற்றும் அதிகமாக ஓதுங்கள். ஆனால் இறைவனை ஆற்றல் மிக்கவன் மற்றும் தேவைகள் இல்லாத இறைவன் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேலும் ஏற்றுக் கொள்வது மற்றும் திருப்தியின் மீது நம்பிக்கையின் அடித்தளத்தை வையுங்கள். இந்த விஷயத்தை எப்போதும் பார்வையின் முன் வைத்துக் கொள்ளுங்கள்.

(ஹஸ்ரத் மவ்லானா முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் ஹலால்பூரி பெயரில் எழுதிய எழுத்துக்கள்)

இறுதியாக நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களின் சொற்களுடன் எனது கட்டுரையை நிறைவு செய்கின்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: அன்பிற்குரிய இறைவனே! எனது அன்பிற்குரிய நபியின் மீது உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை யார் மீதும் நீ அனுப்பியிராத அந்த ரஹ்மத்தையும் தரூதையும் அனுப்புவாயாக. இறைவா! இந்த மகத்தான நபி உலகிற்கு வராதிருந்தால் பிறகு எந்த அளவுக்கு சிறிய சிறிய நபிமார்கள் உலகிற்கு வந்தனரோ அவர்களின் உண்மைக்கு எங்களிடம் எந்தச் சான்றும் இருந்திருக்காது.

اللهمّ صلّ وسلّم وبارك عليه و آله و اصحابه اجمعين.

(இத்மாமுல் ஹுஜ்ஜா பக்கம் 28)

اللّٰھم صلِّ علی محمّدٍ وعلی اٰل محمّدٍ وبارِك وسلِّم انك حمیدٌ مجیدٌ